தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இந்து சமய அறநிலையத்துறை பணிகள் தேர்வுக்காக தொகுக்கப்பட்ட்து.

# இந்து சமயம் ஒரு அறிமுகம்

இந்து சமயம் இந்தியாவில் தோன்றிய, காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்று. ஏறக்குறைய **850** மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது.பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலேயே வசிக்கின்றார்கள். நேபாளம், இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், சுரினாம், ஃபிஜி தீவுகள், அமெரிக்கா, கனடா மற்றும் பிற பல நாடுகளிலும் இந்துக்கள் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் வசிக்கின்றார்கள்.

பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தை தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனைக் நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றைக் உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம்.

ஆகக் குறைந்தது, கி.மு **1500** ஆண்டுக்கு அணித்தான வேத காலப் பண்பாட்டில் தோற்றம் பெற்றது.

முக்கியமாக, நம்பிக்கை, அன்பு, உறுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எல்லாவிதமான சமயச் செயற்பாடுகளும், இறுதியாக ஒரே தன்னுணர்வு நிலைக்கே இட்டுச் செல்கின்றன. அதனால்தான் இந்து சமயச் சிந்தனைகள் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கின்றன.

ஒரு இந்துவுக்கு, 'நிலையான தர்மம்' என்பதை வரையறுப்பதில், இந்த எண்ணமே உந்து சக்தியாக உள்ளது.

இந்து சமயம் வேதங்களையும், தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மீக அடிப்படையில் தங்கியுள்ளது.

www.iyachamy.com

வேத/தத்துவஞானப் பிரிவுகள், பக்தி இயக்கப் பிரிவுகள், மற்றும் தந்திர ஆகமப் பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனையோட்டங்கள் அனைத்தும் இந்து சமயம் என்கின்ற ஒரே சமுத்திரத்திலே சங்கமமாகின்றன.

"சனாதன தர்மம்" அல்லது "நிலையான தத்துவஞானம்/இசைவு நம்பிக்கை" என்பதே பல ஆயிரம் ஆண்டுகளாக இந்து சமயத்தைக் குறித்துவந்த பெயராகும். இந்துக்களைப் பொறுத்தவரை, இது, மனிதனால் உருவாக்கப்பட்டவற்றைக் கடந்து, தனிமனித விருப்பு வெறுப்புக்களைக் குறியாது, தூய உணர்வுபூர்வமான அறிவியலைக் குறிக்கும் சில ஆன்மீகக் கொள்கைகள் என்றும் நிலையானவையாக இருக்கின்றன என்ற எண்ணத்தைப் பற்றிப் பேசுகின்றது.

இந்து சமயத்தில் பல வகையான தர்மங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் பக்தி யோகம், கர்ம யோகம், இராஜ யோகம், மற்றும் ஞான யோகம் ஆகியன முக்கியமானவை. இந்த யோகங்கள் இந்து மதத்தின் இரண்டு முக்கியமான புத்தகங்களான பகவத் கீதை மற்றும் யோக சூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்துக்கள் கொள்ள வேண்டிய தலையாய நான்கு இலக்குகளாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை கருதப்படுகின்றன. அனைத்து உயிர்களும் இளமையில் பொருள், இன்பம் (உடல், உள்ளம், மற்றும் உணர்வு) ஆகியவற்றைத் தேடுதல் இயல்பு என்றும், மனம் முதிர்வடைந்தவுடன் இவற்றின் நெறிசார்ந்த தேடுதலை உயர்கட்டமைப்பான அறத்தின்கீழ் முறைப்படுத்துவரென்றும் கூறப்படுகிறது. இருந்தும், வாழ்வில் நிலையான யாவுங்கடந்த மகிழ்நிலையைத் தருவது வீடு, முக்தி, உய்வு, கடைத்தேற்றம் என்று பலவாறாக அழைக்கப்படும் பிறப்பு இறப்பற்ற விடுதலை நிலையேயென கூறப்பட்டுள்ளது. இந்த நான்கு இலக்குகளில் அறம், வீடு ஆகியனவற்றை கரைகளாகவும், இன்பம், பொருள் ஆகியவற்றை அவற்றிடையே ஓடும் ஆறு எனவும் சிலர் நோக்குவர்.

இறைத்தொண்டு என்பது கோவில்களைக் காப்பாற்றி அக்கோவில்களில் குடியிருக்கும் கடவுளுக்கான வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்வதும், கோவில்கள் இல்லாத ஊர்களில் கோவில்கள்

www.iyachamy.com

www.iyachamy.com

கட்டி வழிபாடுகள் ஏற்பாடு செய்வதும், பல ஊர்களில் சேதப்பட்டிருக்கும் கோவில்களை புனரமைத்து வழிபாடு முறைகளைத் தொடரச்செய்வதும் ஆகும். மக்கள் சேவை என்பது, ஏழை மக்களுக்கும், இல்லாத/இயலாத மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து, கல்விச்செல்வம் ஆகியனவற்றை அளிப்பதும் ஆகும்.

சிந்து என்ற சொல், நதி, அகண்ட நீர்பரப்பு, கடல் என்றும் பொருள்படும். இந்தியாவின்மீது படை தொடுத்துக் கொண்டிருந்த பாரசீகர்கள், சிந்து என்ற சொல்லை உச்சரிக்க இயலாமல் இந்து என்று அழைத்தனர். இதுவே பின்னர் இந்தியா என்று மறுவிற்று.

எனவே, பரவலான ஒரு பார்வையில் இந்து சமயத்தை மகத்தான ஒரு நியமத்தொகையாகக் கொள்ளலாம், அது மிகப்பெரிய ஒரு சிந்தனை முறைமை- இந்திய துணைக்கண்டத்திலும் அதையொட்டிய பகுதிகளிலும் தோன்றிய அத்தனை மதங்களும் சம்பிரதாயங்களும், விதிமுறைகளும், பழக்க வழக்கங்களும், பண்பாட்டு, மொழி மரபுகளும் இந்து சமயத்தின் உள்ளடக்கம். எனவேதான் வேதங்களை ஆதாரமாகக் கொண்ட, வேத மரபின் விதிமுறைகளைப் பின்பற்றும் மதங்கள் பல [**वेदसम्मत – Vedasammata]** இந்து சமயத்தில் குவிந்திருப்பதைப் பார்க்கும்போதே வேதங்களை உயர்வாய்க் கொள்ளாத நடைமுறைகளும் இந்து சமயத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். அதே போல், இந்து சமயத்தில் உள்ள சில மதங்களும் சம்பிரதாயங்களும் அக்னி வழிபாட்டையும் அது சார்ந்த சடங்குகளையும் முக்கியமாய் கருதுகின்றன என்றால், அக்னி வழிபாடு செய்யாத மரபுகளும் அதனுள் இருக்கின்றன. பரவலாக வழிபடப்படும் இந்திய கடவுளரைவிட, தத்தம் தெய்வங்களையே சில வழிபாட்டு மரபுகள் உயர்வாய்க் கருதுகின்றன என்றால், வேறு சில வழிபாட்டு மரபுகள் நதிகள், மலைகள், மரங்கள், மிருகங்கள் என்று இயற்கை வழிபாட்டை வலியுறுத்துகின்றன. எனவே, இந்திய மதங்களையும் நம்பிக்கைகளையும் எளிமைப்படுத்த மேற்கொள்ளப்படும் அத்தனை முயற்சிகளும் முட்டாள்தனமானவை – நம் கண் முன் உள்ள உண்மைகளுக்கும் ஆதாரங்களுக்கும் முரணானவை.

இந்திய துணைக்கண்டத்தில் தோன்றிய அத்தனை சிந்தனை முறைமைகளுக்கும் பொதுவாய், தனித்தன்மை கொண்ட சில பண்பாட்டுக் கூறுகள் இருக்கின்றன. இவற்றுள் சில பிற பண்பாடுகளிலும் சமயங்களிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வேறு சில பண்பாட்டுக் கூறுகள், இந்திய துணைக்கண்டத்துக்கு வெளியே இருந்த கலாசாரக் குழுக்களுக்கு உரியவை என்று சில வரலாற்றாய்வாளர்கள் சொல்லவும் செய்கிறார்கள்.

முதலில் இந்து சமயங்களின் மைய நோக்கு எது என்ற விஷயம். இந்த மதங்களின் பனிமூட்டம் போன்ற, கனவுத்தன்மை கொண்ட, உலகுக்கு உதவாத, நடைமுறைப்படுத்த முடியாத இயல்பு பற்றி ஏராளமான புத்தகங்கள் எழுதப்பட்டு விட்டன. ஆனால் இப்படிப்பட்ட முடிவைவிட உண்மைக்குப் புறம்பானது எதுவும் இருக்க முடியாது. உண்மையில், இந்து மதங்கள் மிகப் பெரிய அளவில் மனிதனைத் தம் மையத்தில் கொண்டிருக்கின்றன. காஷ்மீரின் மதங்களானாலும் சரி, தமிழக மதங்களானாலும் சரி, இந்து பெருமதங்களுக்கு முதலான பெருமதங்களின் எதிர்வினையாய்த் தோன்றிய சமணம், பௌத்தம் முதலான வேறு பல மதங்களானாலும் சரி, இந்தியாவில் உள்ள அத்தனை மதங்களையும் தத்துவச் சம்பிரதாயங்களையும் ஒருங்கிணைக்கும் விஷயம் ஒன்றுண்டு- அது சங்கிலித் தொடராய்த் தொடரும் ஜனன மரணச் சுழற்சியிலிருந்து உயிரை விடுவிப்பதுதான்.

நிர்வாணம், மோட்சம், முக்தி என்று எப்பெயரிட்டு அழைத்தாலும் இந்து மதச்சம்பிரதாயங்களின் நோக்கம் ஒன்றுதான் – புட்டியில் சிக்கிக் கொண்ட விட்டிலுக்கு வெளியேற வழி காட்டுவது எப்படி? (அடிக்குறிப்பு: தன் தத்துவத்தின் நோக்கம், **"Der Fliege den Ausweg aus dem Fliegenglas zeigen"—to show the fly the way out of the fly bottle,** என்றார் விட்கென்ஷ்டைன்). சிலர் இதைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். சொர்க்கம் என்று ஒன்று உண்டு என்றும் வைகுண்டம், கைலாயம் போன்ற தெய்வ உலகங்கள் உண்டு என்றும் இந்து மதங்கள் சொல்வதையும் அவற்றின் தொன்மங்களை நியாயப்படுத்தவுமே இந்து மதங்களில் 'விடுதலை' வேட்கை, வலியுறுத்தப்படுகிறது என்கின்றனர் இவர்கள். இது உண்மையாய் இருக்குமென்றால், தெய்வத்தை விடுங்கள், ஆன்மா என்ற ஒன்று

www.iyachamy.com

www.iyachamy.com

இருப்பதையே ஏற்றுக் கொள்ளாத பௌத்தம் போன்ற சமயங்கள் ஏன் சம்சாரத்துக்கு முடிவு கட்டுவதைத் தம் லட்சியமாகக் கொள்ள வேண்டும்? வேதங்கள், உபநிடதங்கள் தொடங்கி பின்னர் வந்த சம்ஸ்கிருத நீதி நூல்கள், தமிழகம் மற்றும் காஷ்மீர சைவ சித்தாந்தங்கள், இந்தியாவெங்கும் பரவலாய் உள்ள வைணவ சம்பிரதாயங்கள், இந்து சமயத்தின் ஷண்மதங்கள், ஏன் சமணம் உட்பட, அனைத்துமே மானுட பிறப்பின் துயர அனுபவத்தினின்று விடுபடுவதையே ஏன் தம் சமய உலகின் மையமாக கொள்ள வேண்டும்? இந்த 'மாறுபட்ட புரிதல்' என்பது பிழைபட்ட அறிவாக இருக்க வேண்டியதில்லை. உண்மையைச் சொன்னால், புராணங்களும் அவற்றின் துணைக்குறிப்புகளாக அளிக்கப்படும் மறைநூல்களும் அபரிதமான அளவில் கடவுளர்களின் உலகங்களைக் கொண்டிருக்கின்றன. இது பற்றி பிறகு எழுதுகிறேன். சுருக்கமாகச் சொன்னால், மனிதனை மையத்தில் நிறுத்திய முதல் 'எக்ஸிஸ்டென்ஷலிஸ்ட்' பிலாசபி எது என்று கேட்டால், அது இந்து மதம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும்.

அடுத்து பேசப்பட வேண்டியது காலமும் மனித அனுபவத்துக்கு உட்பட்ட வஸ்துக்களின் பருண்மத் தன்மையும். இந்து சமயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்த இரண்டையும் புரிந்து கொள்வது அவசியம். விதிவிலக்குகள் என்று ஒன்றுகூட இல்லாமல், இந்து சமயங்கள் அனைத்தும் காலம் சுழற்சித்தன்மை கொண்டது என்றே சொல்கின்றன. இந்து அண்டவியலில், ஒரு கணம் முதல் ஒரு யுகம் வரை கால இடைவெளிகள் துல்லியமாக வரையறை செய்யப்பட்டு பகுக்கப்பட்டிருக்கின்றன. படைக்கப்பட்ட பூமியின் காலம் மட்டுமல்ல, தெய்வ உலகங்களின் காலமும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. தெய்வங்களின் உலகுக்கும் காலம் உண்டா? இருப்பது எதுவானாலும் அனுபவத்துகோ அறிவுக்கோ சிந்தனைக்கோ உட்பட்டது எனில், அது பௌதிகத் தன்மை கொண்டதே. இந்து சமயங்கள் பௌதிக இருப்பை இருவகையில் பிரிக்கின்றன- தூலமாய்ப் புலப்படுபவை, சூக்குமமாய் விளங்குபவை. இந்தப் புரிதலில், மனம், எண்ணங்கள், ஜீவன் (மனித ஆன்மா), உலகம், கர்மா, இறைவர்கள், இறைவியர், படைப்புத்

தொழிலை நிகழ்த்தும் பிரமன் என்று மானுட அனுபவத்துக்கு உட்பட்ட அனைத்துமே பௌதிக உலகைச் சார்ந்தவையே.

பௌதிகத் தன்மை கொண்டிருத்தலால், இவை படைப்பு, இருப்பு, அழிவு என்ற இயற்கை விதிகளுக்குக் கட்டுப்படுகின்றன. இந்து சமயங்களில் வெவ்வேறு உயிர்களுக்கும் உலகங்களுக்கும் வெவ்வேறு வகையில் முடிவு காலம் நிர்ணயிக்கபடுகிறது. பிரளயம் பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கப் போகிறோம். ஆனால் இந்து சமயங்களில் வெவ்வேறு கல்பங்களுக்கு வெவ்வேறு பிரமன்களும், ரிஷிகளும் உலகங்களும் இருப்பதற்கான காரணம் இதுதான்– அனைத்தும் இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டவை. இதில் கர்மவினை பௌதிகத்தன்மை கொண்டது என்பதைக் கண்டறிந்தது சமணம்தான் என்று சொல்ல வேண்டும்

இந்து சமயங்கள் வழிபாடுகளையும் சடங்குகளையும் காட்டிலும் தனி மனித வளர்ச்சி, பரிணாம மாற்றம், வீடுபேறு ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. சடங்குகள் முக்கியம்தான், ஆனால் தனிமனித வளர்ச்சியை நோக்கி சிரத்தையுடன் சாதனை செய்வது அவசியம் என்று கருதப்படுகிறது. தனி மனித பரிணாம மாற்றத்துக்கு எட்டு ஆன்ம குணங்கள் இருக்க வேண்டியது அவசியம் என்று இந்த சமயங்கள் நம்புகின்றன. சமயத்தையும் சம்பத்தையும்விட இந்த எட்டு குணங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. அடுத்தவன் பொருளில் ஒரு கையும், ஆண்டவன் உலகில் ஒரு காலும் வைத்திருக்க முடியாது என்பதுதான் விஷயம்.

ஒவ்வொரு மனிதனும் பிறரைக் காட்டிலும் வேறுபடுகிறான். ஒவ்வொருவனையும் உருவாக்கிய பௌதிகக் கூறுகளும் பண்பாட்டுப் பயிற்சிகளும் பல்வகைப்பட்டவை என்பதைப் பார்க்கும்போது, மானுட உலகில் எண்ணற்ற வகைகளில் மாறுபடும் ஈடுபாடுகள், இயல்புகள், நடத்தைகள் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஒருவருக்கோ அல்லது ஒரு குழுவினருக்கோ ஒரு விஷயத்தில் ஆர்வம் இருக்கிறது என்பதால் அது பிறருக்கும் முக்கியமாக இருக்க வேண்டியதில்லை. இந்த அடிப்படை உண்மையை ஆன்மிக தளத்தில் நடைமுறைப்படுத்தும் வகையில் இந்து சமயங்கள் எண்ணற்ற தெய்வங்கள், தேவியர்கள், இயற்கை அம்சங்களை

www.iyachamy.com

வழிபாட்டுக்குரியனவாய் முன்னிறுத்தி, தன் விருப்பத்துக்குரிய வழிபாட்டுப் பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கிறன. சிலர் தங்கள் உடலை பல்வகைப்பட்ட ஆடை அணிகலன்கள் கொண்டு அலங்கரித்துக் கொள்கின்றனர். சிலர், பிறருக்கு அருவெறுப்பாக இருக்கக்கூடியவற்றை வழிபடுகின்றனர். இந்த விஷயத்திலும் இந்து சமயங்கள் நம்மையே தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சொல்கின்றன- வேண்டுமானால் அவர்கள் உருவமற்ற வழிபாட்டைப் பின்பற்றலாம். சிலர் எல்லாருடனும் கலகலப்பாகப் பழகுகின்றனர், சிலர் தனித்து ஒதுங்கி இருக்கின்றனர். எப்போதும் எதையாவது செய்து கொண்டு மக்களோடு மக்களாய் கூடியிருக்க விரும்புபவர்களுக்கு இந்து சமயங்கள் கோயில்கள், தல யாத்திரைகள், சடங்குகள் என்று இன்னும் பல வழிகளைத் திறந்து கொடுக்கிறன. எப்போதும் எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற உத்வேகம் இல்லாதவர்கள் அமைதியான, தம் சுபாவத்துக்கு ஏற்ற வழிமுறைகளைப் பின்பற்றி வீடுபேற்றைப் பெறலாம்.

## இந்து மதம் கூறும் எட்டு ஆண்ம குணங்கள்

பிறப்பு முதல் மரணம் வரை ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய குறிப்பிட்ட சில சடங்குகளைப் பற்றிய குறிப்புகள் இந்து மரபில் உண்டு. இவை பதினாறு அல்லது நாற்பது என்ற எண்ணிக்கை கொண்டு சம்ஸ்காரங்கள் என்று அறியப்படுகின்றது.

ஆனால், முக்கியமான இந்த நாற்பது சம்ஸ்காரங்கள் அத்தனையும் கடைபிடித்தாலும்கூட, எட்டு ஆன்ம குணங்கள் இல்லாதவனுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை என்று இதே மரபுகள் சொல்லவும் செய்கின்றன. கௌதமர் பட்டியலிடும் எட்டு ஆன்ம குணங்களும் கொண்டவன் எந்த சம்ஸ்காரமும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, நாற்பது சம்ஸ்காரங்கள் செய்தவனைவிடவும், பண்டிதனைவிடவும், அவனே மதிக்கத்தக்கவன் என்றும் இதே மரபுகள் சொல்கின்றன.

அப்படியானால், எந்த தேசம், சாதி, சம்பிரதாயம், சமயத்துக்கு உரியவனாக இருந்தாலும் சில அடிப்படைக் குணங்கள் இருந்தால்

www.iyachamy.com

**அவனே பிற எவரைக் காட்டிலும் மேன்மையானவன் என்று போற்றும் இந்து சமயங்கள் வலியுறுத்தும் ஆன்ம குணங்கள் எவை?**

<u>இவையே அஷ்ட ஆன்ம குணங்கள்-</u>

1. தயை – அனைத்து உயிர்களிடத்தும் கருணை
2. க்ஷாந்தி – பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி
3. அனஸூயை – பொறாமைப்படாமல் இருத்தல்
4. சௌச்சம் – உடல், மனம், செயலில் தூய்மை
5. அனாயாசம் – தன்முனைப்பின் காரணமாகவும் பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலிமிகுந்த உழைப்பு
6. மங்களம் – கலகலப்பாக இருத்தல், இறுக்கமற்று இருத்தல், நன்மையளித்தல் போன்ற நற்குணங்கள்
7. அகார்ப்பணியம் – தாராள மனம் கொண்டிருத்தல், நன்னடத்தை, தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்ளாதிருத்தல்
8. அஸ்ப்ருஹம் – வேண்டத்தகாதவற்றை விரும்பாதிருத்தல்

<u>தயை</u>

தயை என்றால் அனைத்து உயிர்களிடத்தும் அன்பும் கருணையும் கொண்டிருத்தல் என்று அர்த்தம். உலக உயிர்கள் அனைத்திடமும் கருணையோடு இருப்பவன், எண்ணத்தாலும் பிறருக்கு தீங்கு இழைக்க மாட்டான். இத்தகைய மனமே, அனைவரையும் மிகவும் நேசிப்பதாக வளரும். இதனால் அவன் அமைதியான, திருப்தியான, நிறைவான வாழ்வு வாழ முடியும்.

தயை என்பதற்கு பதிலாக அகிம்சையை அவசியமான ஆன்ம குணமாக வைத்துக் கொள்ளலாமா என்பது குறித்து நிறைய சர்ச்சைகள் உண்டு. ஆனால் அனைவரிடமும் அன்பும் கருணையும் உள்ள ஒருவன், பிறருக்குத் தீங்கு இழைப்பதை நினைத்தே பார்க்க மாட்டான் என்றால், அப்போது அகிம்சை இயல்பாகவே அவனது

www.iyachamy.com

செயல்பாட்டில் வெளிப்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, தயை அகிம்சையைக் காட்டிலும் அடிப்படையானது, அகிம்சையைத் தன்னுள் கொண்டது.

பிற அனைத்து நற்குணங்களுக்கும் தோற்றுவாயான ஆதார குணம் என்பதால்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய நற்குணங்களின் முதன்மை இடம் தயைக்கு அளிக்கப்படுகிறது.

## க்ஷாந்தி

க்ஷாந்தி என்றால் சகிப்புத்தன்மை, பொறுமை.

விரயங்கள், வியாதி, ஏழ்மை போன்ற அத்தனை துன்பங்களையும் பொறுமையாகச் சகித்துக்கொள்ள வேண்டும் என்று தவறாக இதைப் புரிந்து கொள்ளக்கூடாது. அனைவரையும் நேசித்தல் என்று புரிந்து கொள்ள வேண்டும். நமக்குத் தீங்கு செய்பவர்களையும் மன்னித்து நேசிக்க வேண்டும். அப்படி அவர்களைப் புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, அவர்களோடு நட்பு பாராட்டும்போது வரும் தொல்லைகளையும் பிரச்சினைகளையும் கண்டுகொள்ளாமல் தாண்டிச் செல்ல வேண்டும் என்றுதான் இந்த நற்குணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்பைக் கொண்டு பொறுமையை நிறைப்பதால் தயையே ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய முக்கியமான ஆன்ம குணம் ஆகிறது.

## அனஸூயை

அனஸூயை என்றால், அஸூயையின்மை, பொறாமைப்படாமல் இருப்பது.

நாம் கருணை நிறைந்தவர்களாக அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். பிறரிடம் உள்ள செல்வம், புகழ், அழகு, திறமை என்று எதைப் பார்த்தும் நாம் பொறாமையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. பொறாமை வயிற்றெரிச்சலுக்கே இட்டுச் செல்கிறது, அதனால் உடல் நலம் கெடுகிறது, மன அமைதி குலைகிறது.

www.iyachamy.com

உடலும் ஆரோக்கியமாக இல்லை, மனதிலும் அமைதி இல்லை என்ற நிலையில் மனிதன் இயல்பாகவே வெறுப்புக்கும், அதன் உச்ச நிலையில் வன்முறைக்கும் இடம் கொடுப்பான். பொறாமைப்படாத ஒருவனது மனமும் உடலும் ஒன்றுடன் ஒன்று இணக்கமாக இருக்கும். அதனால் அவன் எதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்த முடியும். பொறாமைப்படுபவனைவிட, அமைதியான மனதும் ஆரோக்கியமான உடலும் உள்ள ஒருவன் நன்றாக வேலை செய்ய முடியும்.

## சௌச்சம்

சௌச்சம் என்றால் சுத்தம், அல்லது தூய்மை. புறத்தூய்மை மட்டுமல்ல, அகத்தூய்மையும் கடைபிடிக்கப்பட வேண்டும். நம் செயல்களை நம் எண்ணங்களே தீர்மானிக்கின்றன என்பதால், நாம் தெளிவான, தூய்மையான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

வாயால் சாப்பிடுவது மட்டுமல்ல, நம் புலன் உறுப்புகள் வழி உட்செல்வது அனைத்துமே ஆகாரம் என்று பொருள்கொள்ள வேண்டும் என்றார் ஆதி சங்கரர். எனவே ஆகாரசுத்தி என்பது, தூய உணவு மட்டுமல்ல, புலன் அனுபவங்கள் அனைத்திலும் தூய்மை கொண்டிருத்தல்.

குளித்தல், தூய ஆடை அணிந்திருத்தல், தன் புலன்களைக் கொண்டு தூய விஷயங்களை மட்டுமே அறிதல் என்று தூய அனுபவங்களைத் துய்க்கும் ஒருவனது எண்ணம், சொல், செயல் என்று அனைத்தும் ஒருமைப்பாடு கொண்டதாக இருக்கும்.

## அனாயாசம்

ஆயாசம் என்றால் களைப்பு, உழைப்பு. துல்லியமாகச் சொன்னால், ஆயாசம் என்பதன் எதிர்ப்பதம், அல்லது, ஆயாசமின்மை என்பதுதான் அனாயாசம். இது தவிர, இந்தச் சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு.

சுமுகமாக இருப்பது, எதையும் சாந்தமுடன் எடுத்துக் கொள்வது, மன அழுத்தமில்லாமல் இருப்பது, துன்பத்தில் கொண்டு போய் சேர்க்கும் பிரயாசைகளில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது, என்று நிறைய

www.iyachamy.com

சொல்லலாம். சிரமப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று இதைப் புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக, நவீன உளவியலில் **flow** என்ற ஒரு தத்துவம் உண்டு, இது அதற்கு இணையான ஒன்று.

பொதுவாக சமகாலத்தில் தன்முனைப்பு மிக அதிகமாக இருக்கிறது, பல விஷயங்களை அடையும் பொருட்டு நாம் கடுமையாக உழைக்கிறோம். நவீன உலகின் நற்குணங்களுள் ஒன்று என்று இந்த இயல்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. ஆனாலும்கூட இதனால் ஏற்படும் கடும் உளைச்சல் உடலுக்கும் உள்ளத்துக்கும் எல்லையற்ற தீங்கு செய்கிறது. இதனால் நாம் இறுக்கமானவர்கள் ஆகிறோம். கோபம், பொறாமை, ஆத்திரம் போன்ற குணங்களை வெளிப்படுத்துகிறோம்.

உலகெங்கும் உள்ள சமூகங்களில் நாளுக்கு நாள் வன்முறையும் சகிப்புத்தன்மையின்மையும் அதிகரித்து வருவது ஏன் என்று பார்த்தால் இந்த நற்குணங்கள் வேகமாக மறைந்து வருகின்றன எனபதைதான் காண்கிறோம்.

## மங்களம்

மங்களம் என்பது எப்போதும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருப்பதைக் குறிக்கிறது. அப்படி இருப்பவனைச் சுற்றி எப்போதும் சுபமான சூழல் இருக்கும். மனிதன் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்போது அவனைச் சுற்றிலும் அந்த உணர்வுகள் பரவுகின்றன. எனவே, மங்களம் என்பது லகுவாகவும் உற்சாகமாகவும் நாமும் இருந்து கொண்டு நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளிப்பதேயாகும்.

அன்பும் கருணையும் நிறைந்த ஒருவன் தூய்மையாகவும் பொறாமையற்றவனாகவும் இருந்து, எப்போதும் உற்சாகமாக (இதுவரைச் சொல்லப்பட்ட ஆன்மகுணங்கள்) செய்யும் வேலைகள் அத்தனையும் அனாயசமாக இருக்கும் (இதற்கு முந்தைய ஆன்மகுணம்).

## அகார்ப்பணியம்



www.iyachamy.com

கருமித்தனத்தின் எதிர்குணம்தான் அகார்ப்பணியம், அதாவது தயாள சிந்தை. தன்னைத் தாழ்த்திக் கொள்ளாமல், கௌரவமாக நடந்து கொள்வது என்ற பொருளும் இச்சொல்லுக்கு உண்டு. தீரமும் தயாள குணமும் இருக்கும் ஒருவன் எந்த சூழ்நிலையிலும் உற்சாகமாக, அமைதியாக, தூய மனதுடன், உறுதியாக, கருணை உள்ளத்துடன் இருக்கும் நிலைதான் அகார்ப்பணிய குணம். ஒருவன் எவ்வளவு மோசம் போனாலும், தன் கௌரவத்தைக் கெடுத்துக் கொள்வதைக் காட்டிலும் உலகில் வேறு எதுவும் அவனைக் கீழ்மை செய்வதாக இருக்காது.

## அஸ்ப்ருஹம்

ஸ்ப்ருஹம் என்பது அத்தனைக்கும் ஆசைப்படச் சொல்லும் பேராசை. அஸ்ப்ருஹம் என்பது இந்த குணமற்ற இயல்பு. தர்மத்துக்குப் புறம்பாக இல்லாத இன்பங்கள் அனுபவிப்பதை இந்து சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன என்றாலும், அனைத்து மோகங்களும் வலுவற்றவை என்பதையும் பயனற்றவை என்பதையும் நாம் உணர வேண்டும் என்று அவை கூறுகின்றன.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்" என்பது திருமூலர் வாக்கு.

இதுவே மிக உயர்ந்த நிலை, சாஸ்திரங்களில் கூறப்பட்ட தர்ம வாழ்வை அனைவரும் வாழ்ந்து மோகமற்ற பெருவாழ்வு வாழ வேண்டும்.

## இந்து சமயங்களில் பாவ புண்ணியங்கள்

எந்த ஒரு கர்மா செய்தாலும் பிறருக்கோ அல்லது பொதுவில் பலருக்கும் உரிய ஒன்றுக்கோ எதிரான அத்துமீறலாகி, அச்செயலின் விளைவுகள் அவர்களை பாதிக்கும்போது, அந்த வேலையைச் செய்தவனுக்கு மோசமான எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன. இவற்றை இந்து சமயங்கள் பாபம் என்று அழைக்கின்றன. எப்படிப்பட்ட செயல்கள் இவை என்று பல நூற்றாண்டுகளாக கவனித்து, சாஸ்திரங்கள் அவற்றைத் தொகுத்து வந்திருக்கின்றன.

www.iyachamy.com

ஆனால் இந்திய துணைக்கண்டம் மிகப் பெரியது, இங்கு பல பிரதேசங்களும் அவற்றுக்கு உரிய தனித்தனி பழக்க வழக்கங்களும் இருக்கின்றன என்பதால் இது போன்ற சாஸ்திர வகைமைப்பாடுகள் எக்கச்சக்கமாக இருக்கின்றன. அது அத்தனையையும் பேச தனியாக ஒரு புத்தகமே எழுத வேண்டும். இங்கே இருப்பது ஒரு சிறிய அறிமுகம்தான். இவ்வளவுதான் விஷயம் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அத்தனை விஷயங்களையும் தொடவுமில்லை, அவ்வளவு விரிவாக பேசவுமில்லை.

## புண்ணியம்

புண்ணியம் என்ற சொல்லுக்கு, "புனிதமானது, மங்களமானது, நல்லது, ஒழுக்கமானது," என்று பல அர்த்தம் உண்டு. எண்ணம், சொல், செயல் என்று பலவகைகளில் செய்யப்பட்ட நல்வினைகளையும் புண்ணியம் என்று சொல்வார்கள். செயலை மட்டுமல்லாமல் அவற்றின் விளைவுகள் அனைத்தையும் புண்ணியம் என்றும் கொள்வதுண்டு. லௌகீக வாழ்க்கையிலிருந்து நம்மை உயர்த்தி நமக்கு நன்மை செய்யும் செயல்கள் அத்தனையும் புண்ணியம்தான். தான தருமம், பிறருக்கு நல்லது நடக்க வேண்டும் என்று உயர்வாய் நினைப்பது, பிறருக்கு ஆறுதலாய் நாலு வார்த்தை பேசுவது, இது போன்ற செயல்களின் விளைவுகள் புண்ணியம் என்று சொல்லப்படுகின்றன. அதே போல் பிரார்த்தனை செய்வது, தீர்த்த யாத்திரை செல்வது, ஏன், தியானம் செய்வதும்கூட் புண்ணிய காரியம்தான். இது ஒவ்வொன்றுமே புண்ணியம்தான்.

நம் எண்ணம், பேச்சு, செயல் எல்லாம் புண்ணியம் பெற்றுத்தருவதாக இருக்க வேண்டும் என்ற ஊக்கத்தை இந்து சமயங்கள் அளிக்கின்றன. இதனால் நல்ல இணக்கமான ஒரு சூழல் உருவாகிறது என்பது மட்டுமல்ல. இந்த நல்வினைகளின் பயனாய் நிறைய புண்ணியம் சேர்த்துக் கொண்டு இப்பிறவியின் பின்னாட்களிலோ அல்லது மறுபிறப்பிலோ அவற்றுக்கான நற்பயன்களை அனுபவிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கும் இடம் கொடுக்கின்றன. புண்ணிய எண்ணங்களும் செயல்களும் லௌகீக வாழ்விலிருந்து உயர்த்தி நம்மை மோட்சத்துக்கு இட்டுச் செல்வது மட்டுமல்லாமல், உலக

www.iyachamy.com

உயிர்கள் எல்லாமே நலமாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்பவும் உதவுகின்றன.

பிற சமயங்கள் நம்புவது போல், புண்ணியச் செயல்களின் பலன் இறப்புக்குப்பின் சொர்க்கத்தில் போய்ச் சேர்ப்பது மட்டும்தான் என்று இந்து மரபுகள் பிரச்சாரம் செய்வதில்லை. இந்து சாஸ்திரங்களில் சொர்க்கத்தைப் பற்றி பேசப்படுகிறது என்பது உண்மைதான், ஆனால் புண்ணியச் செயல்களின் பல நன்மைகளுள் ஒன்று மட்டும்தான் சொர்க்கம் சென்று சேர்வது. சொர்க்கம் மட்டும்தான் எல்லாம் என்று சொல்வதில்லை.

புண்ணியம் பற்றி பேசும்போது அங்கு சமய உணர்வுகள் வெளிப்படுவது உண்மைதான் ஆனால் மனிதனின் ஒட்டுமொத்த அற, ஆன்மிக வளர்ச்சிதான் இந்து சமயங்களின் மைய நோக்கம். இதன் நீட்சியாய் சமூகம் முழுமையும் நலமாய் வாழ வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது.

## பாபம்

கடவுளின் சட்டங்களை வேண்டுமென்றே மீறுவது அல்லது கடவுளுக்கு எதிராக புரட்சி செய்வது பாபம் என்பதுதான் உலகம் தழுவிய பல சமய மரபுகளின் சித்தாந்தம். உதாரணத்துக்கு, கிறித்தவத்தில் ஒரிஜினல் சின் என்று ஒன்று இருக்கிறது. முதல் பாபம் செய்த ஆதாமுக்குப்பின் வந்த அத்தனை பேரும் அந்தப் பாபத்தால் பீடிக்கப்பட்டிருப்பதாக கிறித்தவம் சொல்கிறது. இது போல் எது பாபம், யார் பாபிகள், எது பாப விமோசனம் என்பது பற்றி உலகத்தில் உள்ள ஏறத்தாழ அத்தனை சமயங்களும் தங்களுக்கு என்று ஒரு தத்துவத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்து சமயத்தில் பாபம் அல்லது பாதகம் என்ற சொல் பாபத்தை விவரிக்கிறது. ஒரு மனிதனுக்கு எப்படி மோட்சம் கிட்டும், அதற்கு தடைகள் என்ன, அந்தத் தடைகளைக் கடந்து செல்வது எப்படி என்பது போன்ற விஷயங்களை இந்தத் தத்துவம் சொல்கிறது. இருந்தாலும், பாதகம் என்பது மிகவும் தீவிர சமயத்தன்மை கொண்ட சிந்தனை, இறைச் சித்தத்துக்கு எதிராகச் செய்யப்படும் விஷயங்களை அது சொல்கிறது. எனவே பாபம் குறித்து இந்து சமயங்கள் சொல்வது

www.iyachamy.com

எல்லாம் அற–ஆன்மிக விஷயங்கள்தான். சமயம் அல்லது ஒழுக்கங்களை மட்டும் அவை தனியாகப் பேசுகின்றன என்று சொல்ல முடியாது. பொதுவாகச் சொன்னால் இந்து சமயங்களில் சமயமும் ஒழுக்கமும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாத தனித்தனி விஷயங்கள் அல்ல.

ஆனால் எந்த ஒரு செயலையுமே ஏன் பாபம் என்று சொல்ல வேண்டும்**?** அப்படியே பார்த்தாலும், சில செயல்களை பாபச்செயல்கள் என்று சொல்ல முடியுமானால், ஆண்களும் பெண்களும் ஏன் பாபம் செய்கிறோம்**?** எதெல்லாம் பாபச் செயல்கள், ஏன் அப்படிச் சொல்லப்படுகின்றன**?** ஒருவன் பாபம் செய்தால், பாப விமோசனம் பெற என்னவெல்லாம் செய்ய வேண்டும்**?**

இந்து சமயங்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று குணங்கள் அல்லது சுபாவங்கள் உண்டு. அவற்றை சத்வம், ரஜஸ், தமஸ் என்று அழைக்கிறோம். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வகையில் இந்த மூன்று குணங்களும் கலந்து இருக்கின்றன. இந்தக் கலவைகளில், ரஜோ குணம் மேலோங்கி இருந்தால் அவர்கள் சில கெட்ட காரியங்கள் செய்யக்கூடும். கீதையில் கிருஷ்ணர் இப்படிச் சொல்கிறார், “காமம், கோபம், பேராசை” மனிதர்களை அழிக்கின்றன, எனவே மனிதன் அவற்றைத் தவிர்க்க வேண்டும் (பகவத் கீதை, **15, 21).** அதே போல், “காமமும் கோபமும் ரஜோ குணத்தில் தோன்றுகின்றன... இந்த உலகத்தில் அவை மனிதனுக்கு விரோதிகள்” என்றும் சொல்கிறார் (பகவத் கீதை, **3, 37)**

ஏதோ ஒரு எண்ணம், சொல், செயல், தொடர்பு, அல்லது சம்பவம் ஒரு மனிதனைச் சீரழிக்கிறது அல்லது அவனது அமைதியைக் குலைக்கிறது என்றால், அது மன அளவில் இருந்தாலும் சரி, உடல் அளவில் இருந்தாலும் சரி, பாபம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் இது போல் ஒழுக்கம் கெட்டுப் போவது முடிவில் மோட்சம் அடைவதற்குத் தடையாக இருக்கும். இதை இன்னும் கொஞ்சம் விரிவாக யோசித்தால், இது போன்ற ஒரு சீரழிவு அந்த மனிதன் வாழும் சமூகத்தின் சமநிலையைக் குலைக்கும். இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது, ஒரு மனிதனுக்கு கெடுதல் செய்வது எதுவாக இருந்தாலும் சரி, சமூகத்தில் அமைதியைக் குலைப்பது



www.iyachamy.com

எதுவாக இருந்தாலும் சரி, இறைவனை நோக்கிச் செல்லும் பாதையிலிருந்து மனிதனையோ அல்லது ஒரு குழுவையோ திசைதிருப்புவதும் சரி, எல்லாமே பாபம் என்றுதான் சொல்லப்படுகிறது.

பாதகங்கள் எத்தனை, அவை என்னென்ன என்ற கேள்விகளுக்கு பதில் மிகப் பழமையான இந்து சாஸ்திரங்களிலேயே இருக்கிறது. காலத்துக்கு ஏற்ப இவற்றின் எண்ணிக்கையும் பெயர்களும் மாறி வந்திருக்கின்றன. ஆனால் இவற்றில் ஐந்து பாபங்களை மாபாதகங்கள் என்று சொல்கிறார்கள், அவற்றின் பெயர் மட்டும் வெவ்வேறு சாஸ்திரங்களில் மாறுபடுகின்றன.

பொதுவாக அனைவரும் இவற்றை பஞ்ச மாபாதகங்களாக ஒப்புக் கொள்கின்றனர்-

களவு

மது அருந்துதல்

கொலை

குரு பத்தினியுடன் உறவு கொள்ளுதல்

மேற்கண்ட நான்கு பாபங்களைச் செயதவர்களோடு நட்பாக இருப்பது

**(சாந்தோக்ய உபநிடதம், 5.10.9)**

இதில் பலரும் நான்காவது பாபம் ப்ருணஹத்தி அல்லது கருச்சிதைவு என்று சொல்கிறார்கள். வேறு சிலர், கோவதை அல்லது பசுவதை என்று சொல்கிறார்கள்.

பாபங்கள் வெவ்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிலிருந்து விடுபட என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் தொகுக்கப்பட்டு இந்து சமய பனுவல்களில் பலவிதங்களில் பட்டியல்கள் இடப்பட்டிருக்கின்றன. பொதுவாக இவற்றில் இரு வகைகள் எல்லாருக்கும் தெரிந்திருக்கும்- மாபாதகங்கள்,

www.iyachamy.com

உபபாதகங்கள். மாபாதகங்கள் கொலைக்குற்றம் போன்றவை, உபபாதகங்கள் அவற்றைவிட கொஞ்சம் சாதாரணமான பாபங்கள்.

சில முக்கியமான மாபாதகங்களும், உபபாதகங்களும் அவற்றுக்கான பிராயச்சித்தங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டியல் முடிவற்றது என்பதால் எல்லாவறையும் பேச முடியாது. ஆனால் குறிப்பிட்ட பாபங்களுக்கு என்ன பிராயச்சித்தம் என்று அறிய விரும்புபவர்களுக்கு உதவுவதற்காக பாதகங்களையும் பிராயச்சித்தங்களையும் விவரிக்கும் வகையில் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன, அவற்றைப் படிக்கலாம்.

## மாபாதகங்கள்

### ஹத்யம் அல்லது வதம்

ஹத்யம் அல்லது வதம் என்றால் சக மனிதனைக் கொலை செய்தல். மகாபாபங்களில் மிகக் கொடிய பாபமாக இதுவே இந்து சாஸ்திரங்களில் கருதப்படுகிறது. மனிதனை விடுங்கள், எந்த ஒரு பிற உயிரையும் கொல்லும் உரிமை மனிதனுக்குக் கிடையாது என்றுதான் இந்து மரபுகள் சொல்கின்றன. இன்னொருவனை நேரடியாகக் கொன்றாலும் சரி, ஆள் வைத்துக் கொன்றாலும் சரி, கொலைக்கு உடந்தையாக இருந்தாலும் சரி, கொலைகாரர்களுக்கு பாதுகாப்போ புகலிடமோ அளித்தாலும் சரி, கொலை நடக்கும்போது வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் சரி, பிற மனிதனைக் கொன்ற பாபம் சேரும்.

இந்து சாஸ்திரங்களில் சில முக்கியமான கொலைக் குற்றங்கள் பேசப்படுகின்றன. அவற்றில் சில –

### ப்ருணஹத்யா

கருச்சிதைவு மகாபாபம் என்று கருதப்படுகிறது. இன்னும் பிறக்கவில்லை என்றாலும், கருவில் இருக்கும் குழந்தைக்கு உயிர் இருப்பதாகவே கருதப்படுகிறது. வளர்ந்துவிட்ட சிசுவைச் சிதைப்பதைக் கொலைக்குச் சமமாக ஹிந்து சமயங்கள் கருதுகின்றன. அதற்காக, ஹிந்து சமயங்கள் கருத்தடைக்கு எதிர்மறையானவை என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. கருத்தடை,



www.iyachamy.com

கருத்தடைச் சாதனங்கள் குறித்து அநேக ஹிந்து சாத்திரங்கள் உண்டு. கருத்'தடை' என்பது கருச்சிதைவுக்கு ஒருகாலும் இணையாகாது.

## சிசுஹத்யா

இந்து பண்பாட்டிலும் சமயங்களிலும் பன்னிரெண்டு வயதுக்கு குறைவான குழந்தைகள் எந்த தவறு செய்தாலும் தண்டிக்க அனுமதி கிடையாது. தெரிந்து செய்தாலும் சரி, தெரியாமல் செய்தாலும் சரி, குழந்தைகள் தவறு செய்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. கள்ளமற்ற குழந்தைகளை எக்காரணம் கொண்டும் தண்டிப்பது இந்து சமூகத்தில் கண்டிக்கப்படுகிறது. தண்டிப்பதே தவறு என்று விதிப்பதால், இச்சமயங்கள் குழந்தைகளைக் கொலை செய்வது மாபாதகம் என்றும் விதிக்கின்றன.

## கோஹத்யா

பசுக்களின் உடல்களில் சகல இறைவர்களும் உறைவதாக அநேக மரபுகளும், சம்பிரதாயங்களும் நம்பிக்கை கொண்டிருப்பதால், ஹிந்து சமயங்கள் பசுவதை என்பது மாபாதகம் எனக் கொள்கின்றன.

## பானம்

மதுபானங்களும் பிற போதைப் பொருட்களும் இந்து சமயங்களில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. மலர்கள், கனிகள் என்று மூலப்பொருள் எதுவாக இருந்தாலும் உடலுக்கும் மனதுக்கும் கேடு செய்வதால் போதை அளிக்கக்கூடிய எந்த மதுபானத்தையும் உட்கொள்ள அனுமதி கிடையாது. மனதின் சமநிலையைக் குலைத்து பல தீய பழக்க வழக்கங்களுக்கு மனிதனைத் தயார் செய்து, அவனையும் அவன் வாழும் சமூகத்தையும் மதுபானங்கள் நாசம் செய்கின்றன. பொதுவாகவே மதுபானம் மனிதனின் நுண்புலன்களை மழுங்கடித்து விடுவதால் அவனது ஆன்மிக வளர்ச்சியும் தடைபடுகிறது. எனவே மதுபானம் உட்கொள்வது இந்து சாஸ்திரங்களில் மிகப்பெரும் பாபங்க்ளில் ஒன்றாகிறது.

## களவு

www.iyachamy.com

சிறிய அளவிலானாலும் சரி, நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது ரகசியமாகவோ பிறர் பொருளை அபகரித்தல் மிகக் கொடிய பாபம் என்று இந்து சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஏறத்தாழ எல்லா சாஸ்திரங்களும் ஏழைகள் மற்றும் இறையடியார்களிடமிருந்து அபகரிப்பது பெரும் பாபம் என்று கண்டிக்கின்றன.

பிறழ்காமம்

பின்வரும் காமங்கள் பாபமாகச் சொல்லப்படுகின்றன–

குருவங்கன காமம்– ஒருவன் தனது குரு அல்லது ஆசானின் மனைவியுடன் உடலுறவு மேற்கொள்வது பாபச்செயல்.

அதே போல், தந்தை, அன்னை, சகோதரன், சகோதரி என்று குடும்ப உறுப்பினர்களுடன் உடலுறவு கொள்வது பாபச் செயல். சில சாஸ்திரங்கள் தந்தை அல்லது தாயின் உடன்பிறந்தோர் மற்றும் அவர்களது குழந்தைகளுடன் உறவு கொள்வதையும் தடை செய்கின்றன, ஆனால் இது பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடுகிறது.

சக மனிதனைத் தவிர வேறு பிற விலங்கினங்களுடன் உறவு கொள்வதும் பாபம்தான்.

சங்கம் அல்லது சகவாசம் – மகாபாதக சம்சங்கம்

மாபாதகங்கள் செய்பவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதே பெருங்குற்றமாகவும் மாபாதகமாகவும் சொல்லப்படுகிறது. இவை ஒருவனின் மனதைச் சீரழிக்கும், நாட்பட நாட்பட ஒருவரின் தீய குணங்கள் பிறரைப் பாதிக்கும் என்பதால், காலப்போக்கில் கூடாஒழுக்கம் கேடில் முடியும்.

உபபாதகங்களும் பிராயச்சித்தங்களும்

சில சாஸ்திரங்கள் சூதாட்டம், பொய் சொல்லுதல், சாஸ்திரங்களைப் பழித்தல், பிறருக்கும் பொதுமக்களுக்கும் உரியதை அழித்தல் போன்றவற்றை உபபாதகங்கள் என்று நீண்ட பட்டியலிடுகின்றன. இதில் ஆர்வமுள்ளவர்கள், பிராயச்சித்த விவேகம், யக்ஞவல்க்ய ஸ்ம்ருதி, போன்ற பனுவல்களைப் படிக்கலாம்.

www.iyachamy.com

www.iyachamy.com

## பிராயச்சித்தம் அல்லது பாபத்தைப் போக்கிக் கொள்ளும் வழிகள்

பிராயச்சித்தம் என்றால் பாபத்தைச் சுத்திகரித்துக் கொள்ளுதல். பாபச் செயலால் பாபியின் மனதில் ஏற்பட்ட தடங்களைப் பிராயச்சித்த கர்மம் சுத்தப்படுத்துகிறது. கடந்த காலத்தில் செய்த பிழையைத் திருத்திக் கொள்ளும் செயல் இது.

பாபங்களைப் போக்கும் கருவியாக பிராயச்சித்தம் இருக்க முடியுமா என்பது பற்றி பல்வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. தெரிந்தே செய்த பாபங்களிலிருந்து தப்பிக்க முடியாது, ஒருவன் தன் செயல்களுக்கான பின்விளைவுகளை அனுபவித்தேயாக வேண்டும் என்று சிலர் சொல்கின்றனர். அறியாமையாலோ, அசிரத்தையாலோ, அறியாமலோ செய்த பாபங்களுக்கு மட்டுமே சாஸ்திரங்களில் பிராயச்சித்தம் உண்டு என்கின்றனர் அவர்கள். ஆனால் வேறு சிலர், எப்பேற்பட்ட பாபங்களைச் செய்திருந்தாலும் சரி, அனைவருக்கும் இந்து தர்மம் நம்பிக்கை அளிக்கிறது என்று சொல்கிறார்கள்.

மாபாதகங்கள் செய்தவர்களுக்கும் மனம் வருந்தி திருந்த வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். சில உயிர்கள் நிரந்தரமாக நரகத்துக்கு அனுப்பப்படும் என்பதை இந்து சமயங்கள் அப்படியே நம்புவதில்லை- ஆனால் துல்லியமாகச் சொல்ல வேண்டுமென்றால், சில பக்தி சம்பிரதாயங்கள் அப்படிச் சொல்கின்றன. ஆனால் அந்த நம்பிக்கை பரவலாக இல்லை. எனவே எல்லா பாபங்களில் இருந்தும் சுத்திகரித்துக் கொள்ள முடியும் என்பதால் அதிக அளவில் பிராயச்சித்தங்கள் இந்து மதநூல்களில் சொல்லப்படுகின்றன. பாபச்செயல்களின் விளைவுகளைக் குறைத்துக் கொள்ள பல வழிமுறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில –

### பாவமன்னிப்பு

இந்து சமயச் சடங்குகளில், பாபத்தை ஒப்புக்கொண்டு பாப மன்னிப்பு பெறும் வழக்கம் கிடையாது என்ற ஒரு தவறான பொதுநம்பிக்கை இருக்கிறது. கடந்த காலத்தில் செய்த குற்றங்களிலிருந்து விடுபட இறைவனிடம் பிரார்த்தனை செய்வது குற்றத்தை ஒப்புக்கொள்ளும் செயல் என்று சொன்னால் அப்படிப்பட்ட பல பிரார்த்தனைகள் இருக்கின்றன. ரிக் வேதத்தில் மன்னிப்பு கேட்கும் பாடல்கள்

எண்ணற்ற அளவில் இருக்கின்றன. தர்ம சாஸ்திரங்களில் எங்கே எப்போது எப்படி இது போன்ற பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று பல தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பிற சமயங்களுக்கும் இந்து சமயங்களுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய வேறுபாடு உண்டு- பாபம் செய்தது குறித்த குற்றவுணர்வைப் போக்குவதற்காக என்றே குற்றத்தை ஒப்புக் கொள்வது கிடையாது; மாறாக, பாபத்தின் விளைவுகளை நீக்குவதற்கும் குறைப்பதற்கும் சில செயல்களைத் துவக்கவும் இப்படிச் செய்யப்படுகிறது.

## வருந்துதல்

மீட்சிக்கு முக்கியமான செயல்களில் அனுதாபம் என்று அழைக்கப்படும் வருத்தச் செயல் ஒன்று. தான் செய்த தவறுக்காகவும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் பாபம் செய்தவர் மனம் வருந்த வேண்டும். இவை இரண்டும் அடுத்தடுத்த செயல்கள் அல்ல, ஆனால் மனம் வருந்துதல்தான் பாபம் செய்தவருக்கு பிராயச்சித்தம் செய்யும் தகுதியை அளிக்கிறது.

## பிராணாயாமம்

புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்த பிராணனைத் தன்னுள்ளும் தன் சூழலிலும் இருத்தி வைத்திருத்தல் காலங்காலமாக நடைமுறையில் உள்ள பழக்கம். இந்து சமய பழக்க வழக்கங்களின் ஆரம்ப நிலைகளில் இது ஒன்று. எனவே, இதுவும் பிராயச்சித்தமும் வெவ்வேறு அல்ல. பிராணாயாமம் பல்வகைப்படும், அவற்றின் எண்ணிக்கையும் பல்வேறு. இதன் நுட்பங்களை அறிய விரும்புபவர்கள் யோகா புத்தகங்களை வாசிக்கலாம்.

## தபஸ்

இந்து சமயங்களில் உள்ள சுத்திகள் அனைத்தின் மையத்திலும் தபஸ் அல்லது விரதம்தான் இருக்கிறது. எதெல்லாம் விரதம் என்பது குறித்து மாறுபட்ட கருத்துகள் உள்ளன. பிரம்மச்சரியம், உண்மை பேசுதல், உண்ணாமை, வெறும் தரையில் உறங்குதல், ஒவ்வொரு நாளும் மந்திரம் ஜபித்தல், மும்முறை குளித்தல் முதலானவற்றை விரதங்கள் என்கிறார் கௌதமர் ( கௌதம தர்ம சூத்திரங்கள், **19.15).** பாபத்துக்கு

www.iyachamy.com

ஏற்றபடி எத்தனை நாட்கள் விரதம் இருக்க வேண்டும் என்பதும் எவ்வளவு வேளை சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்பதும் மாறுகின்றன. சில சாஸ்திரங்களில் உண்ணா நோன்புக்குதான் மைய இடம் இருக்கின்றது, அவை சந்திரனைக் கொண்டு ஆண்டுகளைக் கணக்கிடுகின்றன- சில குற்றங்களுக்கு ஒரு வருடம்கூட உண்ணாமல் இருக்க வேண்டியதாகலாம்.

## ஜபம்

குறிப்பிட்ட ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்ப சொல்வதுதான் ஜபம். ஒருவனுக்கு அவனது குருவால் உபதேசிக்கப்பட்ட மந்திரமாகவும் அது இருக்கலாம், அல்லது இறைநாமமாக இருக்கலாம், அல்லது பிராயசித்த மந்திரமாக இருக்கலாம். உண்மையில் ஜபம் செய்வது ஒருவனது அன்றாட கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. மிகக் கொடிய பாபங்களுக்கும்கூட இறைநாமத்தை ஜெபிப்பது பிராயசித்தமாக இருக்கும் என்று பல புராண ஸ்தோத்ரங்கள் சொல்கின்றன.

## தானம்

தானதர்மம் செய்வது இன்றும் பரவலாக நடைமுறையில் உள்ள பழக்கம். நல்ல நாட்களிலும் சில முக்கியமான சமயங்களிலும் ஒருவனது பிராயச்சித்தத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது அன்றாட கடமைகளில் ஒன்றாகவோ, இந்துக்கள் ஏழைகளுக்கும் இல்லாத நிலையில் இருப்பவர்களுக்கும் தர்மம் செய்கிறார்கள். பாபங்களுக்கு பிராயச்சித்தம் செய்வதைப் பேசும்போது தானம் தனி மற்றவை வேறல்ல என்று புரிந்து கொள்ள வேண்டும். பாபசுத்திக்கு பல கர்மாக்களை அடுத்தடுத்து செய்யும்போது அவற்றில் ஒரு பகுதியாக இதுவும் வருகிறது.

## உபவாசம்

உண்ணா நோன்பிருத்தல் இந்து மக்களின் வாழ்வில் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. திங்கட்கிழமை, ஏகாதசி என்று குறிப்பிட்ட விசேஷ நாட்களில் சிலர் விரதம் இருக்கின்றனர். புண்ணியம் கிடைக்கும் என்றோ ஒரு சடங்கின் பகுதியாகவோ பிராயச்சித்தம்



www.iyachamy.com

செய்வதற்கான தகுதி ஏற்படுத்திக் கொள்ளவோ நோன்பிருப்பதுண்டு.

<u>தீர்த்தயாத்திரை</u>

தீர்த்தயாத்திரை அனைத்து வகை பாபங்களையும் போக்கிவிடும் என்று போற்றப்படுகிறது. ஆனால் நடந்து செல்வது, உண்ணா நோன்பிருப்பது, திருத்தலங்களில் நீராடுவது என்று சாஸ்திரத்தில் கூறப்பட்ட வழிமுறைகளுக்கு ஏற்பவே ஒருவன் தீரத்தயாத்திரையை மேற்கொண்டு பயணப்பட வேண்டும்.

## முக்கடன்கள், ஐவகை வேள்விகள் மற்றும் தீர்த்த யாத்திரைகள்

இந்து சமயங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் உரிய மூன்று அடிப்படை கோட்பாடுகளைப் பார்க்கப் போகிறோம். ஒவ்வொரு மனிதனும் செலுத்த வேண்டிய முக்கடன்கள், நிறைவேற்ற வேண்டிய ஐந்து யாகங்கள், மேற்கொள்ள வேண்டிய தீர்த்த யாத்திரைகள்– கடன்கள், யாகங்கள், யாத்திரைகள்– இவையே அந்த மூன்று அடிப்படைக் கோட்பாடுகள்.

பல மதங்களிலும் யாத்திரை செல்லும் வழக்கம் உண்டு. ஆனால் எவற்றைப் புனிதமான இடங்களாகக் கருதி யாத்திரை செல்கிறார்கள் என்பதுதான் இந்து சமயங்களில் மேற்கொள்ளப்படும் யாத்திரையில் உள்ள தனித்தன்மை. பொதுவாக, பல மதங்களிலும் அந்த மதத்தைத் தோற்றுவித்தவரோடு தொடர்புடைய இடங்கள், அல்லது அந்த மதத்தில் பிரதான முக்கியத்துவம் கொண்ட வழிபாட்டுத் தலங்கள்தான் யாத்திரை செல்லும் இடங்களாக இருக்கும். ஆனால் இந்து சம்பிரதாயங்களில் பல்வகைப்பட்ட ஏராளமான இடங்கள் புனிதமாக கருதப்படுகின்றன. அது மட்டுமல்ல, நதிகள், மலைகள், விலங்குகள் என்று இயற்கையில் உள்ளவையும் புனிதமாக வழிபடப்படுகின்றன.

குறிப்பிட்ட சில புனித நதிகளில் நீராடுவது, தொலைவில் உள்ள மலைக்குச் சென்று கிரிவலம் வருவது போன்ற விஷயங்களும் இந்து

www.iyachamy.com

மரபில் திருத்தல யாத்திரைகளாகக் கருதப்படுகின்றன என்பது விஷயம் தெரியாதவர்களுக்கு ஒரு பெரிய ஆச்சரியமாக இருக்கும்.

ருண த்ரயம்

ஒவ்வொரு மனிதனும் ரிஷிகளுக்கு, கடவுளர்களுக்கு, மூதாதையர்களுக்கு என்று மூன்று கடன்களைச் செலுத்தவேண்டிய கடமையோடு பிறக்கிறான் என்பது இந்து கலாசாரத்தின் பண்டைய நம்பிக்கைகளில் ஒன்று. வேதங்களின் அங்கமான தைத்திரிய சம்ஹிதை இப்படிச் சொல்கிறது–

*"எது பிறக்கிறதோ, அது பிறக்கும்போது மூன்று கடன்களைக் கொண்டதாய் பிறக்கிறது, ரிஷிகளுக்கு பிரமச்சரியத்தையும், தெய்வங்களுக்கு யாகங்களையும் பித்ருக்களுக்கு வம்சத்தையும் அளித்தாக வேண்டும்"*

தைத்திரிய சம்ஹிதை, **VI. 3. 10. 5).** பண்பாட்டுக் கல்வி பெறுதல், யாகங்கள் செய்தல், குழந்தை பெற்றுக் கொள்ளுதல் முதலானவை ஆன்மீக கடமைகளாகக் கருதப்படுகின்றன.

இந்த நம்பிக்கை பரவலாக முக்கடன்கள் அல்லது ருண த்ரயங்கள் என்று அறியப்பட்டாலும், மகாபாரதம் நான்காம் கடன் என்று இன்னொன்றும் சொல்கிறது. அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்து, அன்புடன் இருந்துதான் நாம் அவற்றுக்குச் செலுத்த வேண்டிய கடனைத் தீர்க்க முடியும் (மகாபாரதம், ஆதி பர்வம், **120. 17-20).** மகாபாரதத்தின் அனுசாசன பர்வம்அதிதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் என்று ஐந்தாவதாக ஒன்றும் சேர்க்கிறது (**37.17)**

இரண்டாம் கடனும் மூன்றாம் கடனும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கல்வி பயின்று முடித்து குறிப்பிட்ட ஒரு வயதுக்கு வரும் மாணவன் யாகங்கள் செய்தாக வேண்டும், இந்த யாகங்களில் சிலவற்றில் அவனது மனைவியும் உடன் நிற்க வேண்டும். ரிஷிகளுக்கு பிரமச்சரியத்தை அளித்து, தெய்வங்களுக்கு யாகங்களை அளிக்கும் பருவத்தை எட்டும் மாணவன் திருமணம் செய்து கொள்வது அவசியமாகிறது. அதன்பின்னரே, மூன்றாம்

www.iyachamy.com

கடனான, “பித்ருக்களுக்கு வம்சத்தையும் அளிப்பதை” அவன் நிறைவேற்ற முடியும். இந்து சம்பிரதாயங்களில் மூத்தோருக்கு மரியாதை அளிப்பது, முன்னோர்களுக்கு பிண்டம் அளிப்பது போன்றவையும் அவசியமாகக் கருதப்படுகின்றன. எனவே இவற்றைச் செய்பவனுக்கு நேரடி வாரிசு இருக்க வேண்டும்.

மேலும், இந்தக் மூன்று கடன்களுக்கு சமய நோக்கமற்ற வேறொரு காரணமும் இருக்கக்கூடும் – குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பைத் தன் தந்தையிடமிருந்து மகனோ மகளோ ஏற்றுக்கொள்ளும் வகையில், அவனது மகன் மற்றும் மகளுக்குப் பயிற்சி அளித்து உதவுவதற்காகவும் இந்த சம்பிரதாயங்கள் நடைமுறையில் இருக்கலாம்.

இரண்டாம் கடனும் மூன்றாம் கடனும் பொதுவாகச் சில விமரிசனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆசிரம அமைப்பில் முதல் நிலையான மாணவ பருவத்திலிருந்து நான்காம் நிலையான சந்நியாச பருவத்துக்கு நேரடியாகச் செல்லும் சுதந்திரத்தை வலியுறுத்துபவர்களே இந்த விமரிசகர்கள். ஆசாரிய சங்கரரது நிலைப்பாடும் இதுவே. ஆனால், இதை மறுப்பவர்கள், முன்னோர்களுக்கும் தெய்வங்களுக்கும் உரிய கடனைச் செலுத்தாதவர்கள் மோட்சத்தைக் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது என்று சொல்கின்றனர். எனவே மிக இளம் வயதில் துறவு மேற்கொள்ளும் பாலசந்நியாசம் சாஸ்திர விரோதமானது என்பது இவர்களது நிலைப்பாடு.

## பஞ்சமகா யக்ஞங்கள்

இந்து சமய பண்பாட்டின்படி தொல்காலம் தொட்டே தினமும் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லப்படும் ஐந்து கடமைகளும் பஞ்சமகா யக்ஞங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் யாகங்கள் என்று சொல்ல முடியாது, இவை அனைத்தும் அக்னி வளர்த்து ஆகுதி அளிப்பவை அல்ல. ஆனாலும் அவை யக்ஞங்கள் என்று அழைக்கப்பட காரணம், இந்து மதத்தைச் சார்ந்தவனின் வாழ்வில் அவற்றுக்கு அவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பதுதான்.



www.iyachamy.com

www.iyachamy.com

இவை முறையே

1. பிரம்ம யக்ஞம் – பிரம்மத்துக்கு அளிக்கப்படும் யாகம்
2. தேவ யக்ஞம் – தெய்வங்களுக்கு அளிக்கப்படும் யாகம்
3. பூத யக்ஞம் – அனைத்து உயிர்களுக்கும் அளிக்கப்படும் யாகம்,
4. பித்ரு யக்ஞம் – மூதாதையர்களுக்கு அளிக்கப்படும் யாகம்,
5. மானுஷ்ய யக்ஞம் – மனிதர்களுக்கு அளிக்கப்படும் யாகம்

என்று ஐவகைப்படும்.

வேதங்கள் முதல் நவீன சாஸ்திரங்கள் வரை பஞ்சமகா யக்ஞங்கள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு இந்துவும் கட்டாயம் செய்ய வேண்டிய நாற்பது சம்ஸ்காரங்களில் கௌதம ரிஷியும் மனுவும் இவற்றையும் சேர்த்துக் கொண்டிருப்பது பஞ்ச மகா யக்ஞங்களின் தாக்கத்தை உணர்த்துகிறது.

பிற யாகங்களிலிருந்து தினமும் செய்யப்பட வேண்டிய இந்த பஞ்ச மகாயாகங்கள் எப்படி வேறுபடுகின்றன என்றால், இந்த ஐந்தையும் செய்வதில் எந்த பலனும் இல்லை, மிகவும் துவக்க நிலையில் உள்ள உயிர் முதல் சக மனிதர்கள், மூதாதையர்கள், தெய்வங்கள், பரப்பிரம்மம் என்று உலகில் உள்ள அனைத்தையும் நேசிப்பதன் வெளிப்பாடாகவே இவை அமைந்திருக்கின்றன என்பதுதான்.

பிரம்ம யக்ஞம் என்பது, சமய நூல்களைக் கற்பது, பிறருக்குக் கற்றுத் தருவது, புனித மந்திரங்களைச் சொல்வது போன்ற சமயச் சடங்குகள். தர்ப்பணமும் ஒரு பிரம்ம யக்ஞம் என்று சிலர் சொல்கின்றனர்.

தேவ யக்ஞம் என்பது பிரம்மத்தை பல்வேறு தெய்வ வடிவில் வழிபடுவதும், ஹோமம் வளர்த்து வழிபடுவதும் என்று சொல்லப்படுகிறது.

பூத யக்ஞம் என்பது நாய்கள், காகங்கள், எறும்புகள், பூச்சிகள் முதலானவற்றோடு உணவைப் பகிர்ந்து கொள்ளுதல்.

பித்ரு யக்ஞம் என்பது மறைந்தவர்களுக்கு ஆகுதி அளித்தல். தர்ப்பணம், பிண்ட தானம், ஸ்ரார்த்தம் முதலானவை பித்ரு யக்ஞங்கள்.

மனுஷ்ய யக்ஞம் என்பது அதிதிகளை வரவேற்றல். வீட்டைவிட்டு வெளியே சென்று அதிதிகளை வரவேற்று, அவர்களுக்கு அன்னம், தண்ணீர். ஆசனம் முதலியவை அளித்து கௌரவித்து, ஓய்வெடுக்கவும் உறங்கவும் தக்க இடம் கொடுத்து, அவர்களை அருகில் நின்று உபசரித்து, அவர்களோடு சற்று தொலைவு வரை சென்று வழியனுப்புவது என்று மனுஷ்ய யக்ஞம் விதிக்கப்பட்டிருக்கிறது.

## இந்து சமயத்தில் தீர்த்த யாத்திரைகள்

பக்தியும் சிரத்தையும் உள்ள ஒருவன் தன் சமயத்தில் விதிக்கப்பட்டுள்ள புனித தலமொன்றுக்கு மேற்கொள்ளும் பயணம் யாத்திரை என்று சொல்லப்படுகிறது. உலகில் அனைத்து சமயங்களிலும் உள்ளவர்கள் புனிதம் என்று கருதப்படும் இடங்களுக்கு தங்கள் வாழ்நாளில் பல யாத்திரைகள் மேற்கொள்கின்றனர். கிருத்தவர்கள் ஜெருசலேமுக்கும் பௌத்தர்கள் கயைக்கும் செல்ல வேண்டும் என்று பல நியதிகளும் உண்டு. இதில் இந்து சமயமும் விலக்கல்ல. ஆனால் இங்கு என்ன விசேஷம் என்றால் இந்து சமயங்களில் ஓர் இந்து சென்று வர வேண்டிய திருத்தலங்கள் அல்லது யாத்திரைத் தளங்கள் ஏராளம் உண்டு. இவற்றில் பல எந்த ஒரு தெய்வம் அல்லது புனிதருடனும் தொடர்பு கொண்டதாக இல்லாமல் இருக்கலாம். ஒவ்வொரு தலத்துக்கும் தனக்கே உரிய தெய்வங்கள், தொல்கதைகள் இருப்பதே வழக்கு. இத்தகைய யாத்திரைகள் தீர்த்த யாத்திரைகள் என்று அழைக்கப்படுகின்றன. தீர்த்தம் என்பது திருத்தலம் என்றும் பொருட்படும்.

## தீர்த்த யாத்திரையின் வரலாறும் பொருளும்

சன்னிதிகள், கோவில்கள், இறைஞானிகளின் அவதார தலங்கள் போன்றவற்றைத் தவிர மலைகள், வனங்கள், நதிகளும் இந்து சமயத்தில் புனிதமாகக் கருதப்படுகின்றன. எனவே அவையும் திருத்தலங்களாக வழிபடப்படுகின்றன.

www.iyachamy.com

மிகவும் பழமை வாய்ந்த வேதங்கள் தொட்டு பல்வேறு புனித தலங்கள், நதிகள், வனங்கள் மற்றும் மலைகள் இந்து சமய நூல்களில் விவரிக்கப்படுகின்றன. தீர்த்தம் என்று சொன்னால், புனிதமான ஒரு நதி அல்லது கடல் அல்லது குளம் என்று நீர்நிலையை ஒட்டிய திருத்தலம் என்று பொருள்படும். க்ஷேத்ரம் வேறு தீர்த்தம் வேறு. க்ஷேத்ராடனம் என்பது நீர்நிலையை ஒட்டியதாக இல்லாத வேறொரு திருத்தலத்துக்கு மேற்கொள்ளப்படும் யாத்திரை. தீர்த்தங்களும் க்ஷேத்ரங்களும் வேத காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான தர்ம சாஸ்திரங்களில் விவரிக்கப்படுகின்றன.

ரிக் வேதத்தில் புனித நதிகள் குறிப்பிடப்படுகின்றன. உடலின் நோய்கள் மட்டுமல்லாமல் பாபங்களையும் அவை சுத்திகரிப்பதாய் போற்றப்படுகின்றன. சரஸ்வதி, சரயு, சிந்து என்ற மூன்று நதிகளும் தெய்வீகத் தன்மை கொண்ட தாய்கள் என்று வேதங்களில் வழிபடப்படுகின்றன.

தெய்வங்கள் அனைத்தும் நீர்நிலைகளில் இருப்பதாக தைத்திரிய சம்ஹிதை குறிப்பிடுகிறது. புண்ணியங்களை மட்டுமல்லாமல் மகிழ்ச்சியையும் நதிகள் அளிக்கின்றன என்று அதர்வ வேதம் சொல்கிறது.

நேரடியாக தீர்த்தங்களையும் க்ஷேத்ரங்களையும் பேசாத போதும், தர்ம சாஸ்திரங்கள் மலைகள், வனங்கள், நதிகளைப் புனிதம் என்று போற்றுகின்றன. கௌதம, பௌதாயன, வசிஷ்ட தர்ம சாஸ்திரங்கள் எல்லா மலைகள், நதிகள், குளங்கள், ஆசிரமங்கள், கோசாலைகள், கோயில்களும் பாபத்தைப் போக்கும் என்று சொல்கின்றன. ஸ்ரீமத் பாகவத மகாபுராணம், பிரம்மாண்ட புராணம் இவ்விரண்டும் புனித மலைகள் என்று நீண்ட ஒரு பட்டியலிடுகின்றன. வேதங்களும் புராணங்களும் புனித வனங்களைக் குறிப்பிடுகின்றன. இவை தவிர, தீர்த்தங்களையும் க்ஷேத்ரங்களையும் பேசும் புராண இலக்கியமும் அதன் பின்வந்த இலக்கியங்களும் திவ்யதேசங்கள், கோவில்கள் என்று யாத்திரை மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தலங்கள் எவை, அந்த அளவு பொருட்படுத்தப்பட வேண்டாதவை எவை என்று விரிவாக விவாதிக்கின்றன.

www.iyachamy.com

மேற்கண்ட விஷயங்களைப் பார்க்கும்போது, பண்டைக்காலம் தொட்டே இந்துக்கள் தீர்த்த யாத்திரைகளுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. வாழ்நாளில் எவ்வளவு தீர்த்த யாத்திரை மேற்கொள்ள இயலுமோ அவ்வளவு தலங்களைத் தேர்ந்தெடுத்து பயணிக்கும்படி ஒவ்வொரு இந்துவுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. சாதி, தேசம் வர்ண வேறுபாடு கடந்து அனைவரும் தீர்த்த யாத்திரை மேற்கொள்ள முடியும்.

பல சாஸ்திரங்கள் தீர்த்த யாத்திரை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை விவரிக்கின்றன. தனியாகவோ அல்லது குடும்பத்தாருடனோ அல்லது நண்பர்களுடனோ யாத்திரை மேற்கொள்பவர்கள், பயணம் கிளம்புவதற்கு முந்தைய தினம் உண்ணா நோன்பிருந்து, புலன் நாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் நீண்ட நேரம் கவனம் செலுத்தி மனதை நெறிபடுத்த வேண்டும். இவையெல்லாம் யாத்திரையின் அனைத்து பயன்களையும் பெற விரும்புபவர்களுக்குச் சொல்லப்படுபவை. புதிய ஒரு அந்நிய இடத்தில் எதிர்கொள்ள வேண்டிய பல்வகைப்பட்ட சூழ்நிலைகளை சமநிலை குலையாமல் அணுக உதவுவதை இந்த வழிமுறைகள் நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடும்.

யாத்திரைத் தலத்தை அடைந்ததும் பின்வரும் செயல்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது- ஸ்நானம் அல்லது குளியல், ஜபம் அல்லது நாமசங்கீர்த்தனம் – உபதேசம் பெற்ற மந்திரத்தையோ இஷ்டதெய்வத்தின் பெயரையோ ஜெபித்தல், ஹோமம் அல்லது அக்னிக்கு ஆகுதியளித்தல், முண்டனம் அல்லது மொட்டை போடுதல், ஸ்ராத்தம் அல்லது மறைந்த மூதாதையர் மற்றும் நண்பர்களுக்கு வழிபாடு செலுத்தல், தானம் அல்லது ஏழை எளியவர்களுக்கு தன்னால் இயன்ற உதவி செய்தல்.

இவற்றுள் மொட்டை போட்டுக் கொள்வதையும் மூதாதையர் வழிபாட்டையும் தன்விருப்பத்துக்கு விட்டுவிடலாம் என்று சில சாஸ்திரங்கள் பரிந்துரைக்கின்றன. சில சாஸ்திரங்கள் ஹோமம் பற்றி பேசுவதேயில்லை. நவீன யாத்திரிகர்கள், மரணத்தைத் தவிர பிற சமயங்களில் இந்த மூன்றையும் தவிர்த்து விடுகின்றனர்.

www.iyachamy.com

யாத்திரை முடிந்து வீடு திரும்பும்வரை ஒருவன் தன் எண்ணம், செயல், வாக்கு முதலானவற்றில் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். ஜெபங்களை முறை தவறாமல் தொடர வேண்டும். கோவில்களில் வழிபட்ட அத்தனை சாதுக்களையும் தெய்வங்களையும் அங்கு அறிந்துகொண்ட தலபுராணங்களையும் இறை உரைகளையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## தீர்த்த யாத்திரையின் நோக்கம்

பாபங்களும் தீவினைகளும் நீங்கும் என்பதும், புண்ணியம் சேரும் என்பதுமே தீர்த்த யாத்திரை மேற்கொள்வதற்கான மிகப்பெரும் காரணமாக இருக்கிறது. உடலையும் உள்ளத்தையும் சுத்திகரித்துக் கொண்டு வாழ்வில் மகிழ்ச்சியடைவது தீர்த்த யாத்திரை மேற்கொள்வதற்கான அடுத்த காரணமாக இருக்கிறது.

பண்டைக்காலங்களில் மிகவும் மோசமாகப் பிளவுபட்டிருந்த அரசுகளாக இருந்த தேசத்தை ஒன்றுபட்ட தேசமாகக் காண உதவிய பல காரணங்களில் தீர்த்தயாத்திரைகளும் ஒன்றாக இருந்திருக்கலாம். நவீன காலத்திலும்கூட வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பது போன்ற பிழைபுரிதல்களைக் களைய உதவும் கிரியா ஊக்கிகளாக இவைச் செயல்படுகின்றன.

இயல்பாகவே நாம் தீர்த்த யாத்திரையில் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறோம். தங்களையே மையமாகக் கொண்ட குறுகிய வட்டத்துக்கு வெளியே செல்ல, குறுங்குழு மனப்பான்மையைக் கடந்து நோக்க உதவும் தூண்டுதலை தீர்த்த யாத்திரைகள் அளிக்கின்றன. தங்களுக்குத் தெரிந்ததைக் காட்டிலும் பல உண்மைகள் உலகில் இருக்கின்றன என்ற விரிவான பார்வை கிட்டுகிறது. நடைமுறை அனுபவத்தையொட்டி தம் குழந்தைகளுக்கு அற மதிப்பீடுகளையும் ஆன்மீக விழுமியங்களையும் கற்றுக் கொடுக்க பெற்றோர்களுக்கும் தீர்த்த யாத்திரைகள் உதவுகின்றன.

புண்ணியம் பெற மட்டுமல்ல, பிராயசித்தமாகவும் தீர்த்த யாத்திரைகளை சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. பழைய காலத்தில், பாரத் பரிகிரமா என்ற பெயரில் இந்தியாவெங்கும்

www.iyachamy.com

விரவியுள்ள எண்ணற்ற புண்ணிய தலங்களுக்கு பாதயாத்திரை செல்வது பொதுவான வழக்கமாக இருந்திருக்கிறது. சரியான உணர்வோடும் பக்தியுணர்வோடும் தீர்த்த யாத்திரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. மந்திரங்கள், தீர்த்தங்கள், குரு, தெய்வம், ஜோதிடன் மருத்துவன் ஆகிய விஷயங்களை ஒருவன் எந்த மனநிலையில் அணுகுகிறானோ அதுவே வெற்றியைத் தீர்மானிக்கிறது என்று ஒரு பழமொழியும் இந்தியாவில் உண்டு.

இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற திருத்தலங்களில்

பொதுப் பட்டியல் இது

| திருத்தலம் | மூலவர் | இடம் |
|---|---|---|
| சோம்நாத் | சோம்நாத் மகாதேவ் | குஜராத் |
| ஸ்ரீசைலம் | மல்லிகார்ஜுனர் | ஆந்திர பிரதேசம் |
| உஜ்ஜையின் | மகாகாலேஷ்வர் | மத்திய பிரதேசம் |
| ஓம்காரேஷ்வர் | ஓம்காரேஷ்வர் | மத்திய பிரதேசம் |
| கேதர்நாத் | கேதாரேஷ்வர் | உத்தர்கண்ட் |
| பிரஹ்ம்பூர் | பீமேஷ்வர் | குஜராத் |
| வாரணாசி | விஸ்வநாதர் | உத்தர பிரதேசம் |
| நாசிக் | த்ரயம்பகேஸ்வரர் | மகாராஷ்டிரா |
| பார்லி | ஸ்ரீவைத்யநாதர் | ஆந்திர பிரதேசம் |
| துவாரகா | ஸ்ரீகிருஷ்ணர் | குஜராத் |
| துவாரகா | ஸ்ரீநாகேசவரர் | குஜராத் |
| ராமேஸ்வரம் | இராமநாதர் | தமிழ் நாடு |
| எல்லோரா | குஷ்மேஷ்வர் | மகாராஷ்டிரா |
| சிதம்பரம் | நடராஜர் | தமிழ் நாடு |
| திருச்சிராப்பள்ளி | ஜம்புலிங்கேஸ்வரர் | தமிழ் நாடு |
| திருவண்ணாமலை | அருணாசலேஸ்வரர் | தமிழ் நாடு |
| ஸ்ரீ காலஹஸ்தி | காளத்தீஸ்வரர் | ஆந்திர பிரதேசம் |
| காஞ்சிபுரம் | ஏகாம்பரேஸ்வரர் | தமிழ் நாடு |
| அயோத்யா | ஸ்ரீராமர் | உத்தர பிரதேசம் |

www.iyachamy.com

| | | |
|---|---|---|
| ஹரித்வார் | ஸ்ரீகங்கா மா | உத்தரகண்ட் |
| மதுரா | ஸ்ரீகிருஷ்ணர் | உத்தர பிரதேசம் |
| அமர்நாத் | அமரேஸ்வரர் | காஷ்மீர் |
| புவனேஸ்வர் | லிங்கராஜர் | ஒரிசா |
| தஞ்சாவூர் | பிருஹதேச்வரர் | தமிழ் நாடு |
| கும்பகோணம் | கும்பேஸ்வரர் | தமிழ் நாடு |
| சென்னை | ஸ்ரீ பார்த்தசாரதி | தமிழ் நாடு |
| சென்னை | கபாலீஸ்வரர் | தமிழ் நாடு |
| திருநெல்வேலி | நெல்லையப்பர் | தமிழ் நாடு |
| பிள்ளையார்பட்டி | பிள்ளையார் | தமிழ் நாடு |
| திருச்சி | உச்சிப்பிள்ளையார், தாயுமானவர் | தமிழ் நாடு |
| திருவையாறு | பஞ்சநதீஸ்வரர் | தமிழ் நாடு |
| திருவாரூர் | தியாகராஜர் | தமிழ் நாடு |
| காஞ்சிபுரம் | காமாஷி அம்மன் | தமிழ் நாடு |
| திருநாராயணபுரம் (மேலக்கோட்டை) | திருநாராயணர் | தமிழ் நாடு |
| சோளிங்கர் | யோக நரசிம்மசுவாமி | தமிழ் நாடு |
| கன்னியாகுமரி | பகவதி அம்மன் | தமிழ் நாடு |
| விஜயவாடா | கனகதுர்கா | ஆந்திர பிரதேசம் |
| கிர்னார் | தத்தாத்ரேயர் | குஜராத் |
| கிர்னார் | கோரக்நாதர் | குஜராத் |
| கிர்னார் | அம்பா தேவி | குஜராத் |
| கோலாப்பூர் | மகாலட்சுமி | மகாராஷ்டிரா |
| நைமிசாரணியம் | லலிதா தேவி | உத்தர பிரதேசம் |
| அமர்கண்டக் | நர்மதா தேவி | சத்தீஸ்கர் |
| விஜயநகர் | விருபாகஷ்ர் | கர்நாடகா |
| சித்திரகூடம் | ஸ்ரீராமர் | மத்திய பிரதேசம் |
| பிருந்தாவனம் | ஸ்ரீகிருஷ்ணர் | உத்தர பிரதேசம் |
| குருக்ஷேத்ரம் | ஸ்தானேஷ்வர் மகாதேவ் | ஹரியானா |
| அலகாபாத்/ பிரயாகை | பேணி மாதவ் | உத்தர பிரதேசம் |
| கயை | கதாதரர் | பீகார் |
| பூரி | ஸ்ரீ ஜகன்னாதர் | ஒரிசா |
| மதுரை | மீனாட்சியம்மன் | தமிழ்நாடு |
| பந்தர்பூர் | ஸ்ரீ விட்டலர் | மகாராஷ்டிரா |

www.iyachamy.com

| | | |
|---|---|---|
| சிருங்கேரி | சாரதா தேவி | கர்நாடகா |
| ஸ்ரீரங்கம் | ஸ்ரீ ரங்கநாதர் | தமிழ் நாடு |
| பத்ரிநாத் | பத்ரிநாராயணர் | உத்தராகண்ட் |
| புஷ்கர் | ஸ்ரீ பிரம்மர் | ராஜஸ்தான் |
| பத்ராசலம் | ஸ்ரீராமர் | ஆந்திரபிரதேசம் |
| திருப்பதி | ஸ்ரீ வேங்கடேஸ்வரர் | ஆந்திரபிரதேசம் |
| குவஹாத்தி | காமாக்ஷி | அசாம் |
| திருவனந்தபுரம் | அனந்தபத்மநாபன் | கேரளம் |
| கொல்கத்தா | மகாகாளி | மேற்கு வங்கம் |
| நாத் த்வாரா | ஸ்ரீநாதர் | ராஜஸ்தான் |
| மவுண்ட் அபு | காளிகா தேவி | ராஜஸ்தான் |
| மிதிலா | சீதா தேவி | பீகார் |
| ஆலந்தி | ஞானேஸ்வர் | மகாராஷ்டிரா |
| குருவாயூர் | ஸ்ரீகிருஷ்ணர் | கேரளம் |
| உடுப்பி | ஸ்ரீகிருஷ்ணர் | கேரளம் |
| பழனி | முருகன் | தமிழ் நாடு |
| சுவாமிமலை | சுவாமிநாதன் | தமிழ் நாடு |
| மன்னார்குடி | ராஜகோபால சுவாமி | தமிழ் நாடு |
| சுசீந்திரம் | ஆஞ்சநேயர் | தமிழ் நாடு |
| சபரிமலை | ஐயப்பன் | கேரளம் |
| மும்பை | மும்பா தேவி | மகாராஷ்டிரா |
| மும்பை | சித்தி விநாயகர் | மகாராஷ்டிரா |
| திருச்சூர் | வடக்கநாதர் | கேரளம் |
| கோட்டயம் | ஏட்டுமானூர் | கேரளம் |
| எர்ணாகுளம் | பூர்ணத்ரயிஷர் | கேரளம் |
| வேளுர் | மகாதேவர் | கேரளம் |
| கொல்லூர் | மூகாம்பிகை | கர்நாடகா |
| பங்களூரு | கவி கங்காதேச்வர் | கர்நாடகா |
| அகோபிலம் | ஸ்ரீ நரசிம்மர் | ஆந்திர பிரதேசம் |
| அன்னவரம் | சத்யநாராயனர் | ஆந்திர பிரதேசம் |
| அனகபள்ளி | கோடிலிங்கேஸ்வரர் | ஆந்திர பிரதேசம் |
| விசாகபட்டினம் | வராகலட்சுமி நரசிம்மச்வாமி | ஆந்திர பிரதேசம் |
| கொலாபா | பல்லால விநாயகர் | மகாராஷ்டிரம் |
| புனே | பீமஷங்கர் | மகாராஷ்டிரம் |

www.iyachamy.com

| | | |
|---|---|---|
| ராம்டெக், நாக்பூர் | ஸ்ரீ ராமர் | மகாராஷ்டிரம் |
| ஜெய்பூர் | கோவிந்த தேவ்ஜி | ராஜஸ்தான் |
| உதய்பூர் | ஏகலிங்நாத் | ராஜஸ்தான் |
| அம்ரிட்ஸர் | லட்சுமிநாராயணர் | பஞ்சாப் |
| பாட்டியாலா | காளி தேவி | பஞ்சாப் |
| ஜம்மு | வைஷ்ணோதேவி | ஜம்மு காஷ்மீர் |
| ஜம்மு | ரகுநாத்ஜி | ஜம்மு காஷ்மீர் |
| காங்க்ரா | ஜ்வாலாமுகி | ஜம்மு காஷ்மீர் |
| ருத்ரபிரயாகை | திரியுக்நாராயண் | உத்தரகண்ட் |

பாரத புனித நதிகள்

| நதி | மூலம் |
|---|---|
| கங்கை | கங்கோத்ரிt |
| யமுனை | யமுனோத்ரி |
| சரஸ்வதி | ஷிவாலிக் மலைத்தொடர்கள், இமாலயம் |
| சிந்து | கைலாஷ், இமாலயம் |
| கோதாவரி | பிரம்மகிரி, திரயம்பகேச்வரர் |
| நர்மதை | அமர்கண்டக் |
| காவிரி | தலைக்காவிரி, குடகு |
| தாமிரபரணி / பொருணை | அகஸ்தியர் கூடம், தமிழ்நாடு |
| தபதி | சதாபூர் மலைத்தொடர்கள், விந்திய மலைகள் |
| கிருஷ்ணா | சாகிய மலைகள், மகாபலேஷ்வர் |
| மகாநதி, | சிகாவா, ராய்பூர், மத்திய பிரதேசம் |
| சரயு | குமான் மலைகள் |
| பிரம்மபுத்ரா | மானசரோவர், திபெத் |

## இந்து சம்ஸ்காரங்கள்

### சம்ஸ்காரத்தின் பொருள்

சம்ஸ்காரம் என்ற சொல்லுக்கு பல பொருள் உண்டு. அவற்றில், "நினைவுச் சுவடு", "சுத்திகரிப்பு", "ஏதோ ஒரு நன்மை செய்வது" என்ற அர்த்தத்தில் சம்ஸ்காரங்கள் அதிகம் பேசப்படுகின்றன.

www.iyachamy.com

தத்துவம் பேசும்போது, இந்தச் சொல் சமூக, சமய சடங்குகளைக் குறிக்கிறது. வாழ்வின் ஒரு பருவத்திலிருந்து வேறொரு பருவத்துள் நுழையும்போது செய்யப்படும் சடங்குகள், சம்பிரதாயங்கள் இவை. உடல், உள்ளம், புத்தி முதலானவற்றை சுத்திகரித்து புனிதமாக்கும் நோக்கம் கொண்ட பழக்க வழக்கங்களே சம்ஸ்காரங்கள். இவை தவிர, சம்ஸ்காரம் என்ற சொல், ஒரு கலாசார பாரம்பரியத்தின் ஒட்டுமொத்த தொகுப்பையும், தனி மனித வளர்ப்பையும் பேசப் பயன்படுகிறது.

ஒரு மனிதனின் வாழவினூடாக அவனை ஒரு உயர் வாழ்வுக்குத் தகுதி கொண்டவனாகச்\ செய்து, ஆதர்ச இலக்குக்கு இட்டுச் செல்லும் புனிதச் சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்களின் தொடரே சம்ஸ்காரங்கள். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்துக்கும் உரிய குறிப்பிட்ட ஒரு சம்ஸ்காரம் அல்லது ஒருசில சம்ஸ்காரங்கள் உண்டு.

சாதி, சமய நம்பிக்கை, சமூக நிலை எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு இந்துவும் ஒருசில சம்ஸ்காரங்களைத் தன் வாழ்நாளில் செய்தாக வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. நூற்றாண்டுகளாய்தொடரும் மாற்றத்தில், இன்று இந்து சமூகத்தில் ஒரு சிலருக்கே உரியவை என்று இந்த சம்ஸ்காரங்கள் கருதப்படுகின்றன; ஆனால் உண்மையில், தாமறியமாலே நம்மில் ஏராளமானவர்கள் இந்த சம்ஸ்காரங்களை இப்போதும் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

www.iyachamy.com

## சம்ஸ்காரங்களின் நோக்கம்

வெளியிலிருந்து பார்க்கும்போது, சமூக-சமயச் சடங்குகள் போல் தெரிந்தஆம், சம்ஸ்காரங்கள் அடிப்படையில் ஆன்மிக சாதனையின் நடைமுறைத் தொகுப்பாக இருக்கிறது. ஒரு மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாகவும் இருக்கின்றன.

சமஸ்காரங்க்ளின் நடைமுறைப் பயன்பாடு என்ன என்று பார்ஹ்டால், ஒரு மனிதனின் வளர்ச்சிப் பாதையில் மிகப் பெரிய தாக்கத்தையும் பாதிப்பையும் இவை ஏற்படுத்துகின்றன. தனி மனித அளவில் ஆன்மீக நெறிப்படுத்துதலை அளித்து, ஒரு சமூகத்தின் முதிர்ச்சியடைந்த கலாச்சாரத்தின் உறுப்பினன் ஆகும் தகுதியை அவனுக்குக் கொடுக்கிறது. சூல் கொண்ட நாள் முதல் துவங்கும் இந்த சம்ஸ்காரங்கள் ஒரு மனிதனின் உடலிலும் உள்ளத்திலும்

தொடர்ந்து தேவைக்குத் தகுந்த நற்பண்புகளைத் தோற்றுவித்து, வாழ்நாள் முழுமையும் தொடர்ந்து அவனது ஆளுமை வளர்ச்சியடையத் துணை செய்கின்றன.

நவீன உலகில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் தீவிர மதநம்பிக்கை மற்றும் மூட நம்பிக்கைகளின் தொகுப்பு என்று இழிவு செய்யப்பட்டாலும் அவற்றுக்கு ஆழமான, மிக உயர்ந்த அர்த்தம் உள்ளது. அது, வெளிப்பார்வைக்கு எளிதில் புலப்படாது.

கடந்த சில நூற்றாண்டுகளில் தோன்றியவற்றைத் தவிர பிற அனைத்து இந்து சமயச் சடங்குகளுக்கும் சமூக, பண்பாட்டு, ஆன்மீக, மறைஞான முக்கியத்துவம் உள்ளது- மனிதனின் மன வளர்ச்சியின் தேவைகளையும் இவை பெரும்பாலான சமயம் நிறைவு செய்கின்றன.

ஆனால் துரதிருஷ்டவசமாக, தெய்வங்களைப் ப்ரீதி செய்யவும் பரிகாரம் செய்யவுமே சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றன என்ற ஒரு நம்பிக்கை தற்காலத்தில் இருக்கிறது. சம்ஸ்காரங்களும் இப்படிதான் பார்க்கப்படுகின்றன. இதனால், மிகச் சிலரே சம்ஸ்காரங்களை முறையான வகையில் கடைபிடிக்கின்றனர்.

எந்த ஒரு கடவுளையோ அல்லது குறிப்பிட்ட சில கடவுளரையோ திருப்தி செய்வதற்காக சம்ஸ்காரங்கள் செய்யப்படுவதில்லை. இன்னும் மேலான ஒரு வாழ்வை நோக்கிச் செல்லும் தகுதி பெறும் வகையில் மனிதனின் உடலையும் உள்ளத்தையும் சுத்திகரித்து புனிதப்படுத்தும் நோக்கத்தில் செய்யப்படும் சடங்குகள் இவை. உடலின் இயக்கத்தைக் கொண்டு உடலிலும் உள்ளத்திலும் தாக்கம் ஏற்படுத்தி, மனிதனுள் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி, சமூகத்தில் அவனுக்குரிய இடத்தை அவன் வெற்றிகரமாக அடையச் செய்து, அவனுக்குச் சாத்தியப்படும் ஆன்மீக வளர்ச்சியையும் சம்ஸ்காரங்கள் அளிக்கின்றன. எனவே, குறிப்பிட்ட சில அடிப்படை நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் தொகையே சம்ஸ்காரங்கள் என்று சொல்லலாம். இவை ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு துணை நிற்கின்றன, மனிதன் கற்றுத்தேரும் வாழ்வனுபவங்களுக்குச் செறிவு செய்து, அவனுக்கு ஊட்டம் அளிக்கின்றன.

www.iyachamy.com

உபநயனம் அல்லது பூணூல் அணிவித்தல் போன்ற சம்ஸ்காரங்கள் ஆன்மீக தேவைகளையும் பண்பாட்டு தேவைகளையும் நிறைவு செய்கின்றன. நாமகரணம், அல்லது பெயர் சூட்டுதல், அன்னபிரச்னம் அல்லது குழந்தைக்கு முதல் முறை திட உணவு ஊட்டுதல், போன்ற சில சம்ஸ்காரங்கள் அன்பு, நேசம், நல்லிணக்கம் முதலான உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன. கர்ப்பதானம் போன்ற சம்ஸ்காரங்கள் ஆழமான மறைஞான, ஆன்மீக அர்த்தம் பொதிந்தவை. விவாகம், அல்லது, திருமணம் இரு உடல்களும் ஆளுமைகளும் இணைவதைச் சமயச் சடங்காக அங்கீகரிக்கின்றன, இது சமூக அமைப்பின் இடையறாத தொடர்ச்சியையும் உறுதி செய்ய உதவுகிறது.

## சம்ஸ்காரங்களின் துவக்கமும் தொடர்ச்சியும்

முற்கால சம்ஸ்கிருத பனுவல்களில் உள்ள தகவல்களை இங்கு விவரிக்கிறேன். ஆனால், சம்ஸ்கிருத மொழியில் துவங்கி, அதனால் முறைமைப்படுத்தப்படுபவை என்று சம்ஸ்காரங்கள் குறித்து கூறுவதாகப் புரிந்து கொள்ளக் கூடாது. இந்தியாவெங்கும் உள்ள பிராந்திய மொழி நூல்கள் ஏராளமானவற்றில் சம்ஸ்காரங்கள் விரிவாக விளக்கபப்ட்டுள்ளன, வெவ்வேறு வடிவங்களில் அவை கடைபிடிக்கப்படுகின்றன. இங்கு சொல்லப்படுவது சம்ஸ்கிருத நூல்களை மட்டும் கொண்டு அடையப்பட்ட பார்வையில்ல, பரவலான வழக்கத்தில் இருக்கும் சடங்குகளின் அடிப்படை நம்பிக்கைகள் இவை. வேறெந்த பொருளும் இங்கு கற்பிக்கப்பட வேண்டியதில்லை.

சடங்குகளும் சமயச் சம்பிர்தாயங்களுமாக தொகுத்துப் பார்த்தால் சம்ஸ்காரங்கள் தொன்மையானவை. உலகின் மிகப் புராதான சடங்குகளாகக்கூட இவை இருக்கலாம். ஏனெனில், காலத்தில் மிக முற்பட்ட ரிக் வேத சம்ஹிதையில் இவை பேசப்படுகின்றன. சந்தேகத்துக்கிடமின்றி இவை மிகப் பெரும் மாற்றங்களை எதிர்கொண்டிருக்கின்றன, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களைக் காட்டிலும் இன்று இன்னும் பல சமூகக் குழுவினருக்கு உரியதாய் வளர்ந்தும் உள்ளது. முதல் நூல்களிலேயே இவை ஓரளவு விரிவாக விளக்கப்படுகின்றன என்பதைப்

www.iyachamy.com

பார்க்கும்போது, இந்த நூல்கள் எழுதப்படுவதற்கும் முன்னதாகவே இவை நடைமுறையில் இருந்தன என்று தெரிகிறது.

அனைத்து பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் போலவே சம்ஸ்காரங்கள் எழுத்தில் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களின் அதிகாரத்தைக் காட்டிலும் முன்னோர்களின் வழிவந்த, பழக்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவில்தான் கடைபிடிக்கப்படுகின்றன.

துவக்க கால நூல்கள் பலருக்கும் பழக்கப்பட்ட பல்வேறு சடங்குகளை மட்டுமே விவரிக்கின்றன. இப்படிச் செய்ய வேண்டும் என்பது போன்ற விதிமுறைகளோ கட்டுப்பாடுகளோ அவற்றில் இல்லை. ஆனால், இதற்கு மாறாக, அதர்வ வேதத்தில் சமூகச் சடங்குகளும் நடைமுறை சமயமும் மிக விரிவாக விவரிக்கப்படுகின்றன.

வேதங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட நூல்களில், கிருஹ்ய சூத்திரங்களும் புராணங்களும் சம்ஸ்காரங்கள் குறித்து நேரடியாகவும் விரிவாகவும் பேசுகின்றன. இல்லறத்துடன் தொடர்புடைய சடங்குகளைப் பேசுவதால், சம்ஸ்காரங்கள் குறித்த முதன்மை நூலாக கிருஹ்ய சூத்திரங்களே கருதப்படுகின்றன.

எனினும் பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான மத்திய காலகட்டத்தில்தான், வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய சடங்குகளை நெறிப்படுத்தும் விதிமுறைகளின் தொகுப்பாக சம்ஸ்காரங்கள் முழுமையான உருவம் பெற்றன. நடைமுறை தர்மத்தை விவரிக்கும் தொகுப்பான நிபந்தன கிரந்தம், சடங்குகளையும் பழக்கவழக்கங்களையும் தொகுத்து அளிக்கும் மிக விரிவான, பல பகுதிகள் கொண்ட மிகப்பெரும் தொகை நூல். அதில் அனைத்து வகைப்பட்ட சடங்குகளும் அவற்றுக்குரிய வெவ்வேறு தலைப்புகளில் குறிப்பிடப்படுகின்றன.

ஆனால் அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் மிகப்பெரிய கால வேறுபாடு உள்ளது. அதுதவிர, பிராந்திய வேற்றுமைகளும் உள்ளன. எனவே, அந்த அந்த பகுதியின் தேவைக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு தலைப்புகளும் விதிமுறைகளும் அவ்வப்போது ஒவ்வொரு கிரந்தத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கலாம்.ஆனால்

www.iyachamy.com

,அவையே, சடங்குகளின் தொகுப்பாக சம்ஸ்காரங்கள் எவ்வாறு வடிவம் பெற்றன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

சடங்குகளை விவரிக்கும் இந்த உரைகளின் மிக முக்கியமான சிறப்பு, தற்போது நடைமுறையில் உள்ள பல பழக்க வழக்கங்கள் மற்றும் அவற்றின் மூலம் குறித்து இவற்றில் தகவல்கள் கிடைக்கின்றன என்பதுதான். அதிலும் குறிப்பாக, சமூகத்தின் தாழ்த்தப்பட்ட அடுக்குகளில் உள்ளவர்களின் மூடநம்பிக்கைகள் என்று ஒதுக்கப்படும் பழக்கவழக்கங்கள் இந்த கிரந்தங்களில் சம்ஸ்காரங்களாய் தொகுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்கு ஒன்று சொல்லலாம். இந்தியாவெங்கும் உள்ள பல்வேறு சமூகங்கள் சிலவற்றில், சகோதரன் இல்லாத பெண்ணை யாரும் மணம் முடிப்பதில்லை. இந்தப் பழக்கம் இன்றும் உள்ளது. நிபந்தன கிரந்தங்களைக் கொண்டு நாம் இந்த பழக்கத்தின் மூலத்தை மகாபாரதத்தில் காண முடியும். அதற்கும் அப்பால், மூடநம்பிக்கை என்று நாம் கருதும் இந்தப் பழக்கத்தின் வேர்களை மகாபாரதத்துக்கு முந்தைய வேதங்களிலும் காரணம் கண்டு விளக்க முடியும். இந்தப் பழக்கவழக்கங்கள் நல்லவையா அல்லவையா என்ற கேள்வியை இப்போது பேசவில்லை. உள்ளபடியே இன்றுள்ள ஒரு பழக்கத்தைச் சுட்டி, அதன் நம்பிக்கையின் ஆதாரம் எங்கிருந்து வந்திருக்கக்கூடும் எனபதைச் சுட்டிக் காட்ட மட்டுமே செய்கிறேன்.

## சம்ஸ்காரங்களின் எண்ணிக்கை

இர்ண்டாயிரம் ஆண்டுகாலமாக, எந்த எந்த சடங்குகள் சம்ஸ்காரங்களாக மதிக்கப்பட வேண்டும், எவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என்று தீவிரமான விவாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. கௌதமர் தன் தர்ம சூத்திரங்களில் நாற்பது சம்ஸ்காரங்களைப் பட்டியலிடுகிறார். அந்த நாற்பதோடு எட்டு ஆன்ம குணங்களையும் தன் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார். பிற எழுத்தாளர்களும் நூல்களும் பன்னிரெண்டு முதல் நாற்பத்து இரண்டு சம்ஸ்காரங்களைக் குறிப்பிடுகின்றன. சில நூல்கள் எண்ணிக்கை கணக்கு சொல்லாமல், கௌதம தர்ம சூத்திரங்களில் உள்ள சம்ஸ்காரங்களில் பெரும்பாலானவற்றைக் குறிப்பிடுகின்றன.

www.iyachamy.com

இன்றைய சூழலில் கடைபிடிக்கப்படும் பதினாறு சம்ஸ்காரங்களின் பட்டியல் இது. சோடஷ சம்ஸ்காரங்கள் என்று இவை அழைக்கப்படுகின்றன. இதுவே முடிவான பட்டியல் என்று சொல்ல முடியாது. இந்தப் பட்டியலில் உள்ளவையும் சடங்கு, வழக்கம் என்ற அளவில் கடந்த இரு நூற்றாண்டுகளாக நசிந்து வருகின்றன. அதிலும் கடந்த முப்பது ஆண்டுகளில் இந்தப் பதினாறையும் கடைபிடிப்பவர்களின் எண்ணிக்கையும் வெகு வேகமாக குறைந்து வருவதைக் காண முடிகிறது. சொடஷ சம்ஸ்காரங்களைக் கைவிடுபவர்க்ளில் பலர் பிராமண வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். எனவே, இந்தப் பதினாறும் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்று யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது, இவை வேறு வடிவில் கடைபிடிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. சாதி வேறுபாடின்றி அனைவர்க்கும் பொதுவான இந்த சம்ஸ்காரங்கள் இந்து சமூகத்தின் படிநிலையில் எங்கு இருப்பினும், அனைவருக்கும் பொதுவானவை.

## பதினாறு சம்ஸ்காரங்கள் அல்லது சோடஷ சம்ஸ்காரங்கள்

கர்ப்பதானம்– கருவுறுதலுக்கு சமய அங்கீகாரம் அளிக்கும் சடங்கு இது. இந்தச் சடங்கு குறித்து வேறுபட்ட பல கருத்துகள் உண்டு. புதிதாய் மணமான தம்பதியர் முதல்முறை ஒருவரையொருவர் கூடுவதற்கு முன் சொல்ல வேண்டிய மந்திரங்களின் தொகுப்பு இவை என்று சிலர் கருதுகின்றனர், வேறு சிலர், இந்த மந்திரங்களைக் முதல் சம்போகத்தின்போது சொல்ல வேண்டும் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர், ஒவ்வொரு முறை கலவியில் ஈடுபடும்போதும் கணவன் இந்த மந்திரங்களை ஜபிக்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஹோமம் வளர்த்து ஆகுதி அளித்து இந்த மந்திரங்கள் பிரயோகிக்கப்படுவது வழக்கம் என்று சொல்பவர்களும் உண்டு. எது எப்படியானாலும், பாலுறவு அனுபவத்தை ஒரு புனிதச் செயலாக இந்தச் சடங்கு துவக்கி வைக்கிறது.

பும்சவனம் – கருவில் உள்ள குழந்தையை இவ்வுலகில் பிணைத்து, அதற்கு ஊட்டம் அளிக்கும் நோக்கத்தில், கர்ப்பம் தரித்த மூன்றாம் மாதத்தில் இந்தச் சடங்கு செய்யப்படுகிறது. இந்தச் சடங்கில் கருத்தரித்த அன்னை, வேத மந்திரங்களைக் கேட்டபடியே ஒரு மணி



www.iyachamy.com

பார்லியையும், இரு மணி கருப்பு எள்ளையும் சிறிது தயிரையும் உட்கொள்கிறாள். அரச மர வேரைக் குழைத்தும் அதிலிருந்து எடுக்கப்பட்ட சிறிது பாலையும் வலது நாசிக்குள் பூசுவதும் உண்டு.

சீமந்தம்– கர்ப்ப காலத்தின் முக கமுக்கிய கட்டத்தில் தாயையும் கருவையும் பாதுகாக்கச் செய்யப்படும் சடங்கு இது. வழக்கமாக, கர்ப்ப காலத்தின் நான்காம் மாதத்தில் வளர்பிறை நாட்களில், குறிப்பிட்ட சில நட்சத்திரங்களில் சந்திரன் பிரவேசிக்கும்போது இந்தச் சடங்கு நடத்தப்படுகிறது. ஓம் என்ற பிரணவ மந்திரம், அல்லது பூஹ், புவஹ், ஸ்வஹ் என்ற வியாகரங்கள் ஒலிக்க, ஒன்றாய்க் கட்டப்பட்ட மூன்று தர்ப்பை புற்களைக் கொண்டு அன்னையின் உச்சியில் வகிடெடுத்தல் இந்தச் சடங்கு.

ஜாடகர்மம்– குழந்தை பிறந்தபின் ஒன்றை நாட்களுக்குள் நிகழ்த்தப்படும் சடங்கு இது. பூஹ், புவஹ், ஸ்வஹ் என்ற வியாகரங்கள் பிறந்த குழந்தையின் நாவில், சிறிது பொன், நெய், மற்றும் தேன் கலந்த கலவையைத் தந்தை தடவுவது உண்டு.

நாமகரணம்– இது குழந்தைக்கு பெயர் சூட்டும் சடங்கு. பஞ்சாங்கத்தின் துணையோடு குழந்தைக்குப் பொருத்தமான பெயர் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதன்பின், அந்தப் பெயரை, தாயின் வலது செவியில், தந்தை மும்முறை கூறுகிறார். தாய், குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டு, அந்தப் பெயரை மும்முறை கூறுகிறார். குழந்தை பிறந்த நாள், அல்லது அது பிறந்த பத்தாம் அல்லது பன்னிரண்டாம் நாள் இந்தச் சடங்கு நடைபெறுவது வழக்கம்.

நிஷ்க்ரமணம்– குழந்தை முதல் முறை வீட்டைவிட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும்போது செய்யப்படும் சடங்கு. இதை நான்காம் மாதம் செய்வது வழக்கம்.

அன்னப்பிரசனம்– குழந்தைக்கு ஆறு மாதம் ஆனபின் செய்யப்படும் சடங்கு இது. சமைக்கப்பட்ட உணவு, முதல் முறையாகக் குழந்தைக்கு ஊட்டப்படுகிறது. வேக வாய்த்த அரிசியை நெய்யிலும் தேனிலும் பிசைந்து தந்தை குழந்தைக்கு ஊட்டுக்கிறார், அதன்பின் தாயும் அதை உட்கொள்வார். தற்காலத்தில், குழந்தை ஒரு

www.iyachamy.com

கோவிலுக்கோ திருத்தலத்துக்கோ அழைத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள அர்ச்சகர்களின் முன்னிலையில் இந்தச் சடங்கு நிறைவேற்றப்படுகிறது.

சூடாகரணம்– குழந்தையின் தலைமுடியை முதல்முறையாக மழிக்கும் சடங்கு இது. இதை, செளலம் அல்லது முண்டனம் என்றும் சொல்வதுண்டு. குழந்தைக்கு ஒன்று, அல்லது மூன்று அல்லது ஐந்து வயது ஆனபின் இந்தச் சடங்கு செய்யப்படுகிறது. புனர்வசு நட்சத்திரத்தில் இந்தச் சடங்கு நடைபெறுவது வழக்கம். அதைவிட முக்கியமாக, இந்தச் சடங்கு நவமி, அல்லது அமாவாசையை அடுத்த ஒன்பதாம் நாளில் நடைபெறுகிறது.

கர்ணவேதனம்– காது குத்தும் சடங்கு. ஆண் குழந்தைகளின் வலது காதிலும், பெண் குழந்தைகளுக்கு இடது காதிலும் முதலில் துளை இடப்படுகிறது. தந்தை தன் மடிவில் குழந்தையை வைத்துக் கொண்டு காது குத்துவது வழக்கம். ஆனால், தற்போது, ஆசாரி ஒருவரைக் கொண்டு இது செய்யப்படுகிறது.

வித்யாரம்பம்– குழந்தைக்கு நான்கு அல்லது ஐந்து வயதானதும், அதன் கல்வியைத் துவக்கும் சடங்கு இது. குழந்தைக்கு அகரமுதலியின் முதல் சில எழுத்துக்கள் கற்றுத் தரப்படுகின்றன. உலோகத்தாலான ஒரு பாத்திரத்தில் அரிசி குவிக்கப்பட்டு, அதில் இந்த எழுத்துக்களையும் சில மந்திரங்களையும் உரக்கச் சொல்லிக்கொண்டே, குழந்தை எழுதுகிறது.

*உபநயனம்–* யக்ஞோபவீதம் என்று அழைக்கப்படும் பூணூல் அணிவிக்கப்படும் சடங்கு இது. ஐந்து வயது அடைவதற்குமுன் ஆண் குழந்தைக்கு உபநயனம் செய்யப்படுகிறது. முடியிடப்பட்ட முப்புரி நூலொன்று இடம் வலமாக தோளில் அணிவிக்கப்படுகிறது. பிரம்மோபதேசம் என்று சொல்லப்படும் காயத்ரி மந்திரோபதேசமும் அளிக்கப்படுகிறது. உபநயனம் என்ற சொல்லின் வேரசைகள், உப என்பதன் பொருள் அருகில், நயனம்- கொணர்தல், என்ற பொருள் உள்ளவை. எனவே உபநயனம் என்றால் குழந்தையை குரு அல்லது ஆசிரியரிடம் அழைத்துச் சென்று முறையான கல்வி புகட்டுதல் என்று பொருள்படும். பிரம்மோபதேசம் முடிந்தபின் உபநயனம்

www.iyachamy.com

www.iyachamy.com

அளிக்கப்படுகிறது. இது அவனுக்கு இன்னொரு கண் கொடுத்து, புதிய பிறவி அளிப்பதாக நம்பப்படுகிறது.

ப்ரைஸார்த்தம்– வேதக்கல்வியின் துவக்கம். இந்தச் சடங்குக்குப்பின் குழந்தைக்கு வேதங்களும் உபநிடதங்களும் கற்பிக்கப்படுகின்றன. குருகுலவாசமும் இனி துவங்குகிறது.

ருதுசுத்தி– பெண்ணின் முதல் மாதவிடாயின்போது நடத்தப்படும் சடங்கு. இது தொடர்பாக எண்ணற்ற சடங்குகளும் பழக்க வழக்கங்களும் உண்டு.

சமாவர்த்தனம்– பிரம்மச்சரிய ஆசிரமம் என்று சொல்லப்படும் மாணவ பருவம் நிறைவடைவதைக் குறிக்கும் சடங்கு இது.

விவாகம்– திருமணச் சடங்கு. ஆணும் பெண்ணும் மனதளவிலும் உடலளவிலும் கூடுவதற்கு சமய அந்தஸ்து கொடுக்கும் புனிதச் சடங்கு இது. வாழ்வில் வளர்ச்சி காண இது ஒரு தளம் அமைத்துக் கொடுக்கிறது. திருமணம், புலன் இன்பங்களைத் துய்ப்பதற்கு மட்டமான ஏற்பாடு அல்ல. காம விழைவுக்கு நிறைவு காணும்போதே, இல்லற வாழ்வின் பொறுப்புகளையும் கடமைகளையும் சமபங்கு பகிர்ந்து கொள்ளவும் அறிவுருத்தப்படுகிறது. மிருக இச்சைகளைக் கட்டுப்படுத்தி உயர்வான நோக்கங்களையும் அனுபவ யதார்த்தங்களையும் நோக்கித் திருப்பி, நான்கு புருஷார்த்தங்கள், அல்லது இந்து சமூகத்தின் நான்கு இலட்சியங்களை அடைய விவாகமே முதல் படி. . சமூக ஒழுங்கு நலனைக் காக்கவும் திருமண அமைப்பு உதவுகிறது.

அந்த்யேஷ்டி– நீத்தார்களுக்காகச் செய்யப்படும் சடங்கு. மரணதின சடங்குகள் மட்டுமல்ல, இறந்தவர்களுக்கும் பிற தேவதைகளுக்கும் அளிக்கப்பட வேண்டிய ஸ்ராத்தங்கள் என்னென்ன என்று வெவ்வேறு சாஸ்திரங்களில் இந்த சம்ஸ்காரம் குறித்து விளக்கமாக விவரிக்கப்படுகின்றன.

## வேதங்கள்

வேதங்கள்' என்பவை யாவை? அது ஓர் தனி நூலா அல்லது எண்ணற்ற பிற மறைநூல்களின் தொகுப்பா? இந்து சமயத்தில் பல்வேறு புனித மறைகள் இருக்கின்றன என்று கூறினால், சமய வாழ்வில் அவற்றின் பங்களிப்பு என்ன, அவற்றின் முன்னிலையில் வேதங்களின் இருப்புக்கு என்ன பொருள்?

இந்தியாவின் கலாசார விழுமியங்கள் அனைத்தும் வேதங்களில் உள்ளன என்று சொல்லும் மரபுகளும் மக்கள் குழுக்களும் உண்டு. இவர்களில் சிலர், உலகில் உள்ள அனைத்து கலாசார விழுமியங்களும் வேதத்தின் பாற்பட்டவை என்றும் சொல்கின்றனர். இவர்கள் போக இன்னும் சிலர், வேதங்களை ஏற்றுக்கொள்ளாத எண்ணற்ற மரபுகளும் இந்தியாவில் உண்டு என்று கூறுகின்றன.

வேதங்கள் குறித்த பார்வைகள் யாவை, வேதங்கள் யாவை, அவை எவற்றிற்கு ஆதாரமாகின்றன என்ற கேள்விகளுக்கு பக்கச்சார்பின்றி சுருக்கமான விடையளிக்க கட்டுரையின் இந்தப் பகுதியில் முயற்சிக்கிறேன்.

## வேதங்கள் யாவை?

இந்துக்களின் சமயப் புனித நூல்களிலேயே பிரதானமானவை என்று கூறப்படக்கூடிய மறைநூல் தொகுப்புகளே வேதங்கள்.

உலகச் சமய இலக்கியங்கள் அனைத்திடமிருந்தும் தனித்து நிற்பவை வேதங்கள். வேதங்கள் மனிதராலோ, கடவுளாலோ எழுதப்படாதவை என்று இந்து மரபுகள் சொல்கின்றன. வேதங்கள் உலகளாவிய பொதுத்தன்மை கொண்ட விதிகள். அவை, அண்டப் பெருவெளிக்கும் பொருந்துவன, என்றென்றுக்குமான விதிகள். அவற்றுக்கு துவக்கமோ முடிவோ கிடையாது. அவற்றில் மிக அதிக அளவில் மீபொருண்மை பேசப்படுகிறது, பல்வேறு தளங்கள் விவரிக்கப்படுகின்றன, மேலும் அவை இவ்வுலகல்லாத வேற்றுலகுகளைப் பற்றியவை. எனவே அவை, வேறு எந்த சமய நூல்களைப் போலவும் வாசிக்கப்பட முடியாதவை. இவற்றின் தனிப்பெருமை இந்த இயல்புகளால் மட்டும் கிட்டுவதல்ல- இந்து சமயங்களில் உள்ள ஏராளமான புனித நூல்களினிடையே, இவற்றுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தாலும் கிட்டுவது அது.

www.iyachamy.com

ஆனால், அனைத்து மறைநூல்களையும் போலவே வேதங்கள் குறித்த புரிதலும் மாறுபடுகின்றன. பிற சமயங்களின் மறைநூல்களோடு ஒப்பிட்டால் வேதங்கள் குறித்த புரிதலில் இருக்கும் இரு கூறுத் தன்மை மிகப் பரந்ததாக உள்ளது.

ஒருபுறம், வேதங்கள் புனிதமான ஞான நூல் என்று பெருமைப்படுத்தப்படுகின்றன- மிகப் பெரும் படைப்பூக்க நிலையில் இயற்றப்பட்ட கவிதைகள் என்றும் எண்ணற்ற ரிஷிகளின் வாக்கு என்றும் போற்றப்படுகின்றன. இந்த ரிஷிகள் ஞானத்தால் பிரகாசம் பெற்ற தம் மதியில், அனைத்து தெய்வீக சிருஷ்டிக்கும் ஆதாரம் என்றும், பிரபஞ்ச ரகசியத்தை வெளிப்படுத்துபவை என்றும் போற்றப்படும் மந்திர உருவம் தரித்த வேத நாதங்களை அடைந்து, அவற்றை உலகுக்கு அளித்தவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

இதற்கு மாறுபட்ட புரிதலில் வேதங்கள் இன்னும் பண்பாட்டை அடைந்திராத புராதன காலத்தவர்களின் மூடநம்பிக்கைகளும் கற்பனைகளும் மட்டுமே- மிக மேலோட்டமான லாபங்கள், போகங்களில் நாட்டம் கொண்டவை, அறம் சார்ந்த மிகவும் துவக்கநிலைப் புரிதல்களும் சமய வேட்கைகளும் கொண்டவை. இவர்களைப் பொறுத்தவரை, மிகவும் கொண்டாடப்படும் பேரண்ட விவரணைகளும் நுண்மைகளற்ற அரிச்சுவடி நிலைப் பிதற்றல்கள் மட்டுமே.

மேலும், வேதங்களை ஞான நூல்கள் என்று நம்புபவர்களிலும்கூட சிலர், இவற்றில் உள்ளவற்றில் பெரும்பாலான பாடல்கள் லௌகிக சடங்குகளை பேசுபவையே என்கின்றனர்- கர்ம காண்டத்தில் உள்ள சொர்க்கமே வேதங்களின் நோக்கம் என்றும் நுட்பமான ஒழுக்கங்கள் உபநிடதங்களில் மட்டுமே பேசத் துவங்கப்படுகின்றன என்றும் சொல்கின்றனர்.

இது தவிர, **19**ஆம் நூற்றாண்டு, **20**ம் நூற்றாண்டுகளில் இந்தியா குறித்து ஆய்வுகள் செய்த ஐரோப்பிய சிந்தனையாளர்கள் இந்தியாவின் மூல குடிகளான திராவிடர்களிடமிருந்து வந்தேறி ஆரியர்கள் திருடிக்கொண்ட அறிவுப் பெட்டகமே வேதங்கள் என்ற கருத்தை முன்னிறுத்துகின்றனர்.

www.iyachamy.com

அப்படியானால் இந்த மறை நூலின் அடிப்படை கொள்கைகள், அறிவுறுத்தல்கள் என்ன**?** இது போன்ற புரிதல்களில் எவ்வளவு உண்மை எவ்வளவு பொய் இருக்கிறது**?**

<u>வேதங்கள்- மனிதனால் எழுதப்படவில்லை</u>

வேதங்கள் "அபௌருஷேயம்", மனிதனால் தோன்றியவையல்ல, என்பது மரபார்ந்த நம்பிக்கை. "பௌருஷேயம்" என்றால், மனிதனாலானது. வேதங்களை யாரும் எழுதவில்லை என்று நம்பப்படுவதால் அவை "அபௌருஷேயம்" என்றாகும்.

வேதங்கள் சூக்தங்களாக எந்த ரிஷிகளால் வெளிப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறதோ அந்த ரிஷிகளே அவற்றை எழுதியவர்கள் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. இதற்கான காரணம், ஒவ்வொரு வேத மந்திரத்தின் முன்னும் ஒரு ரிஷியின் பெயர் சொல்லப்படுகிறது என்பதுதான் – இதைக் கொண்டு குறிப்பிட்ட சூக்தங்களை எழுதியவர்கள் அந்தந்த ரிஷிகள் என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கின்றனர்.

இந்த நம்பிக்கையில் ஒரு சிக்கல் இருக்கிறது. இந்து சம்பிரதாயங்களில் எங்குமே இந்த ரிஷிகள் சூக்தங்களை எழுதியவர்கள் என்று சொல்லப்படவில்லை- மாறாய், இவர்கள் வேத மந்திரங்களைக் கண்டறிந்தவர்களாகவே நம்பப்படுகின்றனர். எனவேதான் அவர்கள் மந்திர கர்த்தாக்கள் அல்லது உருவாக்கியவர்கள் என்று குறிப்பிடப்படாமல் மந்திர திருஷ்டர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

<u>வேதங்கள்- அண்டத்தின் புற விதிகள்</u>

ஹிந்து தொன்மங்களில் பல புதுமையான தனித்தன்மை கொண்ட கருத்துருவாக்கங்கள் இருக்கின்றன, அவற்றில் இதுவும் ஒன்று: வேதங்கள் அழிவற்ற படைப்பு விதிகளின் தொகுப்பு, ரிஷிகள் அவற்றைக் கண்டறிந்தவர்கள் மட்டுமே. அடிப்படையில் வேதங்கள் ஒலி வடிவங்கள். அனைத்து மறைநூல்களைப் போலவே வேதங்களும் வெளிப்படுத்தப்பட்டவை என்று சொல்லப்பட்டாலும்,

www.iyachamy.com

ரிஷிகள் இந்த வேத வாக்கியங்களைப் பெற *தபஸ்* மூலம் தங்களுக்குத் தகுதி ஏற்படுத்திக் கொண்டனர்.

வேத ஒலிகள் நித்தியமானவை என்பதால் அவை வேறெந்த இயற்கை ஒலியைப் போலவும் எப்போதும் இருக்கின்றன. நியூட்டன் தன் தர்க்க அறிவைக் கொண்டு புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிந்து விவரித்ததுபோல், இந்த ஒலிகளைப் பெறத்தக்க வகையில் தங்கள் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டனர். நியூட்டனுக்கு முன்னரே புவி ஈர்ப்பு விசை இருந்ததுபோல், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே அந்த நிலப்பரப்பு இருந்ததுபோல், வேதங்களும் ரிஷிகள் அவற்றை கண்டறிவதற்கு முன்னரே இருந்திருக்கின்றன. இந்த ஒலிகள் அவர்களுக்குப் புலப்பட்டு, அவற்றை வாய்மொழியாய் அடுத்து வரும் தலைமுறையினருக்குக் கொடுத்தார்கள்.

படைப்புத்தொழிலுக்கான இவ்விதிகளைக் கொண்டே பிரம்மன் உலகு படைத்தான் என்று இந்து தொன்மங்கள் கூறுகின்றன. எனவே, இப்பொருளிலும் வேதங்கள் *அநாதி*, அதாவது, அழிவற்றவை என்று அழைக்கப்படுகின்றன.

<u>வேதங்கள் – ஆதியந்தமற்றவை</u>

பொதுவாக சமய இலக்கியங்களில், கடவுளே ஆதியும் அந்தமும் இல்லாதவனாகச் சொல்லப்படுவது வழக்கம். ஆனால் இந்து சாஸ்திரங்கள் வேதங்கள் துவக்கமும் முடிவுமற்றவை என்று சொல்கின்றன.

இது உண்மையாக இருந்தால் கடவுளோ பரமாத்மாவோ வேதங்களைப் படைத்ததாகச் சொல்ல முடியாது. உண்மையில் இரண்டுமே *அநாதி* என்பதால் இரண்டுமே எக்காலமும் இருந்தாக வேண்டும்.

அப்படியானால் வேதங்கள் என்பன என்ன, அவை எப்படி தோன்றின? வேதங்களின் நான்கு பகுதிகளும் ஒன்றாய்ச் சேரும்போது அது பரமாத்மனின் சுவாசமாகிறது (*நிஹ்ஸ்வாஸிதம்*) என்று வேதங்களில் சொல்லப்பட்டுள்ளது. யாரும் தம் மூச்சை தாமே உற்பத்தி



www.iyachamy.com

செய்வதில்லை என்பதால், பர்மாத்மனும் தன் நிஹ்சுவாஸிதத்துக்கு உயிரளித்ததாகச் சொல்ல முடியாது. பிரம்மம் ஜடப்பொருள் என்றும் வேதங்களே பிரம்மத்துக்குச் சக்தியளிக்கின்றன என்றும் இந்தியாவில் ஒரு பொதுவழக்கு உண்டு.

இது உண்மையாக இருந்தால் இந்த அண்டத்தைத் தோற்றுவிக்க உதவும் ஒலியும் அதிர்வுகளும் விதிகளும் நம்மால் அளவிட முடியாத அளவு மிகுதியாக இருக்க வேண்டும். வேதங்கள் முடிவற்றவை- *அனந்த வை வேத:* ரிஷிகளுக்கு வெளிப்பட்டு அவர்களால் பெற்றுத் தரப்பட்டவை ஒரு வரம்புக்குட்பட்டவையாகவே இருந்தாக வேண்டும். எனவே, வேதங்களை முழுமையாக அறிவது சாத்தியமல்ல.

இந்து சமயங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் துவக்க நிலை மாணவர்கள் இந்து தொன்மங்களில் சொல்லப்படும் வேதம் குறித்த இந்தத் தகவலைப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

## வேதங்களின உலகப்பொதுமையும் ஆற்றலும்

வேதங்கள் என்றுமுள்ள உலகளாவிய விதிகள் எனபதால் அவை உயிருள்ளவை, உயிரற்றவை என்று உலகில் உள்ள அனைத்துக்கும் பொருத்தமானவை. தேசம், நிறம், நம்பிக்கை போன்ற வரையறைகளுக்கும் சமூக அடுக்குத் தொகுப்புகளும் வேதங்களுக்குப் பொருந்தாதவை, எனவே வேதங்கள் மானுடம் அனைத்துக்கும் உரியவை. ஏன், மனிதன், மிருகம், செடி, கற்கள், சூரியன், நட்சத்திரங்கள் என்று இயற்கையில் உள்ளவை அனைத்துக்கும் உரியவை.

வேத மந்திரங்கள் அவற்றை பிரயோகிப்பவர்களுக்கு மட்டும் உதவாமல், சுற்றிலும் உள்ள சூழலில் தாக்கம் ஏற்படுத்தி, காலப்போக்கில் விண்வெளியை ஊடுருவி நிலையான முன்னேற்றம் அளிக்கின்றன என்று இந்து பாரம்பரியங்கள் நம்புகின்றன. மனிதனின் நோய்களைப் போக்கி, விலங்குகள் மற்றும் மரம் செடிகளுக்குச் செறிவூட்டி, சுற்றுச்சூழலில் உள்ள விரும்பத்தகாத, நச்சுத்தன்மை கொண்ட அச்சுறுத்தல்களைப் போக்குகின்றன.

www.iyachamy.com

இந்த மந்திரங்களில் கூறப்பட்டுள்ள தர்மத்துக்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்து, வேதங்களைக் கற்று முறைப்படி பிரயோகித்தால், அது மானுடம் அனைத்துக்கும் மட்டுமின்றி உலகனைத்துக்கும் நன்மை பயக்கும் என்பது இந்து சம்பிரதாயங்களில் நீண்ட காலமாக நிலவிவரும் நம்பிக்கை.

## வேதங்கள் – இந்துக்களின் முதன்மை நூல்

உலகெங்குமுள்ள சமயங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகால வளர்ச்சியில் ஒரு பொதுத்தன்மையை அடைந்திருக்கின்றன. அவை அனைத்துக்கும் ஒரே ஒரு புனித நூல் அல்லது மறைநூல்தான் உள்ளது என்பது இந்த ஒற்றுமை. சீக்கியத்தில் புனித நூலையே வழிபடவும் செய்கின்றனர்.

சில சமயங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட புனித நூல்கள் இருக்கலாம். அவற்றின் தொகுப்பு அந்த சமயத்தின் அதிகார பூர்வமான அல்லது உண்மையான அல்லது புனிதமான நூலாகக் கருதப்படலாம்.

இந்து சமயத்தில் எண்ணற்ற நூல்கள் புனித நூல்களாக நம்பப்படுகின்றன. அவை அனைத்தையும் தொகுத்து ஒரே புனித நூலாக அமைப்பதும் இயலாத காரியம்.

எனவே வேதங்கள்தான் இந்துக்களின் மிக மெய்யானதும், முதன்மையானதுமான நூலாக இருக்கின்றன. எண்ணற்ற புனித நூல்கள் இருப்பினும், எவரும் தமக்குரிய நூலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றாலும், வேதங்களே *இந்து தர்ம*-த்தின் மையத்தைக் கட்டமைக்கின்றன.

உதாரணத்துக்கு, ஒருவர் பகவத் கீதையையோ ராமாயணத்தையோ அல்லது ஒரு ரிஷியோ ஞானியோ எழுதிய ஒரு நூலை மிக உயர்ந்ததாகக் கருதி அதன் வழிநடக்கலாம். ஆனால் வேதங்களே அறுதியான நூலாக இருக்கின்றன.

இந்து சமயத்தின் பிற புனித, மறை நூல்களுக்கு ஆதாரமாக அமையும் கட்டமைப்பை வேதங்களே அளிக்கின்றன. மிகவும் எளிய இந்து மரபின்படி, வேதங்களைப் புரிந்து கொள்ளவும், அவற்றில் ஏற்படும்

www.iyachamy.com

ஐயங்களுக்கு விளக்கம் காணவும் உதவும் துணை நூல்களாகவே பிற புனித நூல்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன.

ஆனால் சில மரபுகள் குலவழக்கப்படி இயங்குபவை, அவற்றுக்கு வேதங்களுடன் தொடர்பில்லை.

இந்து சிந்தனையின்படி வேதங்களை ஆதார நம்பிக்கை நூல்களாக ஏற்றுக்கொள்ளும் மரபுகள் ஆஸ்திக சம்பிரதாயங்கள் என்றும், வேதங்களின் அறுதித்தன்மையை நிராகரிப்பவை நாத்திக சம்பிரதாயங்கள் என்றும் கூறப்படுகின்றன. இன்று இறை நம்பிக்கை ஆத்திகம் என்றும் இறை மறுப்பு நாத்திகம் என்றும் புரிந்து கொள்ளப்படுகிறது. ஆனால் நாத்திக சிந்தனைகள் பலவும் ஆத்திக சம்பிரதாயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன, அவற்றைப் பின்னர் வரவிருக்கும் அத்தியாயங்களில் காண்போம்.

www.iyachamy.com

**நான்மறை நூல்கள்**

*மஹரிஷி வேத வ்யாஸர்,* பலகோடி மக்களின் நன்மையை உத்தேசித்தும், வேதங்களைக் காத்து இரட்சிக்கவும், அவற்றை நான்கு பகுதிகளாகத் தொகுத்து முறைப்படுத்தினார்– கிளை என்று பொருள்படும் சாகை என்ற பிரயோக முறைக்கேற்ப இந்தத் தொகுப்பு அமைக்கப்பட்டது.

நான்மறை நூல்கள் என்று அழைக்கப்படுபவை இவை–

1. *ரிக் வேதம்,*
2. *யஜூர் வேதம்,*
3. *சாம வேதம்,*
4. *அதர்வ வேதம்.*

ஒவ்வொரு வேதமும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன–

1. *சம்ஹிதை,*
2. *பிராஹ்மணம்,*

**3.** *ஆரண்யகம்.*

*சம்ஹிதை*யில் மந்திரங்களும் துதிகளும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. சம்ஹிதை என்றால் தொகுத்து அடுக்கப்பட்டவை என்று பொருள்படும். வேதங்களின் பிரதானப் பகுதி சம்ஹிதையில் உள்ளது. *பிராஹ்மணங்*கள் வைதீக சடங்குகளை விவரிக்கின்றன, ஆரண்யகம் மந்திரங்களின் உட்பொருளை விளக்குகின்றன. இவை தவிர, ஆரண்யகங்களின் முடிவில் உபநிடதங்கள் உள்ளன.

சம்ஹிதை மரம் என்றால், பிராஹ்மணங்கள் மலர்கள் என்றும் ,ஆரண்யகம் காய்கள் என்றும், உபநிடதங்கள் பழுத்த கனிகள் என்றும் கூறுவதுண்டு.

ரிக் என்றால் துதி. யஜூர் என்றால் வழிபாடு. சாமம் என்றால் அமைதி. அதர்வம் என்றால் ஆளுமையின் சமநிலை.

வேதங்களின் எப்பகுதியை எடுத்து யார் வேண்டுமானாலும் பிற புனித நூல்களை வாசிப்பதுபோல் வாசிக்கலாம் என்றாலும், அறிவகங்கள் என்று கூறப்படும்*வித்யாஸ்தானங்*கள் அனைத்தையும் முறைப்படி வாசிக்காமல் வேதங்களை வாசிப்பது முழுமையான புரிதலை அளிக்காது.

வேத மந்திரங்களின் ஞானம் அனைத்தையும் கொண்டுள்ள *வித்யாஸ்தானங்*கள் இவை- நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள் (வேதங்களின் துணை நூல்கள்), மீமாம்சங்கள் (வேதத்தின் தாத்பர்யத்தைச் சரியாக புரிந்து கொள்வதற்கான முறைகள்), நியாயம் (தர்க்கம்), புராணங்கள் (புராணங்கள் பல விஷயங்களுடன் அண்டசராசரங்களின் ஒழுங்குகளையும் பற்றிக் கூடப் பேசுகின்றன), தர்ம சாஸ்திரங்கள்(நன்னெறியுடன் வாழ்வதற்கான வழி முறைகள்) , உப வேதங்கள் – வேதாங்கங்களின் துணை நூல்கள்- ஆயுர் வேதம் (ஆரோக்கிய வாழ்வுக்கான அறிவியல்) , அர்த்த சாஸ்திரம் (அரசியல் அறிவியல்), தனுர் வேதம் (ஆயுத அறிவியல்), கந்தர்வ வேதம் (கலையறிவு) முதலியவை. வேதங்களைப் புரிந்து கொள்ள இந்த அறிவியல் சார்ந்த துணை நூல்கள் செழுமைக்கு உதவி, முழுமையான வேதக்கல்வி அளிக்கின்றன.

www.iyachamy.com

www.iyachamy.com

## வேதங்கள் – தர்மங்களின் ஆதாரம்

வேதங்கள் தர்மங்களின் ஆதாரம் என்று பலரும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவும் மீண்டும் மீண்டும் சொல்லி இருக்கின்றனர். ஆனால் அதற்குரிய கவனமோ மதிப்போ மிகக் குறைவாகவே அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு ஒரு முக்கிய காரணம், வேதங்கள் நீதி நூல்களல்ல என்ற நம்பிக்கை. மற்றொரு காரணம் அன்றாட தர்மத்துக்கு உரிய நெறிகள் வேதங்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன என்பதும் அவற்றைக் கோர்வையாகப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளதென்பதும்தான்.

அன்றாட நீதிகள் வேதங்களில எங்கும் விரவிக்கிடக்கின்றன என்பது உண்மையே எனினும் தர்மம் குறித்த போதனைகள் அதில் இல்லை என்பது தவறு. மிக முக்கியமான *சூத்ரகாரர்*களும் அதன்பின் வந்த நீதிநூல்கள் எழுதியவர்களும் வேதங்களையே ஆதாரம் காட்டுகின்றனர், தங்கள் நீதி சூத்திரங்களுக்கு வேத மந்திரங்களையே மேற்கோள் காட்டுகின்றனர்.

இடைக்கால மற்றும் நவீன சடங்குகளும் பழக்க வழக்கங்களும் வேதங்களில் சுட்டப்படுகின்றன. இன்றும் உள்ள திருமண முறை, மரணச் சடங்குகள், வேள்வி மற்றும் பல சமூக நடைமுறைகளின் ஆதாரம் வேதமே. லௌகீகச் சடங்குகளிலும் வேத மந்திரங்கள் ஒலிக்கின்றன.

தர்ம சாஸ்திரங்களின் மைய நூலான *கல்பம்* ஆறு வேதாங்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பதே தர்மத்தின் அடி ஆதாரமாக வேதங்கள் இருப்பதைக் காட்டுகிறது..

## வேதங்கள் முதிரா சமூகத்து வழிபாடா?

வேதங்களை மேலாகப் பார்த்தாலும், அவற்றின் அரைகுறை மொழிபெயர்ப்புகளை வாசித்தாலும்கூட அவை தெய்வீக உந்துதல் கொண்டவை என்பதையும், உன்னதச் சிந்தனைகளையும், ஆழமான கருத்துகளையும், மேன்மையைக் கொணரும் நீதிகளையும், நுட்பமானதும் விரிவானதுமான உளவியல் உண்மைகளையும் கொண்டவை என்பதையும், மற்றும் பேரதிசயத்தைமான,

மகோன்னதமான பேரண்டப் பார்வையை விரிப்பன என்பதையும் உணர்வோம்.

வேதங்களில் சிறு பகுதியிலும் நாம் மனிதத்தின் சக்திக்கு மீறிய உண்மைகளைப் பேசும் கவிதைகளைக் காணலாம். வேதங்கள் எங்கும் அவை நிறைந்திருக்கின்றன- அவற்றுக்கு இடையே சற்றே ஒழுங்காக தொகுக்கப்பட்ட புறவழிபாட்டு முறைகள் இயற்கையையும் தெய்வங்களையும் போற்றிப் பாடப்பட்டிருக்கின்றன.

வேறு பலரைப் போலவே ஐரோப்பியர்கள் வேதங்களை லௌகீக சடங்கு விவரணைகள் என்று தவறாகப் புரிந்து கொண்டனர் என்பதை வேதங்களை கவனமாக வாசிக்கும் எவரும் உணர்ந்து கொள்ளலாம்.. வேதங்கள் ஆன்மிக உண்மைகளை குறியீட்டு மொழியில் கூறுகின்றன, அவை ஒன்று போல் மற்றொன்றில்லை.

புலப்படும் யதார்த்த உண்மைகளுக்கு அப்பால் உள்ளதை ஒவ்வொரு குறியீடும் பேசுகிறது என்பது மட்டுமல்லாமல் சாதகருள் உள்ள உண்மையை அறியும் பாதை குறித்த குறிப்புகளும் தருகிறது. தனியாகப் பார்த்தால் இந்தக் குறியீடுகள் மற்றும் குறிப்புகளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. எனினும் இவை பல புரிதல்களுக்கு காரணமாயிருந்திருக்கின்றன. இந்த உண்மைகள் மறைபொருள் சுட்டலாக பாடப்பட்டிருக்கின்றன. தகுதியும் சிரத்தையும் உள்ள சாதகர்கள் மட்டுமே இவற்றின் பொருளுணரும் வண்ணம் இவை பாதுகாப்பாக எதிர்கால சந்ததியினருக்கு கைமாற்றி அளிக்கப்பட்டு வருகின்றன.

இதே போல், வேதங்களில் ஆன்மீக உண்மைகள் ஞான காண்டம் என்று சொல்லப்படும் உபநிடதங்களில் மட்டுமே பேசப்படுகின்றன என்பதும் தவறு. வேதமெங்கும் ஞானம்தான்.

பின்னர் வரும் உபநிடதத்தில் உள்ள உண்மைகளும் ஞான தரிசனங்களும் முன்னரே கர்ம காண்டத்தில் சுருக்கமான சூத்ரங்களாகச் சொல்லப்பட்டு விடுகின்றன. வெற்றிடத்தில் இருந்து எதுவும் தோன்றாது- உபநிடதங்களின் அற்புதமான ஞான

www.iyachamy.com

வாக்கியங்கள் அனைத்தும் *கர்ம காண்ட*த்திலிருந்தே தோன்றுகின்றன..

பல முக்கியமான உபநிடதங்களும் கர்ம காண்டத்தின் மையத்தில் உள்ளன என்பதே இவ்விரண்டும் வேறல்ல என்பதையும் கர்ம காண்டத்தில் ஞான காண்டமும் அடக்கம் என்பதையும் உணர்த்துகிறது.

## வேதாங்கங்களும் உபவேதங்களும்

வேதாங்கங்கள்

வேதாங்கங்கள் – வேத அங்கங்கள்- வேதங்களின் உறுப்புகள் என்று சொல்லப்படுகின்றன. வேத ஒலிகளையும் அக்ஷரங்களையும் புரிந்து கொண்டு சரியான முறையில் பயன்படுத்த வேதாங்கங்கள் மிக முக்கியமாய் இருக்கின்றன. எனவேதான் வேதங்களைக் கற்பிப்பதில் வேதாங்கங்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்படுகிறது.

வேதாங்கங்கள் எண்ணிக்கையில் அறுவகைப்படும்

அவை,

சீக்ஷா – உச்சரிப்பு

வியாகரணம் – இலக்கணம்

சந்தஸ் – செய்யுள் இலக்கணம்

நிருக்தம்- சொல் இலக்கணம்

ஜோதிடம் – வானசாஸ்திரம்

கல்பம் – செயல்முறை

இவை ஒவ்வொன்றும் ஒரு உறுப்பாக, வேதங்களின் ஒரு அங்கமாகக் கருதப்படுவதால் இவையனைத்தும் வேதாங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### சீக்ஷா – உச்சரிப்பு

www.iyachamy.com

வேதாங்கங்களின் முதல் உறுப்பான சீக்ஷா, ஓசை நயம் மற்றும் உச்சரிப்பு முறையை நெறிப்படுத்துகிறது. சீக்ஷா வேதங்களின் நாசியாகக் கருதப்படுகிறது. நாம் சுவாசிக்கவும் நம் பிராணனைக் காத்துக் கொள்ளவும் நம் நாசி உதவுவதுபோல் சீக்ஷா வேத மந்திரங்களின் ஜீவ சக்தியைக் கட்டிக் காக்கிறது. வேத மந்திரங்களின் பலனை முழுமையாய்ப் பெற அவற்றை முறைப்படி சரியாக உச்சரித்தாக வேண்டும். அசைகளின் ஓசை மற்றும் ஒலிப்பைத் தூய முறையில் காத்துக் கொள்வதற்கானவிதிமுறைகளை வரையறை செய்வதால் சீக்ஷா முக்கியத்துவம் பெறுகிறது. உச்சரிப்பில் எழும் எந்த ஒரு சிறு பிழையும் விரும்பத்தகாத, அல்லது எதிர்மறை பலன் கொடுக்கக்கூடும். எனவே வேத புருஷனின் ஆறு உறுப்புகளில் வேதாங்கமே பிரதானமாக மதிக்கப்படுகிறது. ஒவ்வொரு அக்ஷரமும் எவ்வளவு உயர்ந்து அல்லது தாழ்ந்து ஒலிக்கப்பட வேண்டும், அதன் கால அளவை என்ன என்பன போன்ற விஷயங்களை சீக்ஷாவே நெறிப்படுத்துகிறது. இந்த விதிமுறைகள் மாற்றப்படக்கூடாதவை என்பதில் ஒருமித்த கருத்துண்டு. எனினும் வெவ்வேறு சாகைகளுக்கு இடையே மந்திரங்களை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதைப் பார்க்கிறோம். இங்குதான் சீக்ஷா மிக முக்கியமான பணியாற்றுகிறது- வெவ்வேறு பகுதிகளுக்குரிய சாகைகளுக்கு ஏற்ற வகையில் விதிமுறைகளை வகுத்து மந்திர பிரயோகத்தில் பிழை ஏற்படாத வகையில் சீக்ஷை பார்த்துக் கொள்கிறது.

## வியாகரணம்

வேதாங்கங்களின் இரண்டாம் உறுப்பான வியாகரணம் இலக்கண விதிகள் வகுத்தளிக்கிறது. வியாகரணம் வேதத்தின் வாய் என்று கருதப்படுகிறது. பரம்பொருள் சொரூபங்களில் மிக முக்கியமானது ஒலி வடிவே. சீக்ஷையும் வியாகரணமும் ஒலி வடிவை மேம்பட்ட, தெளிவான வகையில் உணர உதவி நமக்கு நன்மை பயக்கின்றன. பிற இலக்கண விதிகள் போலல்லாது வியாகரணம் மிக விரிவான பார்வை கொண்டிருக்கிறது. வியாகரணம் வகுத்துக் கொடுக்கும் மோட்ச சாதனங்களில் ஒன்று சப்த பிரம்ம வாதம் – ஒலியும் பரம்பொருளும் அடிப்படையில் ஒன்றே என்பது இதன் தாத்பர்யம்.



www.iyachamy.com

இதிலிருந்து கிளைத்த பல்வகை சாதனைகளில் ஒன்றான நாத பிரம்ம உபாசனையின் அடிப்படை தத்துவத்தை நாம் இங்கு காணலாம்- நாதமே பரம்பொருளுக்கு இட்டுச் செல்கிறது. வியாகரணங்களில் பாணினியின் வியாகரணமே மிகப் பரவலாய் அறியப்பட்டுள்ளது.

<u>சந்தஸ் அல்லது யாப்பு</u>,

வேதாங்கங்களின் மூன்றாவது உறுப்பாகும். இது வேதத்தின் பாதமாக கருதப்படுகிறது. யாப்பிலக்கணம் என்று சந்தஸ் குறித்து சொல்லலாம். சீக்ஷை சரியான உச்சரிப்புக்கான விதிமுறைகளைத் தொகுக்கிறது, வியாகரணம் அக்ஷரங்களின் பொருத்தத்தைத் தீர்மானிக்கிறது, சந்தஸ் மந்திரப் பிரயோகத்தின் ஒட்டுமொத்த ஒலி வடிவம் குலைவற்ற ஒழுங்கு கொண்டிருக்க உதவுகிறது. இவ்வகையில் வேத ஒலிகள் மற்றும் மந்திரங்களை சந்தஸ் காப்பாற்றிக் கொடுப்பதாகச் சொல்லலாம். வேத மந்திரங்களைத் தவறாக உச்சரிப்பது விரும்பத்தகாத, எதிர்மறை விளைவுகளை அளிப்பது போலவே அக்ஷரங்களைக் கூட்டுவதும் குறைப்பதும் பிழைபலன் தருவதாக அமையும். எனவே, வேதக்கல்வியில் சந்தஸ் மிக முக்கியமான இடம் கொண்டதாய் இருக்கிறது. சந்தஸ் குறித்த நூல்களில் பிங்களரின் சந்தஸ் சாஸ்திரமே மிகவும் புகழ் பெற்றதாகும்.

<u>நிருக்தம் அல்லது சொல்</u>

இலக்கணம் நான்காம் வேதாங்கமாகும். அது வேதத்தின் செவியாகக் கருதப்படுகிறது. நிருக்தம் வேதத்தின் வேர்ச்சொல்லகராதி. வேறெந்த வேர்ச்சொல் அகராதியையும் போலவே நிருக்தம் ஒவ்வொரு சொல்லின் வேரையும் கண்டெடுத்துக் கொடுக்கிறது. ஆனால் பிற மொழிகள் போல் அல்லாமல் வேத மொழியில் பல அசாதாரணமான, கடினமான சொற்கள் உள்ளன. நிருக்தம் அவற்றின் மூலம் மற்றும் பொருள் தருவதோடல்லாமல், அன்றாட பயன்பாட்டில் உள்ள சொற்களையும் அசை பிரித்து அவற்றின் மூலப்பதங்களை விளக்கி, ஏன் குறிப்பிட்ட பொருளில் ஒவ்வொரு சொல்லும் பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்குகிறது. மந்திரங்களின் ஆழ்பொருளை அறிய நிருக்தங்கள் மாணவர்களுக்கு உதவுகின்றன, வெகு சில சொற்கள் அல்லது மிகச் சிறிய வாக்கியத்தின்

www.iyachamy.com

மீபொருண்ம உள்ளடக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளவும் நிருக்தம் பயன்படுகிறது.

## ஜோதிடம் அல்லது வான சாஸ்திரம்

ஐந்தாம் வேதாங்கம். அது வேதங்களின் கண்ணாகக் கருதப்படுகிறது. ஜோதிடத்தை நயனம் என்று அழைப்பதுண்டு, அதற்கும் கண் என்றுதான் பொருள். குறிப்பிட்ட சில கோள்கள் எப்போது எந்த அமைப்பில் இருக்கும் என்பதை கணிக்கவும் எப்போது வைதீக கர்மாக்கள் செய்ய வேண்டும் என்பதற்கும் எண்ணற்ற நெறிமுறைகள் இருக்கின்றன. எனவே வேதங்களைக் கற்பதில் ஜோதிடம் ஒரு பயனுள்ள துறையாய் இருக்கிறது. மிகத் தொலைவில் உள்ள நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் நிலையைக் கணிப்பது என்பது சிக்கலான நடைமுறை கொண்டிருப்பதால், கணிதம் ஜோதிட சாஸ்திரத்தின் தவிர்க்க இயலாத அங்கமாக இருக்கிறது. கணித அடிப்படையில் ஜோதிடம் மூன்று பிரிவுகள் அல்லது ஸ்கந்தங்களாக பகுக்கப்பட்டுள்ளது- சித்தாந்த ஸ்கந்தம், சம்ஹித ஸ்கந்தம், ஹோர ஸ்கந்தம். இவற்றில் சித்தாந்த ஸ்கந்தம் அல்ஜீப்ரா, ட்ரிகோணமெட்ரி,ஜியோமெட்ரி, கூட்டல் கழித்தல் போன்றவற்றின் அடிப்படையில் கணிக்கிறது. சம்ஹித ஸ்கந்தம், வானவியல் மற்றும் ஜோதிடம் முதலான துறைகளைப் பேசுகிறது. ஹோர ஸ்கந்தம் கோள்களின் இயக்கம் பூமியின் மீதும் அதன் மக்களின் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தை விவரிக்கிறது.

## கல்பம் அல்லது நடைமுறை

வேதாங்கங்களின் ஆறாம் அங்கம். இது வேதங்களின் கரமாகக் கருதப்படுகிறது. வைதீக கர்மாக்களில் பங்கேற்பதற்கான துவக்கம் என்று கல்பம் அறியப்பட்டாலும் நாம் மேன்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழவும், வாழ்வின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளவர்கள் சமூக அமைப்பில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும்,ஒருவன் தன் இல்லத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், வைதீக கர்மாக்களில் எவ்வாறு பங்கேற்க வேண்டும் என்றும் பல நெறிமுறைகள் உள்ளன. இது மிகப் பெரிய பேசுபொருள் என்பதால் ரிஷிகள் கல்பம் சார்ந்த சாஸ்திரங்களை மூன்று வகைகளாக

www.iyachamy.com

www.iyachamy.com

தொகுத்துள்ளனர்- அவை, தர்ம சாஸ்திரம், க்ருஹ்ய சாஸ்திரம், ஸ்ரௌத சாஸ்திரம் என்று அறியப்படுகின்றன

## உபவேதங்கள்

உபவேதம் என்ற பதத்தின் பொருள் செயல்முறை அறிவு என்று சொல்லலாம். வெவ்வேறு துறைசார்ந்த தொழில்நுட்ப தகவல்கள் உபவேதங்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தலைமுறை தலைமுறையாக வேத ரிஷிகள் காலம் முதல் கைமாற்றி அளிக்கப்படும் பல்வேறு துறை சார்ந்த பயனுள்ள தகவல்களே உப வேதங்களாக அறியப்படுகின்றன.

வித்யாஸ்தானங்கள் அல்லது அறிவகங்களின் ஒரு பகுதியே உபவேதங்கள். இந்து தத்துவங்களில் பதினெட்டு வித்யாஸ்தானங்கள் குறிப்பிடப்படுகின்றன.

நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், மீமாம்சை, நியாயம், புராணங்கள் (புராணங்கள் அண்டவியல் குறித்தும் பேசுகின்றன), தர்ம சாஸ்திரங்கள் மற்றும் நான்கு உப வேதங்கள்- இவையே பதினெட்டு வித்யாஸ்தானங்கள்.

வேதாங்கங்களின் பின்னிணைப்பாக உபவேதங்கள் கருதப்படுகின்றன.

## இவையே நான்கு உபவேதங்கள்-

ஆயுர் வேதம் – வாழ்வு குறித்த அறிவியல்

அர்த்த சாஸ்திரம்– அரசியல், ஆட்சி, பொருளாதாரம் குறித்த அறிவியல்

தனுர்வேதம்– போர்க்கலைகள் மாற்றும் ஆயுதங்கள் குறித்த அறிவியல்

காந்தர்வ வேதம்– நுண்கலைகள்

## அர்த்தசாஸ்திரம்

அர்த்தம் என்றால் செல்வம் என்று பொருள்படும். எனவே, அர்த்த சாஸ்திரம் என்பது செல்வம் அல்லது பொருளாதார அறிவியல்.

நவீன காலத்தில் அர்த்த சாஸ்திரம் என்றால் ஏறத்தாழ **1700** ஆண்டுகளுக்கு முன் சாணக்யன் அல்லது கௌடில்யன் என்ற பண்டிதரால் ஆட்சி முறை மற்றும் அரசனின் கடமைகளையும் உரிமைகளையும் குறித்து எழுதப்பட்ட புகழ்பெற்ற நூலே நினைவுக்கு வருகிறது.

சம்ஸ்கிருத இலக்கியத்தில் அர்த்த சாஸ்திரம், ராஜ சாஸ்திரம், தண்ட நீதி, நீதி சாஸ்திரம் என்ற சொற்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் சரியாக பொருள் கொள்வதானால், அர்த்த சாஸ்திரம் என்ற பதத்தின் பொருள் விரிவானது- அது அரசியல், ஆட்சிமுறை, பொருளாதாரம், சட்டம், நீதிமுறை என்று பல துறைகளையும் பேசுகிறது. காமசூத்திரமும் பிற நூல்களும் தர்மத்தையே உயர்ந்த இலட்சியமாகப் பேசுவதுபோல் அர்த்த சாஸ்திரம் தர்மத்துக்கே உயர்ந்த மதிப்பளிக்கிறது.

இவ்வாறு பரவலான விஷயங்களைப் பேசுவதால் அர்த்த சாஸ்திரம் தர்ம சாஸ்திரங்களில் பேசப்பட்டுள்ளவற்றையும் விவாதிக்கின்றது. ஆனால் தர்ம சாஸ்திரங்களுக்கு உரிய விரிவான களம் அர்த்த சாஸ்திரத்துக்கு உரியதல்ல. எனவே, தர்ம சாஸ்திரத்துக்கும் அர்த்த சாஸ்திரத்துக்கும் எந்த ஒரு விஷயத்தில் முரண்பாடு ஏற்பட்டாலும், அங்கு தர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளதே கணக்கில் கொள்ளப்படும், அதன் விதிகளே நடைமுறைப்படுத்தப்படும். சிலர் அர்த்த சாஸ்திரம் என்பது அதர்வ வேதத்தின் உபவேதம் என்று கூறுவதுண்டு.

மானுட வாழ்விலும் சமூக உறவுகளிலும் செல்வத்தின் முக்கியத்துவம் குறித்து பண்டைய இந்துக்கள் அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றுகள் ஏராளம் உள்ளன. செல்வ வளமிக்க சமூகங்களும் தேசங்களும் எதிர்கொள்ளக்கூடிய அச்சுறுத்தல்கள் மற்றும் செல்வத்தால் கிட்டக்கூடிய சாதக நிலைகள் குறித்து அவர்கள் அறிந்திருக்கவே செய்தனர். சமூக அமைப்புகள், சமூகச் சூழலில் தனிமனித செயல்பாடு, செல்வம் ஈட்டி அவற்றைக் காக்கும் வழிகள்,

www.iyachamy.com

நல்லாட்சி, அரசியல், சட்டம் மற்றும் நிர்வாகம் குறித்து உலக அளவில் முதற்சிந்தனைகள் வெளிப்படக் அர்த்த சாஸ்திரம் குறித்த சிந்தனையே காரணமாயிற்று. இவற்றில் அரசனின் உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதற்கு காரணம், செல்வ வளமிக்க ஒரு தேசத்தை வலுவான, நேர்மையான அரசன் ஆண்டு நிர்வாகம் செய்யாவிடில், அத்தகையச் சமூகம் சிதறிவிடும் என்பதே.

ஆனால் அர்த்த சாஸ்திரம் செல்வத்துக்கு மிகையான முக்கியத்துவம் அளித்த காரணத்தால் செல்வ வளம் ஓயாது ஈட்டப்பட வேண்டிய வாழ்வுமுறை உருவானது. இது தர்ம சாஸ்திரங்களின் நெறிமுறைகளுக்கும், சமூக நீதிக்கும் முரணான நிலை உருவாகக் காரணமாக இருந்திருக்கிறது. மேலும், பிற்கால சாஸ்திரக்காரர்கள் மோதல்களைத் தவிர்க்க விலக்குகள் அளிக்கவும், பல்வேறு தரப்பினரை சமநிலையில் இருத்தும் நிலை உருவாகவும் பல்வேறு விதிமுறைகள் வகுக்க வேண்டியதாயிற்று.

மகாபாரதம் மற்றும் ராமாயணம் ஆகிய இரு பெருங்காப்பியங்களில் அர்த்த சாஸ்திரத்தில் பேசப்படும் விஷயங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. புராணங்கள், தர்ம சூத்திரங்கள், ஸ்மிருதிகள், ஆங்கிரசின் மகனான பிருகஸ்பதியின் அர்த்தசாஸ்திர உரை, பிருகு மகனான சுக்கிரனின் ராஜ சாஸ்திரம், உசனஸின் நீதி நூல் மற்றும் பலநூறு சிறு நூல்கள் கிறித்தவ சகாப்தத்துக்கு முன்னரே இங்கு இருந்திருக்கின்றன.

அர்த்தசாஸ்திர நூல்களில் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட, சீர்மையான நூல் என்று கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் சொல்லப்பட முடியும் எனினும் அது பலராலும் விமரிசிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில், பாணரின் காதம்பரி குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. மிகவும் தீய அறிவுரைகள் பல இருப்பதால் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் மிகவும் குரூரமான நூல் என்று காதம்பரியில் குறிப்பிடப்படுகிறது. இன்னும் பலரும் கௌடில்யரின் நூல்களை நிராகரித்துள்ளனர்- *நாம் விரும்பும் முடிவுகளை அடைய உதவும் எதுவும் அதற்கான வழிமுறைகளை நியாயப்படுத்தும்* என்ற கோட்பாடு இதற்கு முக்கியமான காரணம் எனலாம்.

www.iyachamy.com

## ஆயுர் வேதம்

ஆயுர் வேதம் என்ற பதத்தின் நேரடி பொருள், உயிர் அறிவியல் என்று சொல்லலாம். இந்தியாவின் புராதன, இந்தியாவுக்குரிய மருத்துவ முறையான ஆயுர் வேதம் இன்று உலகெங்கும் பயிலப்படுகிறது. இதன் துவக்க காலம் எப்போது என்பதைத் துல்லியமாகக் கண்டறிவது இன்று மிகக் கடினம். ஆனால் நம்மிடமுள்ள இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு, உலகின் மிகத் தொன்மையான மருத்துவ முறை இதுவே என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆயுஷ், ஆரோக்கியம், ஔஷதி போன்ற பதங்கள் வேதங்கள் துவங்கி ஏறத்தாழ அனைத்து நூல்களிலும் இருப்பதைக் காண்கிறோம். ஆயுர் வேதம் என்பது முழுமையான ஒரு மருத்துவ முறையாகும். மகாவிஷ்ணுவின் அவதாரமாக நம்பப்படும் தன்வந்திரி மருந்துகளுக்கும், தேகம் மற்றும் மனநலத்துக்கும் இறைவனாவான். ருத்ரன் தெய்வங்களின் மருத்துவனாகப் பேசப்படுகிறான். தேக ஆரோக்கியத்தையும் உயிரோட்டத்தின் ஒழுங்கையும் காப்பதில் அஸ்வினிகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது.

சாங்கிய தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளையொட்டியே ஆயுர் வேத மருத்துவ முறை இயங்குகிறது. சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுக்கும் ஆயுர் வேதத்தில் வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்கள் இணையாகக் கூறப்படுகின்றன. வாதம் ஆரோக்கியத்தை சமன்படுத்துகிறது என்பது மட்டுமல்லாமல் ஏனைய இரண்டின் உந்துவிசையாகவும் இருக்கிறது. பித்தம் என்பது வெம்மையுடன் தொடர்புடையது, பித்தமே உடலுக்கு வெம்மையளித்து இயக்குகிறது. கபம் ஜடத்தன்மை கொண்டது.

செயல்வடிவமுள்ள இந்த மூன்று தத்துவங்களுடன் கூடுதலாக ஆயுர்வேதம் சப்த தாதுக்கள் என்ற கருத்துருவாக்கமும் கொண்டுள்ளது. எலும்பின் மஜ்ஜை, கொழுப்பு, இரத்தம் முதலான ஏழு அடிப்படை வஸ்துக்களின் கூட்டு வடிவமாக உடல் இருக்கிறது. இவையன்றி ஐந்து பிராணன்கள், ஐந்து உப பிராணன்கள் என்ற தத்துவமும் ஆயுர்வேதத்தில் உண்டு (பிராணனே மனிதன் எந்த ஒரு

www.iyachamy.com

செயலிலும் ஈடுபடும் ஆற்றல் அளித்து அவனைச் செலுத்தும் ஜீவசக்தியாக இருக்கிறது).

ஆயுர்வேதத்தைப் பொறுத்தவரை, சமநிலை கொண்ட மன அமைப்பு ஆரோக்கியத்தைக் காப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. வியாதி என்ற பதத்தின் பொருளே அமைதியற்ற மனம் என்பதுதான், இதுவே உடல் உறுப்புகளின் செயல்பாட்டில் ஒழுங்கின்மை ஏற்படக் காரணமாகிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் நோய் நீக்குவது என்பது நச்சுக்களாக உடலில் தங்கிவிட்ட தடைகளை நீக்குவதுதான். இதைச் செய்ய இரண்டாயிரம் ஆண்டுகால நடைமுறையில் பல்வேறு உத்திகள் கண்டறியப்பட்டுள்ளன.

பண்டைய இந்திய மருத்துவமுறை மனிதனின் நோய்களை நீக்குவதில் மட்டும் அக்கறை கொண்டுள்ள ஒன்றல்ல. விலங்குகள், பறவைகள், மரங்கள் என்று அனைத்துக்கும் மருத்துவ சிகிச்சை செய்ய ஆயுர்வேதத்தில் இடமுண்டு.

பொதுவாகச் சொன்னால் ஆயுர்வேதத்தின் அங்கங்கள் ஏழு-

1. சல்யம்- அறுவை சிகிச்சை, மகப்பேறு
2. சாலக்யம்- கண், காது, மூக்கு என்று தலையில் உள்ள உறுப்புகளுக்கு சிகிச்சையளித்தல்
3. காய சிகிச்சை- உடல் உபாதைகளை மருந்துகள் கொண்டு குணப்படுத்துதல்
4. பூதவித்யை- மன நலம் பேணுதல்
5. குமார ப்ரியா- குழந்தை வளர்ப்பு
6. அக்தம் – முறிமருந்துகள் அளித்தல்
7. ரசாயன தந்திரம் – ஆயுள் நீட்டிப்புகான மருந்துகளைப் பயன்படுத்துதல்
8. வாஜீகரணம்- புத்துயிர்ப்பு மருத்துவம்

www.iyachamy.com

சரகர், சுஸ்ருதர், வாக்பட்டர், வ்ரத ஜீவகர், பதஞ்சலி, நாகார்ஜுனர் முதலியானோர் ஆயுர்வேத மருத்துவமுறையின் தலையாய ஆசான்களாவர்.

## தனுர் வேதம்

தனுர் வேதம் என்ற பதம் இரு சொற்களைக் கொண்டது- தனுஷ் என்றால் வில் என்றும் வேதம் என்றால் ஞானம் என்றும் பொருள்படும். நேரடி பொருளில், இந்தப் பதம் வில்வித்தையையே குறிக்கிறது. புராணங்களில் முழுக்க முழுக்க இப்பொருளில்தான் தனுர்வேதம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னரே ஆச்சரியப்படத்தக்க வகையில் தனுர் வேதம் என்ற பதம் அனைத்து போர்க்கலைகளையும் பேச பயன்படுத்தப்பட்டது.

தனுர் வேதம் தவிர சஸ்திர வித்யா என்றும் உண்டு- சஸ்திரம் என்றால் கத்தி, அல்லது ஆயுதம், வித்யா என்பது வித்தை. எனவே, சஸ்திர வித்யா என்பதன் நேரடிப் பொருள் வாள்வித்தை என்றாகும். தனுர் வேதம், சஸ்திர வித்தை ஆகிய இவ்விரண்டும் பண்டைய இந்திய போர்க்கலை மற்றும் ஆயுதப் பயன்பட்டு முறைமைகளை விளக்கும் அறிவுத் துறைகளாகும்.

வேதங்கள் அனைத்தும் அமைதியையும் மேன்மையான விஷயங்களையும் பேசும்போது உபவேதங்கள் தனுர் வேதத்தை வித்யாஸ்தானத்தின் உறுப்பாகக் கொண்டிருப்பது நவீன மனதுக்கு வியப்பாய் இருக்கலாம். ஆனால் போர்க்கலையும் ஆயுதங்களும் பயில்வது வேற்று தேசங்களின்மீது போர் தொடுக்கும் நோக்கத்தில் மட்டுமல்ல என்பதை மனதில் கொள்ளவேண்டும். எதிரிகள் மற்றும் பகை தேசங்களிடமிருந்து தன்னையும் தன் மக்களையும் பாதுகாப்பது அரசனின் கடமையாகிறது. போர்க்கலையும் ஆயுதப்பயிற்சியும் தொடர்ந்த பயிற்சி கோருவன. மேலும், பண்டைக்காலம் முதல் இந்தியாவில் வில், வாள் மற்றும் பல ஆயுதங்கள் எப்போதும் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கின்றன- ஆயுதப்பயிற்சி ஒரு மனிதனின் கல்வியில் இடம்பெறுவது தவிர்க்க முடியாத தேவையாக இருந்து வந்திருக்கிறது.

www.iyachamy.com

கிறித்துவ சகாப்தம் துவங்குவதற்கு முன்னரே பல்வேறு ஆயுதங்கள் மற்றும் அவற்றைக் கையாளும் முறை குறித்து விவரிக்கும் ஏராளமான நூல்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றன என்பதற்கான ஆதாரம் நம்மிடம் எஞ்சியிருக்கும் நூல்களைக் கொண்டே தெளிவாகிறது. ஆனால், மூல நூல்கள் எதுவும் நம்மிடையே இல்லை.

போர்க்கலைகள் இருவகைப்படும்- ஆயுதங்கள் கொண்டது ஒன்று, ஆயுதங்களற்ற போர் முறை மற்றொன்று. இந்தியாவில் எண்ணற்ற போர்முறைகள் இருக்கின்றன, அவற்றை வட இந்திய முறைகள் என்றும் தென்னிந்திய முறைகள் என்றும் பகுக்கலாம். இவற்றைத் தவிர இந்தியாவெங்கும் மல்யுத்த பாரம்பர்யம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது.

தனுர்வேதம் ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி தவிர, ஆயுதங்கள் செய்யும் முறையும் கற்றுத் தருகிறது. அது தவிர, போருக்குரிய மனநிலையை உருவாக்கிக் கொள்வதற்கான தியான முறைகள் மற்றும் ஆன்ம வித்தையும் தனுர்வேதத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. சஞ்சலமற்ற, அமைதியான மனமே ஆயுதங்களை அமைதிக்கான பணியில் பயன்படுத்த உதவும், உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கும் வீரர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் அமைதியான மனநிலையில் உள்ள அதிகாரிகளுக்கே வயப்படுகிறது.

<u>கந்தர்வ வேதம்</u>

கந்தர்வ வேதம் என்ற  கருத்துருவாக்கம் எப்போது எங்கு தோன்றிற்று என்பது குறித்த தெளிவான விபரங்கள் நம்மிடமில்லை.

இந்து தொன்மங்களில் சில தேவகணங்கள் கந்தர்வர்கள், அப்சரஸ்கள், வித்யாதரர்கள், கிண்ணரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். கந்தர்வர்கள் இசையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் வித்யாதரர்கள் வித்தையில் முதன்மையானவர்கள் என்றும் நம்பப்படுகிறது.;

கந்தர்வ வேதத்தின் துவக்கம் இத்தகைய நம்பிக்கையாய் இருக்கலாம். இந்திய நாட்டிய முறைகள் குறித்து நாட்டிய சாஸ்திரம் எழுதிய பரத ரிஷியை கந்தர்வ வேதம் எழுதியவராய் சிலர் நம்புகின்றனர். முதலில்



www.iyachamy.com

அது இசையின் அறிவியலாகத் துவங்கியிருக்கலாம். அப்போது அதில் இசை, நடனம், நாடகம் என்ற மூன்றும் இருந்தன- இவை ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்திருப்பதால் இவற்றை இணைத்தே பேச முடியும்.

பிற்காலத்த்ல் இந்த மூன்று இயல்களும் பிற அறிவுத்துறைகளில் தாக்கம் செலுத்தத் துவங்கியபோது, இசை மற்றும் நடனத்தின் சில கூறுகள் ஆயுர் வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டன. அதே போல் இங்கொன்றும் அங்கொன்றுமாய் வெவ்வேறு துறைகளில் சில போர்க்கலைகளும், கவிதை அல்லது காவியம், காம சாஸ்திரம் போன்றவையும் இடம்பெறத் துவங்கியபோது கந்தர்வ வேதம் என்ற தனித்துறை பிறந்திருக்கலாம். அல்லது வேறெந்த சிறு வடிவிலாவது துவக்க காலம் முதல் தொடர்ந்திருக்கலாம்.

இன்றுள்ள கந்தர்வ வேதத்தின் கூறுகளாக சங்கீதம், நாட்டியம், நாடகம், காவியம் (கவிதை) மற்றும் காம சாஸ்திரம் ஆகியவை உள்ளன.

## நன்றி செம்பருதி

## வேதங்கள் , ஆகமங்கள்,புராணங்கள்

பல ஆயிரம் ஆண்டுகளாக யோகிகளும் ஞானிகளிலும் இயற்கை எழில் நிரம்பிய பல இடங்களில் அமர்ந்து கொண்டு தங்களது மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்திக் காணும் பொருள்களுக்கு அப்பாற்பட்ட, அவற்றிற்கு மூல காரணமாக இருக்கின்ற பரம்பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்கள். பரம்பொருளைத் தம்முள் அனுபவித்தார்கள். அந்த இறை அனுபவம் அவர்களுடைய புனித உள்ளங்களிலிருந்து ஆற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஒடியது. திருவருள் முழுமையாகப் பெற்ற அவர்கள் உலக மக்களின் உயர்வுக்காக அருளிச் செய்தவை வேதமும் ஆகமமுமாகும். அவர்களுடைய உள்ளங்களிலே தோன்றிய இறை எண்ணங்கள் அவர்களுடையவையல்ல. இறைவனின் திருவாக்கு என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். எனவே, வேதாகமங்கள் இறைவனுடைய மொழியாகவே கருதப்படுகின்றன. "வேதங்கள் ஐயா

www.iyachamy.com

என ஒங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடினார். வேத காலத்து முனிவர்கள் உலக விஷயங்களில் பற்று வைக்காமல் எல்லாவற்றிருக்கும் மேலான பரம்பொருளை ஆர்வத்துடன் நாடினார்கள்.

சீரிய முறையில் இறைவனைப் பற்றிச் சிந்தித்தவர்களாக, தங்கள் உள்ளத்தை அவர்கள் ஆழ்ந்து ஆராய முற்பட்டார்கள். அதன் விளைவாக இறை உணர்வு முழுதும் பெற்ற அருள் பெரியார்களுடைய உள்ளங்களில் வேதங்கள் கனிந்த அனுபவமாக எழுந்தன. அவர்களுடைய உள்ளங்களிலே எழுந்த வேதங்களின் ஒலி பரம்பொருளைப் பற்றிய உண்மைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தது. அந்த உண்மைகளை உணர்ந்து கொண்ட வேத முனிவர்கள் பேரறிவைத் தம்முள் அனுபவித்துப் பேரின்பம் பெற்றார்கள். அத்துடன் நின்றுவிடவில்லை அவர்கள். தாங்கள் பெற்ற இன்பத்தை உலக மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டி, வழிவழியாக, வாய்மொழியாகத் தங்களுடைய சீடர்களுக்கு வேதங்களையும் ஆகமங்களையும் உபதேசித்தனர்.

வேதம் முதலில் ஒன்றாகே இருந்தது. எண்ணிலடங்காத மந்திரங்களைக் கொண்டிருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வியாச முனிவர் வேதத்தை ருக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் என்று நான்காகப் பிரித்தார். இவ்வாறு வேதத்தைப் பிரித்தமை காரணமாகவே அவருக்கு வேதவியாசர் என்ற பெயர் ஏற்பட்டது.

ருக் வேதம் செய்யுள் வடிவில் உள்ளது. யஜுர் வேதம் உரைநடையிலும், சில பகுதிகளில் செய்யுள்களாகவும் உள்ளது. சாம வேதம் இசையுடன் பாடும் பாணியில் அமைந்துள்ளது. சாம வேதத்தில் பெரும்பாலும் ருக்வேத செய்யுள்கள் காணப்படுகின்றன. அதர்வ வேதத்தில் பல மந்திரங்கள் உள்ளன. மூன்று வேதங்களில் உள்ள செய்யுள்கள் வேள்விகள் நடத்துவதற்கான முறைகளை விரிவாக விளக்குகின்றன. அதர்வ வேதம் உபசனைக்குப் பயன்படுகிறது. நன்மை பயக்கவும், இடர்களை நீக்கவும், பகைவரை அழிக்கவும், பொது நலம் புரியவும் தேவைப்படும் மந்திரங்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன.

www.iyachamy.com

வேதங்கள் சாகைகள் எனப்படும் உட்பிரிவுகளுடன் அமைந்துள்ளன. மேலும், இந்தச் சாகைகளில், சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் முறையே கர்ம காண்டம், உபாசன காண்டம், ஞான காண்டம் என்று பாகுபடுத்தியும் கூறுவதுண்டு.

வேதங்கள் மிகப் பழமையானவை. பல ஆயிரம் ஆண்டு காலமாக முனிவர்கள் வேதங்களை அருளிச் செய்துள்ளார்கள். அவை இறைவனைப் பல நிலைகளில் துதிக்கின்றன, போற்றுகின்றன. இம்மையிலும் மறுமையிலும், மனிதர்கள் நல்ல பயனை அடைய வேண்டிச் செய்யும் வேள்விகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யப்பட வேண்டிய செயல்களையும், தவிர்க்கப்பட வேண்டிய செயல்களையும் வேதங்களின் கர்ம காண்டம் தெளிவுபடுத்துகின்றது. இறைவனை உபாசனை செய்யும் வழிகள் உபாசான காண்டத்தில் வருகின்றன. நற்கருமங்களை சுயநலமின்றிச் செய்து மனத்தூய்மையை முதலில் பெற வேண்டும். பின்னர் தியான முறைகளைக் கையாண்டு ஒருமைப்பட்ட மனநிலையை அடையும் பொழுது இறைவனைப் பற்றிய அனுபவத்தை, மெய்யுணர்வைப் பெறலாம். மெய்ப்பொருள் எத்தகையது என்பதை ஞானகாண்டம் விளக்குகின்றது. ஞானகாண்டம் இயற்கை எழில் மிகுந்த காடுகளில் தோன்றியது என்று கருதலாம். அறிவில் முதிர்ந்தவர்கள், இறைசிந்தனைகளில் தமது மனத்தை முழுமையாகச் செலுத்தி, காடுகளுக்குச் சென்று எல்லாப் பற்றுகளையும் களைந்து, தீவிர சிந்தனையில் ஈடுபட்டு, மெய்ப்பொருளின் தன்மையைத் தம்முள் உணர்ந்து உலகிற்கு அளித்ததே உபநிடதங்கள் எனப்படும். இவையே ஞானகாண்டப் பகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அறியாமையை நீக்கிக்கொண்டு ஒவ்வொருவரும் தன்னுள் இருக்கும் இறைத்தன்மையை உணர்ந்து கொள்வதே உபநிடதங்களுடைய கல்வியுமாகும். உபநிடதங்கள் வேதங்களின் தத்துவ ஞான அனுபவப் பகுதிகளாக திகழ்கின்றன. எனவே உபநிடதங்கள் வேதத்தின் முடிவாக, வேதாந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகவே, உபநிடதங்கள் வேதங்களின் உட்பிரிவுகளாகும். வேதங்கள் வேறு உபநிடதங்கள் வேறு என்பதல்ல.

www.iyachamy.com

www.iyachamy.com

## வேதங்கள்

உலகின் பழமையான நூல்களாக இந்து மத வேதங்கள் ஆராய்ச்சியாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. வேதங்கள் அழிவற்றவை என நம்பப்படுகிறது. வேதங்கள் ஒவ்வொரு யுக ஆரம்பத்திலும் இறைவனால் பூமிக்கு கொண்டு வரப்படுகிறது.உலக மர்மங்களை தன்னிடத்தே கொண்டுள்ள இயற்க்கையை வழி நடத்த மட்டுமல்லாதுஆன்ம அனுபவங்களை அறிவிப்பதற்காகவுமே வேதங்கள் பூமிக்கு அளிக்கப்படுகிறது.மேலான பார்வைக்கு இவை சம்பிரதாயப் பாடல்களாக தோன்றினாலும், பிரபஞ்சத்திலிருந்து சக்தியை பெறும் வகையிலேயே இவை அருளப்பட்டுள்ளது.

வேதங்கள் ரிக்,யஜுர், சாம மற்றும் அதர்வண என நான்காகும்.இவையே சதுர் வேதங்கள் என்று அழைக்கப் படுகின்றன.வேதங்கள் எப்பொழுது படைக்கப் பட்டவை என்பது இன்னும் அறியப்படவில்லை.வேதங்கள் முதன்முதலாக வியாசரால்தான் தொகுக்கப் பட்டன. ஒவ்வொரு வேதத்திலும் நான்கு முக்கியப் பகுதிகள் உண்டு. தேவ மந்திரங்கள் அடங்கியப் பகுதி "சம்ஹிதா" எனவும்,சடங்குகள் பற்றிய விளக்கங்கள் "பிரமணா" பகுதியிலும், த்யானம், யோகம் போன்றவை"ஆரண்யகா"பகுதியிலும், இறைப் பற்றிய தத்துவங்கள்"உப நிஷத்" பகுதியிலும் காணலாம். வேதங்கள் மிகவும் நுண்ணியமாகவும், சூட்ச்சமுமாகப் படைக்கப் பட்டுள்ளதால் ஆழ்ந்த கவனமுடன் படிப்பவர்களே உண்மையானப் பொருளை அறிய முடியும்.

## ரிக்வேதம்

ரிக்வேதம் பெரும்பாலும் இறை மந்திரங்கள் அடங்கிய நூலாகும். ரிக் வேத 'சம்ஹிதா" பகுதியில் **1017** அத்தியாயங்கள் உள்ளன. இவை "ஸூக்தா" என்றழைக்கப்படுகிறது. ரிக் வேதத்தில் பல இடங்களில் ஓர் இறை கொள்கை வலியுறுத்தப்பட்டாலும்,உருவ வழிபாட்டினை ஏற்றுகொண்டுள்ளது.

## சாம வேதம்

சாம வேதம் ரிக் வேதத்தின் சுருக்கப்பட்ட வடிவமாகவே படைக்கப்பட்டுள்ளது. சாம வேதம் தனக்கென்று புதிய தத்துவங்களை அறிவிக்காமல் ரிக் வேத தத்துவங்களையே எளிமையாகவும் இசையாகவும் கொடுத்துள்ளது. எனவேதான் வேத நூல் ஆய்வாளர் டேவிட் பார்லே இவ்வாறு கூறுகிறார். "ரிக் வேதம் என்பது வார்த்தை என்றால், சாம வேதம் அதன் பாடலாகவும் பொழிப்புரையாகவும் விளங்குகிறது.ரிக் வேதம் ஞானம் என்றால் அதனை எளிமையாக வெளிபடுத்துவது சாம வேதம்"

## யஜுர் வேதம்

யஜுர் வேதம் இந்து மத சடங்குகளுக்கான வழிகாட்டி நூல் என்றே சொல்லலாம்.வேத விற்ப்பன்னர்களால் செய்யப்படவேண்டிய வேள்விகள் மற்றும் அதற்கான நடைமுறைகளை இந்த வேதம் விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகிறது.

## அதர்வண வேதம்:

இந்த வேதம் மற்ற வேதங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். மந்திர, தந்திரங்களை பற்றி விரிவாக இதில் விளக்கப்படுகிறது. இந்த வேதத்தில்தான், வேத கால சமூகத்தின் வாழ்க்கை முறை சுட்டிகாட்டப்படுகிறது.

## உப நிஷத்துக்கள்:

உப நிஷத் என்பதற்க்கான பொருள்"அருகில் அமர்வது "என்பதாம். குருவின் அருகில் அமர்ந்து சிஷ்யர்களால் கற்கப்பட்டவையே உப நிஷத்துகள் என்று அழைக்கப்படுகிறது. வேதத்தின் இறுதி பகுதியாக இவை அமைந்துள்ளதால் "வேதாந்தம் " என்றும் அழைக்கப்படுகிறது. அந்தம் என்ற சமஸ்கிருத சொல் இறுதி என்பதை குறிக்கும். உப நிஷத்துகள் இந்து மதத்தின் தத்துவ மையங்கள் என்றே கூறலாம். உப நிஷத்துகளில் அடங்கிய தத்துவங்களை மிக சிறந்த தத்துவங்களாக நமது நாட்டு அறிஞர்கள் மட்டும் அல்லாது பல வெளி நாட்டு அறிஞர்களும் ஏற்றுகொண்டுள்ளனர். வேதங்களின் காலத்தைப் போலவே உப நிஷத்துகள் காலமும் சரிவர கவனிக்கப்படவில்லை என்றாலும் கி.மு **800** மற்றும் **400** ஆம் ஆண்டுகளுக்கு இடைபட்ட

www.iyachamy.com

காலமாக இருக்கலாம் என பல ஆரய்சியாளர்களால் கருதப்படுகிறது. உப நிஷத்துக்கள் **108** க்கும் அதிகமான எண்ணிக்கையில் உள்ளதென்றாலும் கீழ்கண்ட உப நிஷத்துக்கள் அவற்றுள் முக்கியமானவையாக கருதப்படுகிறது.

சந்தோக்க்யா,கேனா,அயித்ரேயா,கதா,முண்டக ,தைத்ரியேக,ப்ரிஹடர்ண்யகா, , ஸ்வேடஸ்வதாரா,ஈஷா,ப்ரசனா,மண்டுக்யா,மைத்ரி போன்றவை சில முக்கியமான உப நிஷத்துக்கள் ஆகும்.

ப்ரிஹடர்ண்யகா உபநிஷத்தில் "உண்மை அற்றதிலிருந்து என்னை உண்மைக்கு அழைத்து செல்... இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து செல்... இறப்பிலிருந்து என்னை அழிவற்ற தன்மைக்கு அழைத்து செல் " என்று வேண்டப்படுகிறது. இதனை அடைய வேண்டுமானால் ஆன்மா அழிவற்றது அது அனைத்து உயிர்க்கும் ஒன்றுதான் என்பதை உணர்ந்து , உயிர்களிடத்தில் வேறுபாடு இல்லை என்ற ஞானம் வரப்பெறவேண்டும் என்பதைத்தான் உப நிஷத்துக்கள் வலியுறுத்துகின்றன. ஆண்டான், அடிமை, ஏழை, பணக்காரன், மனிதன், மிருகம் இப்படி எவ்வித வேறுபடுமின்றி அனைத்திலும் இருப்பது ஒரே ஆன்மாதான் என்பதை உணர்ந்து அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தவேண்டும் என்பதே உப நிஷத்துக்கள் காட்டும் வாழ்க்கை நெறியாகும். இத்தகைய ஒருமைப்பாடுதான் இந்து மத தத்துவ சாரம்சமும் கூட.. இந்து மதத்தின் ததுவங்களை விரிவாக அறிய நினைப்பவர்கள் நிச்சயமாக உப நிஷத்துக்களை கற்றாக வேண்டும்.

## ஆகமங்கள்

வேதத்திற்கு இணையாக கருதப்படுவை ஆகமங்களாகும்.ஆகமம் என்றால் வரப்பெற்றது என்பது பொருளாகும். இறைவனிடமிருந்து வரப்பெற்றது எனக் கொள்ளலாம். ஆகமம் மற்றும் தந்த்ரா என்பவை அறிவு களஞ்சியங்களாகும்.சைவம்,வைஷ்ணவம் மற்றும் சாக்தம் ஆகிய மூன்று வகை வழிபாடுகளில் ஆகமங்கள் உண்டு.சாக்தம் வழிபாட்டிற்கான ஆகமங்கள் தந்த்ரா என அழைக்கப்படுகிறது.

www.iyachamy.com

ஆகமங்களில் கீழ்கண்ட பொருள்கள் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**1)** வழிபடும் முறை **2)**யோகா **3)**யந்த்ரங்கள் **4)** மந்த்ரப் ப்ரயோகம் **5)** ஆலயம் மற்றும் நகர் வடிவமைத்தல **6)** சமூக பழக்க வழ்க்கங்கள் **7)** சமூகம் மற்றும் பொது விழாக்கள் **8)** புனித தலங்கள் **9)** பிரபஞ்சம், படைப்பு மற்றும் அழிப்பு தொடர்பான உண்மைகள் **10)** ஆன்ம தத்துவங்கள் **11)** ஆசார அனுஷ்டானங்கள் மற்றும் ஆன்மிகம் தொடர்பான இதர விஷய்ங்கள். ஆகமங்கள் மந்த்ரம், தந்த்ரம் மற்றும் யந்த்ரம் என மூன்று பகுதிகள் அடங்கியது.

மந்த்ரம் என்பது கடவுளின் ஒலி வடிவமாக கூறப்படுகிறது.யந்த்ரா என்பது தேவதைகளாக கருதப்படுகிறது.ஒவ்வொரு தேவதைகளுக்கான யந்த்ரங்கள் தயாரிக்கும் வழிவகைகள் பற்றியும் அவற்றில் மந்த்ர உச்சாடனம் மூலம் உருவேற்றி பலன் பெறும் முறைகள் பற்றி குறிப்பிடுகிறது.

தந்த்ரா என்பது மந்த்ர, யந்த்ரங்களை எவ்வாறு கையாளவேண்டும் என்பதை விளக்குகிறது. இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் மந்த்ர யந்த்ரங்கள் ஆன்மிக சக்தியின் ஒருங்கிணைப்பு மையம். தந்த்ரா என்பது அந்த மையத்திலிருந்து சாதகன் பலன் பெறுவதற்கான வழிகாட்டி என கொள்ளலாம்.

ஆகமங்கள் ஞானப் பாதை ,யோகப் பாதை,க்ரியப் பாதை மற்றும் காரியப் பாதை என நான்கு முக்கிய தத்துவங்களை விளக்குகிறது. ஞானப்பாதையில் பிரபஞ்சத்தின் அமைப்பு, உலகம் இயங்குவதற்க்கான காரணம் மற்றும் படைப்பு மற்றும் அழிப்பு ஆகியவற்றை விளக்குகிறது.சாதகன் முக்தி அடையும் வழிமுறைகளை விளக்கி சொல்கிறது. யோகப் பாதையில், ஞானப் பாதையில் சொல்லப்படும் ஆன்மிக தத்துவங்களை அனுபவ வாயிலாக அறிவதற்கான வழி முறைகளை சொல்கிறது.யோகம் மனிதனது மனத்தினையும்,சிந்தனை மற்றும் செயல்களை தூய்மை படுத்துவதற்க்கான வழி முறைகளை கற்று தருகிறது.குண்டலினி போன்ற யோக முறைகளும் இதில்தான் விரிவாக விளக்கப்படுகிறது.

www.iyachamy.com

க்ரியாப் பாதையில் ஆலயம் கட்டுதல், பூஜை முறைகள், யாத்திரைகள் , ஆன்மிக சட்டத்திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக விளக்குகிறது. காரியப் பாதை ஆசார அனுஷ்டானங்கள் அதற்கான விதி முறைகள் ஆகியவற்றை விளம்புகிறது.

சைவத்தில் காமிகா,வீரா, பரமேஸ்வரா, ஸ்வயம்புவா போன்று **28** ஆகமங்களும் ஏராளமான உப ஆகமங்களும் உள்ளன.சைவ ஆகமங்கள் சிவனை முழு முதல் கடவுளாக கொள்கின்றன.

வைஷ்ணவத்தில் ஈஸ்வர,அஹிர் புத்னியா,நாரதா போன்று ஏராளமான ஆகமங்கள் உண்டு.வைஷ்ணவ ஆகமங்கள் விஷ்ணுவை முழு முதல் கடவுளாக கொள்கின்றன.சாக்தத்தில் குல வர்ஷா,ருத்ர மாலா, பிரபத் மாலா போன்று **64** ஆகமங்கள் உண்டு. இந்த ஆகமங்கள் சிவ சக்தி உரையாடல்களாய் வடிவமைக்கப்பட்டு உள்ளது. சாக்த ஆகமங்கள் சக்தியை முழு முதல் கடவுளாக கொள்கின்றன..

## இதிகாசங்கள்:

இந்து மதத்தின் இரண்டு கண்களாய் விளங்குவது இராமாயணமும், மஹா பாரதமும். ராம அவதாரத்தையும், கிருஷ்ண அவதாரத்தையும் சுவை பட கூறும் இந்த இரண்டு நூல்களைப் பற்றியும் அனைவரும் அறிவிர்கள் என்பதால் இவற்றைப் பற்றி இங்கு விரிவாக விளக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு இந்துவும் கட்டாயம் படிக்க வேண்டியவை இந்த இரண்டு இதிகாசங்களும் என்பதை மட்டும் இங்கு வலியுறுத்துவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்

## தர்ம சாஸ்த்ரா

ஸ்ம்ருதி வகை நூலகளில் தர்ம சாஸ்த்ரா என்று அழைக்கப்படும் சட்ட நூல்கள் முக்கியமானவையாகும். தனி நபர் மற்றும் சமுக ஒழுக்கங்களை வலியுறுத்துவதுதான் இந்த தர்ம சாஸ்த்ராக்களின் அடிப்படையாகும். ஒவ்வொரு யுகத்திலும், இம்மாதிரியான சட்ட நூல்களை தருவதற்காக சிலர் பிறப்பிக்கப்படுவதாகவும், அவர்கள் நடைமுறையில் உள்ள சட்டங்களை ஒழுங்கு படுத்துவதுடன், தேவையற்றவற்றை நீக்கியும், தேவையானவற்றை சேர்த்தும்,

www.iyachamy.com

வேதங்களின் அடிப்படையில் சட்ட நூலகளை உருவாக்குவார்கள் என்று இந்து மதம் நம்புகிறது. அவ்வாறு இயற்றப்பட்ட சட்ட நூல்களில் மனு ஸ்ம்ருதி, யஜ்ன ஸ்ம்ருதி மற்றும் பராசர ஸ்ம்ருதி ஆகியவை முக்கியமானதாக கருதப்படுகிறது. மனு ஸ்ம்ருதி சத்ய யுகத்திற்காகவும், யஜ்ன ஸ்ம்ருதி த்ரேதா யுகத்திற்காகவும்,சாங்கா ஸ்ம்ருதி த்வபர யுகத்திற்காகவும், பராசர ஸ்ம்ருதி கலி யுகத்திற்காகவும் எழுதப்பட்டதாக கூறப்படுகிறது. மனு ஸ்ம்ருதி நூல்தான் இந்து மத நூல்களிலேயே அதிகமான விமர்சன்ங்களுக்கு ஆளாகும் நூல் என்று சொல்லலாம்.மனுஸ்ம்ருதி **12** அத்தியாயங்களையும் **2694** ஸ்லொகங்களையும் கொண்டது. அக்காரா, வ்யவஹாரா, ப்ராயசித்தா, ராஜ தர்மா என்று நான்கு காண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.பிரம்மாவால், பிருகு முனி உள்ளிட்ட முனிவர்களுக்கு அருளப்பட்டதாக கருதப்படுகிறது. வர்ணாஸ்ரம முறையை தீவீரமாக ஆதரிப்பதால் பலத்த விமர்சன்ங்களுக்கு உட்படுத்தப் படுகிறது.

மனு தர்மத்தின் வழியிலேயே ஆட்சி நடத்தப் படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதால், பிராமணர்களை தவிர இதர மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டதாக குற்றச்சாட்டுகளும் எழுப்பபடுகிறது.ஆனால் அந்த அளவிற்கு மனு தர்மம் அதிகாரம் செலுத்தியதா இல்லையா என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகிறது. சைவமும் வைணவமும் தழைத்தோங்கிய தெற்கு மற்றும் வட இந்தியாவில் மனு தர்மத்தை முன் நிறுத்தி ஆட்சிகள் நடைப் பெற்றதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.மதுராவைப் பற்றி எழுதிய மெகஸ்தனிஸோ அல்லது அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியரோ மனு ஸ்ம்ருதி பற்றி தங்கள் நூல்களில் எதுவும் குறிப்படவில்லை என்பது கவனிக்கதக்கது.

**18** ஆம் நூற்றாண்டில் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் மனு ஸ்ம்ருதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட பின்புதான், மனு ஸ்ம்ருதி பற்றி பரவலாக அறியபிபட்டது. இது பற்றி அவாரி என்னும் மேல் நாட்டு ஆய்வாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

www.iyachamy.com

"மனு தர்மம் இந்தியா முழுவது கடை பிடிக்கப்பட்டதாக கூறப்படுவது தவறு.வில்லியம் ஜோன்ஸ் மனுதர்மத்தை பற்றியும் அதன் ஆளுமையை பற்றியும் மிகை படுத்தி எழுதிவிட்டார்"

இந்தியாவின் தலித் அறிஞர்களும் பெண்ணுரிமையாளர்களும் மனு தர்மத்தை கடுமையாக எதிர்த்த போதும்,சில மேல் நாட்டு அறிஞர்கள் அதனை வெகுவாக புகழ்கின்றனர். ஜெர்மானிய அறிஞர் ப்ரெட்ரிக் நீச்சே என்பவர் " மனு ஸ்ம்ருதி மிக சிறந்த ஆன்மிக மற்றும் சமுக நூல்" என்று குறிப்பிடுகிறார். ஆனால் டாக்டர் அம்பெத்கர் அவர்கள் " பௌத்த மதம் இந்தியாவில் வளர அரம்பித்தபின், தங்களை காத்துகொள்ள பிராமணர்களால் வரையப் பட்டதுதான் மனு ஸ்ம்ருதி" என்று குறிப்பிடுகிறார். சுவாமி தயானந்த சரஸ்வதி,பக்த வேதாந்த சுவாமி, அன்னி பெஸண்ட் அம்மையார், பண்டுரங்க சாஸ்திரி டாக்டர் ராதகிருஷ்ணன் போன்ற அறிஞர்கள் மனு ஸ்ம்ருதியை வெகுவாக பாராட்டுகிறார்கள். மனு ஸ்ம்ருதியை பொருத்தவரை வர்ணாஸ்ரமத்தை வலியுறுத்தியே வரைய பட்டுள்ளது. சில ஸ்லோகங்களில் பெண்களை உயர்வாகவும் சில ஸ்லோகங்களில் அவர்களைத் தாழ்வாகவும் சித்தரிக்கிறது.சில ஸ்லோகங்களில் பெண்கள் வேதம் படிக்க கூடாது என்றும் வேறு சில ஸ்லோகங்களில் படிக்கலாம் என்றும் காணப்படுகிறது. இவ்வாறான் முரண்பாடுகளை காணும்போது ஒவ்வொரு கால கட்டத்திலும் இந்த நூல் பல சிதைவுகளுக்கு ஆளாகி இருப்பதை அறிய முடிகிறது. பல விமர்சனங்கள் எழுப்பப் பட்டாலும் , பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு அப்பொழுதிருந்த சூழ் நிலைக்கு ஏற்றவாறு எழுதப்பட்ட ஒரு நூல் தற்பொழுதைய சூழ் நிலைக்கு அப்படியே பொருந்தி வரவேண்டும் என்பது இயலாத காரியம். எனவே அது எழுதப்பட்ட சூழ் நிலை மற்றும் காலம் இவற்றை கொண்டு பார்க்கும் பொழுது தற்காலத்திற்கும் ஏற்ற வகையில் காணப்படும் பல விஷயங்களும் எழுதபட்டிருக்கும் இந்த நூல் ஒரு அற்புதமான நூல் என்றே கூறலாம்.

## புராணங்கள்:

*புராணம்* என்ற சொல், *கடந்த காலம்* என்று பொருள்படும். கடந்தகாலத்துக்குரிய பல்வேறு நிகழ்வுகளைப் பேசுவதாலேயே இப்பெயர். பண்டைய மற்றும் இடைக்கால இந்து சமய வழக்கங்கள்,

www.iyachamy.com

தொன்மங்கள், வரலாறு, புவியியல், அரசவம்சங்கள், அண்டவியல் மற்றும் இலக்கியம் குறித்து அறிஞர்களுக்கும் பாமரர்களுக்கும் விரிவான தகவல்கள் கொண்ட கலைக்களஞ்சியங்களே புராணங்கள்.

புராணங்களின் நோக்கம் மற்றும் நிகழ்காலத் தேவை குறித்து இருவகை பார்வைகள் உள்ளன. வேதங்களில் உள்ள உயர்ந்த தத்துவங்களை கதைகளைக் கொண்டும் சம்பவங்களைக் கொண்டும் விளக்குவதுதான் புராணங்களின் ஒரே நோக்கம் என்று சொல்பவர்கள் உண்டு. புராணங்கள் பாமரர்களுக்கே உரியன என்று இவர்கள் கருதுகின்றனர்.

இப்பார்வைக்கு மாறாய், பண்டிதர்கள் மற்றும் பாமரர்கள் என்று அனைவருக்கும் உரிய தனி நூல்களே புராணங்கள் என்று சொல்பவர்கள் உண்டு. அண்டத்தில் உள்ள வெவ்வேறு உலகங்கள் பற்றிய நுண்விவரங்கள் கொண்ட விளக்கங்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்திய துணைக்கண்டத்தில் உள்ள செடியினங்கள் மற்றும் உயிரினங்கள் குறித்த தகவல்கள், பல நூறாண்டுகளாய் தொடரும் பல்வேறு அரசவம்சங்கள் குறித்த வரலாற்றுப் பதிவுகள் என்று பலவும் புராணங்களில் உண்டு. இந்திய அறிவுத்துறை ஆய்வாளர்கள், தொல்லியலாளர்கள், தாவரவியலாளர்கள், வரலாற்றாய்வாளர்கள் மற்றும் பலருக்கு புராணங்களில் உள்ள தகவல்கள் மிக முக்கியமான வழிகாட்டிகளாக இருக்கின்றன.

புராணங்கள், கடந்தகால சரித்திர நிகழ்வுகளை உள்ளபடியே விவரிக்கும் ஆவணங்கள் என்று நம்புபவர்களும் உள்ளனர்– கடந்தகால நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதாக மத்ஸ்ய புராணத்தில் ஒரு ஸ்லோகம் இருந்தாலும்கூட இந்த நம்பிக்கை ஆதாரபூர்வமானது என்பதை நிறுவுவது மிகக் கடினம்.

மகாபுராணங்கள், உபபுராணங்கள் என்று இருவகையில் புராணங்கள் பகுக்கப்படுகின்றன. பதினெட்டு மகாபுராணங்களும் பதினெட்டு உபபுராணங்களும் உண்டு. ஒவ்வொரு புராணமும் ஒவ்வொரு தெய்வத்தைப் பிரதானப்படுத்துகிறது. பதினெட்டு மகாபுராணங்களையும் தொகுத்தால் மொத்தம் **4,00,000** கிரந்தங்கள் அல்லது செய்யுள்கள் இருக்கும்.

www.iyachamy.com

இந்த எண்ணிக்கை குறித்து சுவையான ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. பதினெட்டு புராணங்களும் வேத வியாசரால் தனியாய் எழுதப்படவில்லை. முதலில் ஒரு கோடி கிரந்தங்கள் கொண்ட ஒரே ஒரு புராணம்தான் இருந்தது. துவாபர யுக மக்கள் அது அத்தனையையும் அறிந்துகொள்ள சிரமப்படுவதைப் பார்த்த இறைவன் வேத வியாசரிடம் அவற்றை பதினெட்டு பகுதிகளாக நான்கு லட்சம் கிரந்தங்களில் சுருக்கச் சொன்னார். இந்த பதினெட்டு பகுதிகளும் பதினெட்டு புராணங்களாக அறியப்படுகின்றன..

இது தவிர பிற்காலத்தில் வேறொரு தனி பகுப்பும் செய்யப்பட்டது. அதன்படி பதினெட்டு மகாபுராணங்களும் ஆறு புராணங்களைக் கொண்ட மூன்று தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டன. இயற்கையில் உள்ள சத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுக்கு ஏற்ப இந்த மூன்று தொகுதிகளும் அமைக்கப்பட்டன.

நான்கு புருஷார்த்தங்களான தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகியவற்றை வலியுறுத்தினாலும் புராணங்கள் ஐந்து விஷயங்களை முதன்மையாய் பேசுகின்றன.

1. சர்க்கம் அல்லது ஆதார சிருஷ்டி
2. பிரதி– சர்க்கம் – இரண்டாம் நிலை சிருஷ்டியும் பிரளயமும்
3. வம்சம் – தெய்வங்கள் மற்றும் அரசர்களின் வம்சாவளி
4. மன்வந்தரம் – மனுவின் ஆட்சிக் காலங்கள்
5. வம்சானுசரிதம் – அரச குடும்பங்களின் வரலாறு

வேதங்களில் மிகச் சுருக்கமாகவும் மறையீடாகவும் கூறப்பட்டுள்ள தத்துவங்களை விரிவாக எடுத்துரைப்பதுதான் புராணங்களின் மிக முக்கியமான நோக்கம். வேதம் பயில்பவர்கள் உயர்ந்த உண்மைகளை எளிதில் புரிந்து கொண்டு வாழ்நாள் முழுதும் நினைவில் கொள்ள புராணங்கள் உதவுகின்றன.

வேதங்களிலும் உபநிடதங்களிலும் உள்ள தத்துவங்களின் உண்மையான உள்ளர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாதபோது புராணங்கள் அவற்றின் விளக்கமாய் இருக்கின்றன– வரலாற்று

www.iyachamy.com

நிகழ்ச்சிகள் மற்றும் கதைகளைக் கொண்டு தத்துவ விளக்கத்தை புராணங்கள் அளிக்கின்றன. உதாரணத்துக்கு, *'சத்யம் வத'*, உண்மையே பேசு என்கிறது வேதம். புராணங்களும் இதிகாசங்களும் அரிச்சந்திரன் கதை போன்றவற்றைக் கொண்டு ரத்தினச் சுருக்கமாய் உள்ள இந்த வேதவாக்கின் உட்பொருளை முழுமையாய் உணர்த்துகின்றன.

பதினெட்டு மகாபுராணங்கள் மற்றும் பதினெட்டு உபபுராணங்கள் தவிர, ஸ்தல புராணங்களும் உண்டு- ஒரு குறிப்பிட்ட தலத்தின் பெருமையை விவரிக்கும் வரலாறுகள் இவை. பல்வேறு தெய்வபக்தர்களின் கதையை விவரிக்கும் சிறு புராணங்களும் உண்டு. இவற்றில் சில நம்மிடையே பரவலாக அறியப்பட்டுள்ள ஸ்லோகங்கள் மற்றும் ஸ்தோத்திரங்களில் பயிலப்படுகின்றன. இந்த ஸ்லோகங்களும் ஸ்தோத்திரங்களும் மகாபுராணங்கள் மற்றும் உபபுராணங்களில் உள்ளன, இவை தவிர வேறு சில தனிநூல்களாகவும் உண்டு.

<u>பதினெட்டு மகாபுராணங்கள் இவை-</u>

***1)*** *பிரம்ம புராணம்*

***2)*** *விஷ்ணு புராணம்*

***3)*** *பத்ம புராணம்*

***4)*** *சிவ புராணம்*

***5)*** *ஸ்ரீமத் பாகவத மகாபுராணம்*

***6)*** *நாரத புராணம்*

***7)*** *மார்க்கண்டேய புராணம்*

***8)*** *அக்னி புராணம்*

***9)*** *பவிஷ்ய புராணம்*

***10)*** *பிரம்ம வைவர்த்த புராணம்*

www.iyachamy.com

*11) லிங்க புராணம்*

*12) வராக புராணம்*

*13) ஸ்கந்த மகாபுராணம்*

*14) விமான புராணம்*

*15) கூர்ம புராணம்*

*16) மத்ஸ்ய புராணம்*

*17) கருட புராணம்*

*18) பிரம்மாண்ட புராணம்*

## பகவத் கீதை

பகவத் கீதை மஹா பாரதத்தில் பீஷ்ம பர்வத அத்தியாயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்துக்களின் முதன்மையான புனித நூலாக ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்குமிடையே நடந்த குருஷேத்திர யுத்ததின் போது , பகவான் ஸ்ரீ க்ருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டதே பகவத் கீதை ஆகும். எதிரில் நிற்கும் தன் சகோதரர்களை எவ்வாறு எதிர்த்துப் போரிடுவது என அர்ச்சுனன் குழம்பியபோது அவனையும் அவன் வாயிலாக மனித குலத்தையும் தெளிவிக்கவும் ஸ்ரீ கிருஷ்ணரால் உபதேசிக்கப்பட்டது பகவத் கீதையாகும். இது **18** அத்தியாயங்களையும் **700** ஸ்லோகங்களையும் உள்ளடக்கியது.பகவத் கீதை, வேதங்கள் மற்றும் உபனிஷத்களின் சாராம்சம் என்று கூட சொல்லலாம். கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், தர்மா, காலம் இவற்றைப் பற்றி பகவத் கீதை விரிவாகப் பேசுகிறது. ஆன்மா அழிவற்றது என்பதைப் பகவத் கீதை எடுத்து இயம்புகிறது. இறப்பு என்பது உடலுக்குதானே தவிர ஆன்மாவிற்க்கு அல்ல. மனிதர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை ஒழுக்கமுடன் ஆற்றவேண்டும். கடமையை கால நேரம் பாராமலும் பலனை எதிர் நோக்காது செய்யவேண்டும்.அவ்வாறான வாழ்க்கை அமையும்போதுதான், வாழ்க்கை நிலையானதாகவும்,

www.iyachamy.com

மகிழ்வானதாகவும் அமையும். இறுதியில் ஞானமும் பிறக்கும் என பகவத் கீதை வலியுறுத்துகிறது.இந்த உலகில் அதர்மம் தலை தூக்கி தர்மம் அழியும் நிலைக்கு ஆளாகும்போதெல்லாம் இறைவன் அவதாரம் நிகழ்ந்து நல்லவர்கள் காப்பாற்றப்படுவார்கள் எனவும் பகருகிற்து

**இந்து சமயம் அறிமுகம் என்பதில் முதல் இரண்டு தலைப்புகளுக்கு மட்டும் இங்கே தொகுக்கப்பட்டுள்ளது. மீதம் நேரம் கிடைக்கும்போது தொகுத்து வெளியிடுகிறேன்.**

www.iyachamy.com